பேசும் படம்

மே 1954 ... 12 அணா.

44 ஆண்டுகளாக புகழ் பெற்ற

மேரிராம் பற்பொடி

சகலவித தந்த நோய்களையும் அறவே ஒழிக்க வைத்திய முறைப்படி தயாரிக்கப் படுகிறது

தயாரிப்பவர்கள்:

ஆர். எஸ். பதி அண்டு கோ.,
(REGD.)
தபால் பெட்டி நிர். 11 * மதுரை.



பிரியோகஸ்தர்கள் : சென்னை நகரம், வட தென் ஆற்காடு, செங்கல்பட்டு, சித்தூர் ஜில்லாக்களுக்கு—ராஜா பிலிம்ஸ், 11–A, மவுண்ட் ரோடு, சென்னை–2.
மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி—எவரெஸ்ட் பிக்சர்ஸ், மதுரை.
திருச்சி, தஞ்சாவூர்—ராணி பிலிம்ஸ், திருச்சி.
எப். எம். எஸ். பல்வந்த்சிங் & கம்பெனி, பம்பாய்.
இதர இடங்களுக்கு : எம். ஏ. வி. பிக்சர்ஸ், C/o சென்ட்ரல் ஸ்டுடியோஸ், கோயம்புத்தூர்.

JC
N21k,N42:P
N54.12.9

விளம்பரதாரர்களே

நீங்கள் விளம்பரம் தரும் பத்திரிகைபற்றிய

உண்மையை உணருங்கள் !

ஒரு விளம்பரதாரர் என்ற முறையில் நீங்கள் செலவழிக்கும் ஒவ்வொரு ரூபாய்க்கும் எவ்வளவு வாசகர்களைப் பெறுகிறீர்கள் என்பதை நீங்கள் அறிய வேண்டியது மிக அவசியம்.

175 பிரதான பத்திரிகைகளுக்கு மேலாக இப்போது சர்குலேஷன் ஆடிட் பீரோவில் அங்கம் வகிக்கின்றன—இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளில் 13 பாஷைகளில் தேசிய விளம்பரத் திட்டத்தை பரிபூரண அம்சத்தில் நிறைவேற்றப் போதுமானது. இவைகளின், பத்திரிகை விற்பனைக் கணக்கு எல்லா அம்சத்திலும் இந்த A. B. C. யின் ஆடிட்டர்களால் சரி பார்க்கப்பட்டு ABC மெம்பர்களுக்கு அரை வருஷ ரகசிய சர்டிபிகேட்டுகள் அனுப்பப்படுகின்றன.

நீங்கள் விளம்பரம் செய்யும் பத்திரிகையைப்பற்றிய உண்மையை நீங்கள் அறியவிரும்பினால் இன்றே A. B. C. மெம்பர் ஆவதற்கு விண்ணப்பிக்கவும்.

89680

ஆடிட் பீரோ ஆப் சர்குலேஷன்ஸ் லிட்.,

பாரத்ஹவுஸ், அப்போலோ தெரு, கோட்டை, பம்பாய்.

கீழ்க்கண்ட விளம்பரதாரர்களும், விளம்பர ஏஜெண்டுகளும் ஏற்கனவே A. B. C. யின் மெம்பர்களாக இருக்கிறார்கள்.

விளம்பரதாரர்கள்

அல்லைடு போட்டோகிராபிக்ஸ் லி-ட்., இ.எம் ஆல்காக் & மொஹோட்டா லி-ட்., அடலாண்டிக் [ஈஸ்ட்] லி-ட்., ஆயுர்வேதாஸ்ரமம் பார்மஸி லி-ட்., பால்மர் லாரி & கோ லி-ட்., பம்பாய் மியூச்சுவல் லைப் அஷ்யூரன்ஸ் ஸொஸைடி லி-ட்., பூட்ஸ் ப்யூர் ட்ரக் கோ [இந்தியா] லி-ட்., பர்மா ஷெல் ஆயில் ஸ்டோரேஜ் & டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் கம்பெனி ஆப் இந்தியா லி-ட்., கால்டெக்ஸ் [இந்தியா] லி-ட., ஸென்ட்ரல் டீ போர்டு, காரன் ப்ராடெக்ட்ஸ் கோ [இந்தியா] லி-ட., டன்லப் ரப்பர் கோ [இந்தியா] லி-ட்., கிளாக்ஸோ லாபரட்டரீஸ் [இந்தியா] லி-ட்., கோத்ரேஜ் & பாய்ஸ் மானுபாக்சரிங் கோ லி-ட்., இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் [இந்தியா] லி-ட்., இம்பீரியல டுபாக்கோ கோ ஆப் [இந்தியா] லி-ட்., இந்தியா டயர் & ரப்பர் கோ [இந்தியா] லி-ட்., லீவர் பிரதர்ஸ [இந்தியா] லி-ட்., லீவர் பிரதர்ஸ் ஸிலோன் லி-ட்., லிப்டன் லி-ட்., ஜே. எல. மோரிஸன், ஸன அண்ட் ஜோன்ஸ் [இந்தியா] லி-ட், ஸி & ஈ மோர்டன் [இந்தியா] லி-ட்., முல்லர் & பிப்ஸ் [இந்தியா] லி-ட, நாஷனல் கார்பன் கோ [இந்தியா] லி-ட்., பார்லி பிராடெக்டஸ் மானுபாக்சரிங் கோ லி-ட்., பஞ்சாபி சந்து ஹல்வாய் ஸேல்ஸ், ப்ராடக்ட்ஸ் ஓவர்ஸிஸ் லி-ட்., ஷாலிமர் பெயிண்ட் கலர் & வார்னிஷ் கம்பெனி லி-ட், டாடா ஆயில் மில்ஸ் லி-ட., வால்கார்ட் பிரதர்ஸ்.

பிரசுரித்தவர்கள் : "பேசும் படம்" :

ABCயின் தணிக்கை பெற்ற விநியோகம் கொண்ட பத்திரிகை.

9588

படம் 12

காட்சி 9

பேசும் படம்

★ மே 1954 ★

1.	பேசும் படம் பேசுகிறது	4
2.	ஸ்டூடியோ விஜயம்	8
3.	நம்பியார்-ராஜசுலோசனு மூவர்ணப்படம்	18
4.	ஏ. பி. நாகராஜன்-பி. எஸ். சரோஜா (மூவர்ணப்படம்)	19
5.	'பிரம்மச்சாரி' ராமச்சந்திரன் (வாழ்க்கைச் சித்திரம்)	20
6.	கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி (திரைக்கதை, வசனம்)	31
7.	'பெண்' - படக்காட்சிகள்	37
8.	செய்திச் சுருள்	45
9.	கண்ணதாசன்-வசனகர்த்தா	52
10	இம்மாத நக்ஷத்திரம்	56
11.	எஸ். கே. மொஹிதீன்	58
12.	ஏ. எம். ராஜா-பின்னணிப் பாடகர்	61
13.	கேள்வி—பதில்	64
14.	நான் ரஸித்த காட்சி	69
15.	தபால் பெட்டி	75

PESUM PADAM, Tamil Monthly Magazine: Printed and Published by T. V. Ramanath, at RAMANATH PRESS, 188, Royapettah High Road, Madras - 14. (Phone: 86001) Proprietors: RAMANATH PUBLICATIONS. Managing Editor: T. V. Ramanath. Sole Agents for Ceylon: Mohan & Co., Ltd., 66, First Cross Street, Colombo. Sole Agent for Malaya: P. Sivaguru, 27, Scott Road, Kuala Lumpur and 8, China Street, Penang.

Editorial & Publication Offices:

188, Royapettah High Road, Madras - 14

MEMBER: AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.

'பேசும் படம்' பேசுகிறது

வாழ்க தமிழ் நாடு! வளர்க தமிழ்ப் பண்பாடு!

தென்னிந்தியாவில் சினிமாப் படத்தொழில் ஆரம்பித்த காலத்தில—பேசும்படமே தமிழர்களுக்கு ஒரு புதுமையாக இருந்த காலத்தில்—எந்தப்படம் வந்தாலும் ஏராளமான வசூலாகி வந்தது. சினிமாப் படக் காட்சிகள் மக்களுக்குப் பேராச்சரியமான ஒரு புதுமையாக இருந்தது, என்பதுடன் அவர்களின் உள்ளத்தின் ஆழத்திலே பதிந்திருந்த தெய்வீகமான புராண, இதிகாசக் கதைகளே படமாக வெளி வந்தன என்பதும் குறிப்பிடத்தக்க காரணமாகும்.

இடையிலே சற்றே மவுசு பெற்றன சமூகப் படங்கள் சில. முடிவிலே அவைகளும் சலித்துப்போய் ஒன்றன்பின் ஒன்ருக, டப்பாவிலே சுருண்டு படுத்தன. படம் பிடிப்பது ஒரு லாபகரமான தொழிலாக இருந்தது போய், குதிரைப் பந்தயமாக மாறிவிட்டது. சமீப வருஷங்களில், 'தான் பணம் கட்டிய குதிரை, வெற்றிகரமாக ஓடுமா ஓடாதா' என்று சூதாடியவர் பயப்படுவதுபோல, தாம் முதலீடு செய்த படம் ஓடுமா ஓடாதா என்று பட முதலாளிகள் திண்டாடித் தவிக்க வேண்டி வந்தது.

இந்தப் பயங்கரமான நிலையிலே வெளிவந்தது ஜெமினியின் மகத்தான படம் 'ஔவையார்'. தமிழர்களின்—தமிழ் நாட்டின்—பண்டைய பண்பாட்டிற்கும் கலாச்சாரத்திற்கும் எடுத்துக் காட்டாக விளங்கி அமோக வெற்றியைத் தந்து, இத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு ஆறுதலையும் தேறுதலையும் கொடுத்தது அது. படத்தயாரிப்பாளர்களின் நெஞ்சிலே சற்றே நம்பிக்கை துளிர்த்தது.

இந்த நம்பிக்கைக்கு மேலும் உரமூட்டுவது போல வெளிவந்தது மனோகர் பிக்சர்ஸாரின் 'மனோகரா'. மகத்தான வெற்றியும் கண்டது. படத்தயாரிப்பாளரும், ரஸிகரும் இதரரும் மனச்சோர்வு நீங்கி அகமகிழ்ச்சி யெய்தினர்.

ஔவையார், மனோகரா ஆகிய படங்களின் மகத்தான வெற்றிக்கு அடிப்படையான காரணம் ஒன்றுதான். தமிழ்நாட்டு மக்கள் ஒழுக்கத்திலே உயர்ந்தவர்கள். பண்பாட்டிலே சிறந்தவர்கள். கலாச்சாரத்திலே மேம்பட்டவர்கள். இதைத்தான் ஔவையார், மனோகரா படங்களின் வெற்றி நிரூபிக்கிறது.

ஒழுக்கத்திற்கு இழுக்கான கதையை நம்மவர்கள் ஏற்கமாட்டார்கள். கருத்துக்குப் புறம்பான கற்பனைகளைத் தமிழ் மக்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். பெண்மையைத் தாழ்த்தி, தாய்க்குலத்தை அவமதித்து, கற்பின் மதிப்பைக் காசுக்கு விற்க முயலும் கருத்துக்களைப் புகுத்திய படங்கள் ஒரு காட்சிகூட ஓடினதில்லை நம் நாட்டிலே.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக—தொன்றுதொட்டு—தமிழ் மக்களின் உள்ளத்திலும் ரத்தத்திலும் ஊடுருவி உரம் பெற்ற பண்பாடும் கலாச்சாரமும் மிளிர்கின்றன, மனோகரா படத்திலே. பெண்மையின் பெருமையும தாய்மையின் சிறப்பும் தான் மனோகரா கதையின் ஜீவன். இதைக் கேந்திரமாகக் கொண்டு முத்தமிழும் நாத்தமிடும் நவரஸங்களுடன் அமைக்கப்பட்டது இந்த நாடகம். புராண, இதிகாச நாடகங்களுக்கும் படங்களுக்கும் குறைவற்ற வசூல் இருப்பதுபோல

இன்றளவும் மனோகரா நாடகத்திற்கு மட்டும் நிரந்தரமான ஆதரவு இருந்து வருவது குறிப்பிடத் தக்கது.

மனோகரா கதை சரித்திர நிகழ்ச்சி அல்ல. ராஜாக்கதை போன்ற கேவலம் ஒரு கற்பனை. ஆனாலும் அந்த நாடகம் வெற்றிகரமாக நடந்து வருவதற்கு நாம் மேலே சொன்னவைதான் காரணங்கள்,

மனோகர் பிக்சர்ஸார் ஏராளமான பணத்தைச் செலவிட்டு மனோகராவைப் படமாகத் தயாரித்து மகத்தான வெற்றி கண்டார்கள். நாடகப் பேராசிரியர் ப. சம்பந்தமுதலியாரின் இந்த நீதிக்கதை, நடக்காத ஒரு கற்பனையாக இருந்தாலும்கூட, இதில் வரும் சம்பவங்கள், நம் கண்முன்னே நடைபெறுவது போன்ற பிரமையை உண்டாக்குகின்றன.

வீரத்திற்கு உறைவிடமானவன் மனோகரன். தவறு கண்ட இடத்தில் தயங்காது தண்டிப்பவன் அவன். யாரிடமும அவனுககுப் பயம் கிடையாது. குள்ள நரிக்கூட்டத்தின் குரல்வளையைத் திருக விரும்பும் அவனைத் தடுக்க ஒருத்தியால்தான் முடிகிறது—அவள் யார்?

அவள்தான் பத்மாவதி. உத்தமி. மாலையிட்ட மன்னன் மாதொருத்தியின் மயக்கத்திலே தன்னை ஒதுக்கியும்கூட, அவள் அந்த மன்னனுக்காகவே—அவன் மனம கோணாமல் நடக்கவே – வாழ்கிறாள். அவளது வீரமகன் புலியெனப் பாய்கிறான். இளங்கன்று பயமறியாது என்பது போலத் துள்ளுகிறான். அவன் தடந்தோள்களைத் தட்டிக்கொடுத்து, அவன் வெஞ்சினத்தை அடக்குகிறாள் அவள். யாரிடமும் பயப்படாத அவன் அவள் ஒருத்திக்குத்தான் கட்டுப்படுகிறான். அவள் சொன்னால் போதும், அவன் எது செய்யவும் துணிந்து விடுவான். கற்புக்கும் வீரத்திற்கும் ஆதர்சமாக விளங்கிய அவர்களுக்கெதிரே, வஞ்சகம் கொஞ்சகாலம் வெற்றி பெறுகிறது. நல்லது இருக்கும் போது கெட்டதும் இருந்தால்தானே நல்லதின் பெருமை வெளிப்படும்? பத்மாவதி-மனோ

தயாராகிறது !

பேசும் படம்
மலர் 1954

விலை ரூ. 5. தபாலில் ரூ. 5-8

★ கண்ணைப் பறிக்கும் முழுப்பக்க மூவர்ணப் படங்கள்

★ நக்ஷத்திரங்களின் கட்டுரைகள்

★ 1953 வருஷத்திய பட விமர்சனங்கள்

★ 'பேசும் படம்' கௌரவ ஜாபிதா

★ 1953 வருஷத்திய தினக் குறிப்பு. வழக்கமான பல அம்சங்களுடன் ஏராளமான புதிய விசேஷ அம்சங்களும் உள்ளன.

மே 15-ம் தேதியன்று வெளிவருகிறது.

பப்ளிகேஷன்ஸ்
சென்னை – 14.

நல்ல காரியம்

தேசபக்தி, தொண்டு, தியாகம் முதலிய சொற்களுக்குத் தமிழ் அகராதியிலே பொருள் தரப்படும் வரை, பரலி சு. நெல்லையப்பர் என்ற பெயரைக் கேட்டதும் நாட்டுப் பற்று உடையவர்களின் முகமெல்லாம் மகிழ்ச்சியால் மலரும். இதயமெல்லாம் நன்றியுணர்ச்சியால் நிறைவு பெறும்.

தமிழ் மொழியில் புது இரத்தம் பாய்ச்சி, தமிழகத்துக்குத் தன்னம்பிக்கை ஊட்டி, தமிழினத்தைத் தருக்கியெழச் செய்தார்கள் அல்லவா, வ. உ. சிதம்பரம் பிள்ளை, சி. சுப்பிரமணிய பாரதி, வ. வே. சு. ஐயர் முதலியோர்? அந்தப் பழம்பெரும் பரம்பரையைச் சேர்ந்தவர் நெல்லையப்பர்.

நெல்லையப்பர் சிதம்பரனாருக்குச் சீடராக விளங்கினார் என்றால் பாரதியாருக்குத் தோழனாகவும் துணைவனாகவும் திகழ்ந்தார் என்று கூறலாம்.

லோகோபகாரி முதலிய பத்திரிகைகள் மூலம் தமிழுக்குத் தொண்டு செய்தவர் நெல்லையப்பர். வயதில் அரை நூற்றாண்டை அடைந்தபோது, தேச விடுதலைக்காக இரண்டாம் முறை சிறை சென்றார்.

நெல்லையப்பருக்கு இப்போது அறுபத்தைந்து வயது ஆகிறது. வறுமைக்கும் மூதுமைக்கும் இடையே சிக்கிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

ஆகவே, மொழிக்கும் நாட்டுக்கும் அவர் செய்திருக்கும் தொண்டுக்குத் தமிழரின நன்றிப் பரிசாக ஒருநிதி திரட்டுவதென்று சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கத்தில்முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஒவ்வொருவரும் தம்மாலான உதவியைச் செய்து, நெல்லையப்பரையும் அவர் மூலம் தமிழையும் கௌரவப் படுத்தவேண்டும்.

நெல்லையப்பர் நிதிக்குப் பணம் அனுப்புவோர் கீ[illegible] விலாசத்துக்கு அ[illegible]மலும் உ

ஆசிரியர், குமுதம்

P. B. 1008, சென்னை-10.

கரனுக்கு எதிரே வசந்தசேனை இருக்கிறாள். எத்தனுக்கும் எத்தன் உண்டு. வசந்தசேனைக்கு கேசரிவர்மன் இருக்கிறான். இப்படி பல தரப்பட்ட கதா பாத்திரங்களைச் சிருஷ்டித்து கற்பின் பெருமையை விளக்கியிருக்கிறார் கதாசிரியர். நல்லதை விளக்க அவர் கையாண்டிருக்கும் கதாபாத்திரங்கள்—வசந்தன் முதல் உக்ரசேனன் வரை—ஒவ்வொன்றும் முக்கியமானவை.

கதையைத் திரைக்கு ஏற்றபடி அமைத்து அற்புதமாக வசனமெழுதியிருக்கிறார் மு. கருணாநிதி. மனோகரா கதையின் பெருமைக்கு அடுத்தபடியாக அதன் வெற்றிக்குக் காரணமாயிருப்பது கருணாநிதியின் வசனம்தான். வீரனும் இளைஞனுமான மனோகரனுக்கு அவ்வுணர்ச்சி யூட்டும் வகையிலே வசனத்தை அமைத்திருக்கும் வசனகர்த்தா, சாந்தமே உருவான பத்மாவதிக்கு அதே உணர்ச்சி யூட்டக்கூடிய வசனங்களையும் அமைத்துக் கொடுத்திருக்கிறார். ஒவ்வொரு கட்டத்திலும் வசனம் கொஞ்சுகிறது. அந்த வசனங்களைப் பேசி யார் நடித்திருந்தாலும் படம் வெற்றி பெறும் என்பது நிச்சயம். இதனால் நடிகர்களைக் குறைகூறுவதாக அர்த்தமில்லை.

'மனோகரனாக நடிப்பதில் அவருக்கு ஈடு அவாதான்' என்றுகே. ஆர். ராமசாமியைப் பற்றி யாவரும் கூறுவார்கள். அவருக்கடுத்தபடியாக சிறப்பாக நடித்து சிவாஜி கணேசன் நம் பாராட்டுதல்களைப் பெறுகிறார். கண்ணாம்பாவுக்கு பத்மாவதியாக நடிப்பதில் போட்டி இருக்க முடியாது என்பதை மனோகரா படம் விளக்கி விட்டது. மற்றும் டி. ஆர். ராஜகுமாரி முதல் ஒரு நிமிஷம் வந்துபோகும் பண்டரிபாய் உள்பட யாவரும் தரமாகவே நடித்திருக்கிறார்கள்.

வட இந்தியாவில் இப்போது புராணப் படங்களுக்குப் பிரமாதமான மவுசு ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிலும் அந்தநிலை ஏற்பட்டு வருகிறது. பண்பாட்டையும் நீதி, நேர்மைகளையும் நிலைநாட்டி விளக்கும் உயரிய படங்கள் வெற்றி பெறுகின்றன என்பதை அறிந்தோ என்னவோ அந்தப் பாணியில் படங்கள் தயாராக ஆரம்பித்துவிட்டன.



எஸ். ஏ. நடராஜனும், ஸ்ரீனிவாஸனும் 'மாங்கல்யம்' சம்பந்தமாக விவாதிப்பதைக் குறித்து, 'நம் குழந்தை'யின் இந்த ஹாஸ்யஜோடி ஆலோசிக்கிறதோ என்னமோ?

ஏவி. எம். ஸ்டுடியோவில் குப்பியின் பேடர கண்ணப்பா என்ற கன்னடப் படத்தின் படப்பின்போது எடுக்கப்பட்ட படம்.

ஒருநாள் பி. கே. சரஸ்வதி கிண்டி நரசு ஸ்டூடியோவில் 'அறியாமல் பெருகுது இன்பந்தான்' என்று ஆனந்தமாகப் பாடிக்கொண்டு, அதற்கேற்ப அழகான உடையுடன் அற்புதமாக நடனமும் ஆடிக்கொண்டிருந்தார். அவருக்கு எதிரிலே நின்று அவரை ஆட்டிக் கொண்டிருந்தார் கே. என். தண்டாயுதபாணி.

நரசு ஸ்டுடியோவின் உரிமையாளரான நரசுவின் சொந்தப் படமான துளிவிஷம் சம்பந்தப்பட்ட காட்சி அது. கற்பக நாட்டு மன்னன் சூர்யகாந்த், பெண் கேட்பதற்காக நாக நாட்டிற்கு வருகிறான். நாக நாட்டின் ராஜசபை நடனமாது அங்கயற்கண்ணி. அவளுக்கு இளவரசன் சந்திரன் மீது அபாரமான காதல். பெண் கேட்கவந்த சூர்யகாந்த், அங்கயற்கண்ணியைக் கண்டு காதலிக்கிறான். அவளும் அவனுடன் ஆடிப் பாடி. அவனுக்கு இன்பமளிக்கிறாள். ஆனால் ஒரு நாள் அங்கயற்கண்ணி தன் உள்ளத்தை திறந்து சூர்யகாந்திடம் தான் சந்திரனையே காதலிப்பதாகச் சொல்கிறாள். இதைக் கேட்டு வெகுண்ட சூர்யகாந்த் அவளைக் கொன்று விடுகிறான்.

'துளிவிஷம்' கதையையும் வசனத்தையும் எழுதியிருப்பவர் அதை டைரக்ட் செய்துவரும் ஏ. எஸ் ஏ. சாமி. நாகநாட்டு யுவராஜா சந்திரனாக கே. ஆர். ராமசாமியும், சிவாஜி கணேசன் கற்பக நாட்டு மன்னன் சூர்யகாந்தாகவும், பி. கே. சரஸ்வதி அங்கயற்கண்ணியாகவும் இப்படத்தில் நடிக்கின்றனர். மற்றும் இதில் கிருஷ்ணகுமாரி, டி. வி. நாராயணசாமி, எஸ். டி. சுப்புலக்ஷ்மி முதலியவர்களும் நடிக்கிறார்கள். நடன டைரக்ஷனையும், சங்கீத டைரக்ஷனையும் கே. என். தண்டாயுதபாணி ஏற்றுக் கொண்டிருக்கிறார். நரசு ஸ்டுடியோவில் அதிவேகமாகத் தயாராகும் இப்படம் அநேகமாக அடுத்த மாதத்திற்குள் திரைக்கு வந்துவிடும் என்று நினைக்கிறேன்.

மொக்குரியின் முதல் படமான ''போன மச்சா''னுக்கான
பாடல்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டபோது எடுதத படம்.

சரவணபவா – யூனிடி பிக்சர்ஸ் கூட்டுத் தயாரிப்பான 'எதிர்பாராதது' என்ற படத்தின் இரண்டு காட்சிகளை நெப்டியூனில் பார்க்கும சந்தர்ப்பம் எனக்குக கிடைத்தது.

முதல் நாளன்று சிவாஜி கணேசனுக்கும் துரைசாமிக்கும் பத்மினிக்கும் படப்பிடிப்பு இருந்தது. சுநதராக கணேசனும், சுமதியாக பப்பியும், சுமதியின் தந்தையாக துரைசாமியும் நடித்தார்கள் அன்று. சுந்தர் படிப்புக்காக மேலநாடு செலல ஆயத்தமாகிறான். அப்போது சுமதியின் தந்தை அவனிடம் கலயாணத்தைப்பற்றிப் பேசுகிறார். ''அதெல்லாம் படிப்பு முடிந்து திரும்பிய பிறகு பார்த்துக் கொள்ளலாம்'' என்று கூறி விட்டுக் கிளம்புகிறான் சுந்தர்.

இதே படத்தில் மறநாள் நான பார்த்த காட்சியில் பப்பியும், துரைசாமியும் மட்டுமே இருந்தார்கள். வெளியே எங்கிருந்தோ வந்த தகப்பனார் ''சுமதி சுமதி'' என்று அழைத்தார். சுமதி உள்ளேயிருந்து வந்தாள். ''என்னம்மா செய்துகிட்டிருந்தே?'' என்று கேட்டார் அப்பா.

''வெளக்கேத்திக் கிட்டிருந்தேனப்பா'' என்று பதில் சொன்னாள் சுமதி.

இதைக் கேட்டுச் சிரித்தார் அவர்.

நம் குழந்தை – படப்பிடிப்பின்போது.



'சதாசுலங்' சிங்களப் படப்பிடிப்பில் டைரக்டர் சோமசேகரும், காமிராமேன் ராஜகோபாலும்.

"எதற்கப்பா சிரிக்கிறீர்கள்?"

"ஒண்ணுமில்லேம்மா! இருட்டிக் கெடக்கற நம்ப மனசிலே ஆண்டவன் வெளக்கேத்தி வைக்க மாட்டேங்கருனே! அதை நெனைச்சுத்தான் சிரித்தேன்!" என்றார், சுமதியின் தகப்பனாக நடிக்கும், துரைசாமி.

நீலக்குயில் மலையாளப் படத்தில் ஒரு காட்சி.

'துளிவிஷம்' படப் பிடிப்பிலே டைரக்டர் சாமி, கே.ஆர். ராமசாமி, பி. கே. சரஸ்வதி முதலியோர்.

எதிர்பாராதது கதை. வசனத்தைத் தயாரித்தவர் ஸ்ரீதர் என்பதும், இப் படத்தை சி. எச். நாராயண மூர்த்தி டைரக்ட் செய்கிறார் என்பதும்தான் தெரிந்த விஷயங்களாயிற்றே!

இதே ஸ்ரீதர் எழுதிய இன்னொரு கதையான ரத்த பாசத்தை டி. கே எஸ் சகோதரர்கள் நாடகமாகப் பிரபல மாக்கியதன்றி



'ரத்தக் கண்ணீர்' டைரக்டர்கள் பஞ்சு, கிருஷ்ணன்.

'துளி விஷ'த்தில் சிவாஜி கணேசன்

(அஞ்சலி) ராஜா (ஷண்முகம்) இருவரும் நாட்டியமாடுகிறார்கள். சுற்றிலும் ஏகப்பட்ட காலிகளின் கும்பல். 'டல்லு, டல்லு, டல்லு என்று' தொடங்கும் குஷியான பாட்டொன்றுக்கு கன குஷாலாக ஆடினார் இருவரும். ஹீராலால் இதற்கான நடனங்களை அமைத்துக் கொடுத்திருக்கிறார். ஆத்மநாதனின் பாடல்கள் அர்த்த புஷ்டியுடனும் தமாஷாகவும் இருக்கின்றன.

இந்த நடனம் முடிந்ததும் சில காலிகள் ராணியை கையையும் காலையும் தொட்டு ஹிம்சிப்பதாகவும், ராஜா குறுக்கே வந்து அவளை அவர்களிடமிருந்து காப்பாற்றி அழைத்து வருவதாகவும் சம்பவம். அதன் பிறகு ராணியை இனி மேல் தெருவிலேயே ஆடக்கூடாது என்று கூறிவிடுகிறானும் ராஜா. சுவாரஸ்யமான இந்தக் கதையை சுவை குன்றாமல் படமாக்கிவருகிறார்கள் ஒளவை புரொடக்ஷன்ஸார்.

* * *

சென்ற மாதததின இறுதியில்தான் நான் வாஹினி ஸ்டூடியோவுக்குப் போக முடிந்தது. ஆனாலும் காரமிக்சர் மாதிரி ஒரு தமிழ், ஒரு மலையாளம், ஒரு சிங்களம் ஆகிய மூன்று வெவ்வேறு படங்களின் மூன்று காட்சிகளைக் கண்டு ரஸித்தேன்.

முதலில் பார்த்தது வைத்யா பிலிம்ஸாரின் வைரமாலை படப்பிடிப்பு. பத்மினி, ராகினி, மாலி ஆக மூன்று பேர்களுக்கு அன்று மேக்-அப் இருந்தது. பத்மினி சாந்தாவாகவும்,

ஒளவை புரொடக்ஷன்ஸார் இதை படமாகவும் தயாரித்து வருகிறார்கள் கெப்டியூனிலே.

இதில் டி. கே. ஷண்முகம், பகவதி திரௌபதி, அஞ்சலிதேவி முதலியவர்களுடன் டி. கே. எஸ். ஸைச் சேர்ந்த இதர சில நடிகர்களும் நடிக்கிறார்கள். ஆர். எஸ். மணி டைரக்ட் செய்யும் இப்படத்தின் ஒரு நடனக் காட்சி சென்ற மாதத்தில் படமாகியது. பம்பாய் தெருவொன்றில் ராணி



சிங்களப்படமான 'அகங்காரஸ்திரீ'க்கான நடனங்கள் வாஹினியில் படமாக்கப்பட்டன.

ராகினி கமலாவாகவும், மாலீ மோகனாகவும் நடிக்கின்றனர்.

சாந்தா ரங்கசாமி என்பவர் வீட்டில் குடியிருக்கிருள். ரங்கசாமியைப் பற்றி சாந்தாவுக்கு ஒரு நல்ல அபிப்பிராயம் இருந்தது. ஒரு நாள்

நடன, சங்கீத டைரக்டர் கே. என். தண்டாயுதபாணி துளிவிஷத்துக்காக பி. கே. சரஸ்வதியை ஆட்டுவிக்கிருர்.

'நீலக்குயில்' கஸ்ானை குமாரியும், புதுமுகம பிரேமாவும அவரது தாயாரும்.

சாமியின் துர்க்குணங்களைப் பற்றிப் பேசுகிருர்கள்.

இத்யாதி காரணங்களால் சாந்தா ரங்கசாமியிடம் கொண்டிருந்த நல்ல அபிப்பிராயம் நிச்சயமாக மாறத் தானே வேண்டும்.

சாந்தா ஒரு ஜவுளிக் கடைக்குப் போகிருள் சில துணிமணிகள் வாங்க. வேண்டியவைகளை வாங்கி மூட்டை கட்டிய பிறகுதான், தன்னுடைய பர்ஸைப் பறி கொடுத்து விட்டது அவளுக்குத் தெரிகிறது.

'இந்த ஜவுளியை என் வீட்டிற்கனுப்புங்கள் பணம் கொடுத்தனுப்புகிறேன்' என்ருள் சாந்தா. முதலில் சரியென்று ஒப்பிய கடைக்காரன் சாந்தாவின் வீட்டு விலாஸத்தைக் கேட்கவே திகைத்து, துணிகளை அனுப்ப மறுத்துவிடுகிருன். ரங்கசாமியினல் ஏமாற்றப் பட்டவன் அந்தக் கடைக்காரன்.

அதே சமயம் கமலாவும் மோகனும் அந்தக் கடைக்கு வருகிருர்கள். அவர்களும் பேச்சுவாக்கில் ரங்க

இந்த ஜவுளிக் கடைதான் அன்று படமாக்கப் பட்டது தோட்டக்கார விஸ்வநாதனின் ஹாஸ்ய நாடகமான இதை ஜகந்நாத் டைரக்ட் செய்கிருர்.

இரண்டாவதாகப் பார்த்தது சதாசுலங் என்ற சிங்களப் படம். பிலம் சிலோன் ஸ்தாபனத்தார் இதைத் தயாரிக்கின்றனர். புரொட்யூசரான சோமசேகரன் இதை டைரக்ட் செய்கிருர். இந்த சிங்களப் படத்தின் ஒரு காட்சியை நான் எடுத்துக் கொண்டேனே தவிர, மற்றபடி அங்கு நடந்த சம்பாஷணைகளோ அதன் கதையோ எனக்குப் புரியவில்லை.

* * *

மூன்ருவது ஒரு மலையாளப் படம். பி. பாஸகரனும், ஆர். கரியத்தும் டைரக்ட் செய்யும் சந்த்ரதாரா புரொடக்ஷன்ஸாரின் நீலக்குயில் படத்தில் பகவத் விலாஸ் டீக கடைக் காட்சி ஒன்று அன்று படமாக்கப் பட்டது. கே. பி. மேனன், பி. பாஸ்கரன், ஜோஸப், குமாரி, பிரேமா முதலியோர் இப்படத்தில் நடிக்கின்றனர். சினிமா உலகத்துக்கு

''டல்லு, டல்லு, டல்லு'' ஷண்முகம டானஸ் ஆடப் போகிருர்!



''எதிர்பாராதது'' டைரக்டரும், கதாசிரியரும் நடிகர்களுடன்.

புது முகமாம் இந்த பிரேமா.

ஒரு கிராமாந்தரத்து டீக் கடை. அதிலே ஊர்க்காரர்கள் எல்லோரும் அடிக்கடிச் சந்திப்பது வழக்கம். முக்கியமாக அந்தக் கிராமத்து தபால்காரன்தான் உண்மையான நியூஸ் பேப்பர் என்றால் டீக்கடைதான் செய்தி ஸ்தாபனம். இந்த இடத்தில் கடைக்காரன் நாணு நாயரும், வேலையாள் மொய்துவும், தபால்காரனும் சந்திக்கும் கட்டம்தான் அன்று படமாக்கப்பட்டது

* * *

கோடம்பாக்கத்திலிருந்து திரும்பி வரும்போது ரேவதி ஸ்டூடியோவிலிருந்து டி. வி ரத்தினத்தின் 'மாலையிட்ட மங்கை' என்ற இன்னிசை கேட்டது. இந்தப் பாடலுக்கு எம். என். ராஜம் அழகாக ஆடிக் கொண்டிருந்தார். எம். ஆர். ராதா இந்த ஆட்டத்தையும் பாட்டையும் கேட்டு சுவாரஸ்யமாக ரஸித்துக் கொண்டிருந்தார்.

நேஷனலின் 'ரத்தக் கண்ணீ'ருக்கான காட்சி அது. கிருஷ்ணன்—பஞ்சு டைரக்ட் செய்யும் படம். இந்த டைரக்டர்கள் ஷூட்டிங்கை முடித்து சற்றே வெளியே உட்கார்ந்திருந்த போது, இருவரையும் ஒன்றாகச் சேர்த்து முதல் முறையாகப் படம் பிடித்தேன். படத்தின் காட்சியைவிட பஞ்சு - கிருஷ்ணனைப் பார்த்ததே போதும் என்று திரும்பி விட்டேன்.

நியூடோனில் டி. எஸ். வெங்கடசாமி தயாரிக்கும் மெர்க்குரி பிலிம்ஸாரின் 'புனர்ஜனமம்' அதிதுரிதமாகப் படமாக்கப்பட்டு வருகிறது. சில நாளாக அமைதியாக இருந்த கீழ்ப்பாக்கம் சூழ்நிலை மிகவும் சுறுசுறுப்பாக இயங்குகிறது. இந்தப் படத்தினால் அடிக்கடி ஷூட்டிங் என்றோ, ரிகார்டிங் என்றோ நியூடோன் ஏறக்குறைய தினமும் கலகலப்பாக இருக்கிறது. ''போன மச்சான் திரும்பி வந்தான்'' என்று நீளமான தமாஷ் பெயராக வைத்திருக்கிறார்கள் இப்படத்திற்கு. சென்ற மாதம் நான் சென்றபோது நியூடோனில் இப்படத்திற்கான பாடல ஒலிப்பதிவு செய்யபபட்டு வந்தது. அன்று பதிவான மூன்று பாட்டுக்களை ராதா, ஜெயலக்ஷ்மி, ஜிக்கி பாடினார்கள்.



'அன்னதாதா'வை வேதாந்தம் ராகவய்யா டைரக்ட் செய்கிறார்.

மேலே: 'நம் குழந்தை'யில் டி. பாலசுப்ரமணியம், எஸ். வரலக்ஷ்மி.

கிழே: 'பத்மினி'யில் மோகன் - பி. எஸ். கோவிந்தன்.



"அன்னம் போலொரு
சின்னப் பொண்ணு
ஆடுது பாருங்க!"

ஔவை புரொடக்ஷன்ஸ் 'ரத்த பாச'த்தில் அஞ்சலி தேவி

நம்பியார் — ராஜசுலோசனா

விரைவில் வெளிவரவிருக்கும் எம். ஏ. வி.
பிக்சர்ஸாரின் 'மாங்கல்யம்' படத்தில்....

ஏ. பி. நாகராஜன் – பி. எஸ். சரோஜா

....ஆசை வெள்ளத்தில் மிதக்கும் இந்த
காதல் ஜோடிகளைப் பார்க்கலாம்.

"பிரம்மச்சாரி" ராமச்சந்திரன்

வாழ்க்கைச் சித்திரம்

படங்களில் நமக்குப் பிடித்த மானநடிகர்களைப் பார்க்கும் போதே நாம் பிரமாதமாகக் கை தட்டி ஆர்ப்பரிக்கிறோம். அவர்கள் நன்கு நடித்துவிட்டால் கேட்கவே வேண்டாம். நன்கு நடிக்காவிட்டாலும், கேலி செய்யும் பாவனையில் திரையை நோக்கிக் கூச்சல் போடுவதும் சில ரஸிகர்களின் வழக்கமாயிருக்கிறது!

ரஸிகர்கள் இவ்வளவு அலக்ஷியமாக மதிப்பிட்டு விட்டாலும் பாராட்டிவிட்டாலும் அதன் பலாபலன்கள், குறிப்பிட்ட கலைஞரைத் தான் சேருகின்றன. இன்று முன்னணியில் இருக்கும் நக்ஷத்திரங்களில் பலரும் முன்பெல்லாம் முன்னேறும் ஆசையுடன் பலநாள் தீராகாரத்துடன் காலங் கடத்தி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்க விஷயமாகும். ஏன், பிரபல ஹாஸ்ய நடிகரும் படமுதலாளியுமான டி.ஆர். ராமச்சந்திரனை எடுத்துக்கொள்ளுங்களேன்! ஆயிரமாயிரம் ரஸிகர்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் இந்தஹாஸ்ய நடிகர், தான் சிரிக்கக் கூட முடியாமல் வறுமையோடு போராடி எவ்வளவு வேதனைப் பட்டார் தெரியுமா?

பல நடிகர்கள் கம்பெனிகளில் இருந்து கொண்டு சரியாகச் சம்பளம் கிடைக்காமல் திண்டாடினார்கள். ஆனால் ராமச்சந்திரன் சாப்பாட்டுக்கே வழியின்றித் திண்டாடினார். 'இப்படியாவது கலைத்தொண்டாற்றி என்ன ஆகவேண்டும்?' என்று அந்தக் கலைஞர் அன்று–மிகவும் சிரமப் பட்டபோது – யோசித்திருந்தாரானால நாம் இன்று இத்தகையதொரு கலைஞரைப் பார்த்திருக்கவே முடியாது. யோசிக்கக்கூடத் திறனின்றி இருந்த அன்றைய அவரது நிலை வாழ்க!

திருக்காம்புலியூர் என்றதொரு அழகிய கிராமம் திருச்சிக்கு சமீபத்தில் இருக்கிறது. அந்தக் கிராமத்தினர்–ஏன், திருச்சி ஜில்லாவைச் சேர்ந்த எல்லோருமே ராமச்சந்திரனைப் போன்றதொரு திறமையும் புகழும் பெற்ற கலைஞரைக் கலையுலகிற்கு அளித்ததில் மகிழ்ச்சிகொள்ளலாம். திருக்காம்புலியூரில் ரங்கராவ் என்பருக்கும் அவரது மனைவி ரங்கம்மாளுக்கும் 1917-ம்ஆண்டில் ஜனவரி மாதத்தில் சுபயோக சுபவேளையில் பிறந்தார் ராமச்சந்திரன். அவரது குடும்பம் நடுத்தரக் குடும்பத்தினர் வகையைச் சேர்ந்தது. இல்லை, உண்டு என்ற இரு நிலைகளிலிருந்து ஒதுங்கி, 'இருக்கிறது; ஆனால் போதாது. இல்லை; ஆனால் இருந்தாக வேண்டும்' என்ற இரண்டுங் கெட்டான் நிலையிலிருந்தது. ராமச்சந்திரனுடன் கூடப்பிறந்தவர்கள் மூன்று சகோதரர்கள். இவர்களது இளம் வயதிலேயே ராமச்சந்திரனின் தாய் ரங்கம்மாள் பிள்ளைகளையும் கணவனையும் தவிக்க விட்டுவிட்டுப் போய்விட்டார். அவரை இழந்து துக்கத்திலாழ்ந்துவிட்ட ரங்கராவ், குழந்தைகளின் வளர்ப்பை முன்னிட்டோ என்னவோ, மீண்டும் திருமணம் செய்து கொண்டார்.

குடும்ப நிலை எப்படியிருந்தாலும் பிள்ளைகளைக் கடன் வாங்கியாவது

பள்ளிக்கனுப்புவது தங்கள் கடமை என்று பெற்றோர்கள் நினைப்பதுதான் வழக்கமாயிற்றே! ராமச்சந்திரனையும் தகப்பனார் ரங்கராவ் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி வைத்தார். அப்போது ராமச்சந்திரனுக்கு வயது ஐந்து. அப்பாவுக்கு இருந்த ஆசைகள் பிள்ளைக்கு இருந்தால்தானே! யமதர்மராஜனின் பூலோகப் பிரதிநிதிகளாக உபாத்தியாயர்கள் ராமச்சந்திரனுக்குக் காட்சியளித்தனர்! தொட்டதற்கெல்லாம் அடித்தனர். எழுதாவிட்டால் 'ஏன் எழுதவில்லை?' என்று கேட்டு அடிப்பார்கள். சரி என்று எழுதினாலோ, 'ஏன் தப்பாக எழுதினாய்?' என்று கூறி அடிப்பார்கள், மாணவர்களின் ஜன்ம சத்துருக்களான உபாத்தியாயர்கள்!

பள்ளிக்கூடத்தில்தான் அப்படியென்றால் வீட்டிலுமா அதே மாதிரி, பலகையை உடைத்துவிட்டு 'பலகை இல்லை; பள்ளிக்கூடம் போக மாட்டேன்' என்பார் ராமச்சந்திரன். அப்பா, பாவம், ஒரு பலகையை வாங்கிக் கொடுத்து, 'போடா கண்ணே' என்பார். 'பலகையும் படிப்பும் ஒழிக!' என்று சபித்துக் கொண்டே நரகத்துக்குள் – பள்ளிக்குள்–நுழைவார் ராமச்சந்திரன்! ஆனால் மற்ற பிள்ளைகளைப்போல மாமரத்திலோ. நாவல் மரத்திலோ இருக்க மாட்டார் ராமச்சந்திரன்! அடிவாங்கிப் பழக்கமாகி விட்டது! 'போய்த்தான் வருவோமே! மூளையை உபயோகிக்க வேண்டிய அவசியம் வந்தாலும் பார்த்துக் கொள்ளலாம்' என்று இருந்து விட்டார் போலும்!

தனது ஐந்தாவது வயதில் அதாவது 1922-ம் வருஷம், பள்ளியில் சேர்ந்தார் ராமச்சந்திரன். அவர் சரியாக "அ ஆ இ ஈ" தெரிந்து கொள்வதற்குள் அந்த வருஷம் ஓடிவிடவே மீண்டும் அங்கேயே இருந்து கற்க முயன்றார்! 1922 போய் அதைத் தொடர்ந்து 1923ம் போய் விட்டது! வருஷம் ஓடும் வேகத்தில் நாமும் படித்தால் சரியாகப் பதியாது என்றோ என்னவோ, அதே முதல் வகுப்பில் இருந்து விட்டார் ராமச்சந்திரன்—மூன்றாம் வருஷமும் அதே நிலைதான்! மூன்றாம்முறை முனைய வேண்டும் என்ற காலவரையை ராமச்சந்திரன் மீறி விட்டார், முன்பு நேருஜி காஷ்மீர் தடையை மீறி உள்ளே சென்றது போல! நேருஜியை காஷ்மீர் அரசாங்கம் அப்போது வெளியே கொண்டு வந்து விட்டது. உபாத்தியாயரும், ஆணி அடித்துக் கொண்டு உட்

கார்ந்திருந்த ராமச்சந்திரனை— ஆணியைக் கழற்றி விட்டு— அடுத்த வகுப்புக்கு பலவந்தமாகத் தள்ளி விட்டார்! ராமச்சந்திரனுக்கும் நேருஜிக்கும் என்ன பொருத்தம் பார்த்திர்களா?

ஒருமாதிரியாக முதல் வகுப்பிலிருந்து இரண்டாம் வகுப்புக்கு ராமச்சந்திரன் வந்தபோது, அந்த வகுப்பு உபாத்தியாயருக்குத் தலைவலிக்க ஆரம்பித்தது. 1925ல் இரண்டாம் வகுப்புக்கு போனவர் அங்கே ராஜாக்களைப் பற்றி அறிந்து கொள்ளும் ஜோலியிருந்ததால் ஆராய்ச்சியை முன்னிட்டு இரண்டு வருஷங்கள் முகாமிட நேர்ந்தது! இரண்டு வருஷங்களில், ராமச்சந்திரன் பொறுமையை இழந்து விட்டார். 'ராஜா ராணியைப் பற்றியெல்லாம் இங்கு யாருக்கு வேண்டும்?' என்று அலுத்துக் கொண்டார் அவர்! அவருக்கு அப்பாவிடம் அசாத்திய கோபம்; உபாத்தியாயர்களிடம் ஒரே வெறுப்பு! ராஜாஜியின் கல்வி திட்டத்திற்கு முன்பே—ராமச்சந்திரன் காலத்தில் இருந்த - கல்வியை எதிர்த்தார் அவர்! அவருக்கு மட்டும் நான்கு சரியான தொண்டர்கள் கிடைத்திருந்தால் ரயிலை நிறுத்தி, ஊரில் புகுந்து கலாட்டா செய்திருப்பார்! சண்டாள சமூகத்தில் ஐந்தாம் படை ஆசாமிகள் இருந்து அவரது ஆணித்தரமான அபிப்பிராயங்களுக்கு ஆதரவளிக்காமல் போய்விட்டார்கள்!

நஜீப் முதலியோர் எகிப்து அரசர் பருக அவர்களை நாடு கடத்தியது போல், ராமச்சந்திரனை கல்வித் திட்டம் ஊர் கடத்தியது!

அவருக்குப் பாலும் (கிடைக்காததால்) கசந்தது; ஊரும் பிடிக்கவில்லை; உறவும் பிடிக்கவில்லை; தூக்கமும் பிடிக்கவில்லை! மனம் வெறுத்து ஒரு நாள் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் குளித்தலையை நோக்கி ஓட்டம் பிடித்தார்! குளிக்காமலேயே 'குளித்தலை'யில் தலை நீட்டிய ராமச்சந்திரனை, 'வாடா, என் கண்ணே! ஏண்டாப்பா! ஒரு கடுதாசி போடப்படாதோ?' என்று அன்போடு விசாரித்தார் பாட்டி! சொல்லிக் கொள்ளும் லக்ஷணத்தில் பிள்ளையாண்டான் போயிருந்தால்தானே! பேரப் பிள்ளையை வரவேற்று உபசரித்த பாட்டி, "சின்ன வயசிலே படிச்சாதான் கண்ணு படிப்பு வரும்" என்று சொல்லி பேரனைப் பள்ளிக்கூடத்தில்கொண்டு உட்காரச் செய்து விட்டுத் திரும்பினார். ராமச்சந்திரனுக்கு ஆத்திரம் தாங்கவில்லை. 'அப்பா பள்ளிக்கூடம்

போகச்சொன்னது பிடிக்காமல் போகவேதானே இங்கே வந்தோம்? இந்தப் பாட்டியும் பள்ளிக் கூடம் போகச் சொல்லுகிருளே'' என்று ஆத்திரப் பட்டுக்கொண்டு கொஞ்ச நாள் மன வெறுப்புடன் போய் வந்து கொண்டிருந்தார்.

குளித்தலை வந்து கொஞ்ச நாட்க ளானவுடனேயே, மீண்டும், வந்தது போலவே, திருக்காம்புலியூருக்குத் திரும்பி விட்டார் ராமச்சந்திரன்! ஆமாம், பாட்டியிடம் சொல்லிக் கொள்ளாமலேயே கம்பி நீட்டி விட்டார்!

'போன மச்சான் திரும்பி வந்தான் பூ மணத்தோடே' என்பது போல், பிள்ளையாண்டான் திரும்பி வந்ததும் அவனுக்கான வழிகளைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு தகப்பனுரின் தலையில் மீண்டும் விழுந்தது.

ராமச்சந்திரன் அவரிடம் தீர்மானமாகச் சொல்லி விட்டார், மேற்கொண்டு படிக்க முடியாதென்று! ஊரில் பஜனை மடங்களில் உரக்கப் பாடிக் கொண்டிருந்தார் அவர். அப்பாவும் அவரை 'உதவாக்கரை! எக்கேடு கெடட்டுப் போகட்டும். இருக்கிறவரை சோத்தைப் போடுவோம்' என்று இருந்து விட்டார். பஜனை புகழ் ராமச்சந்திரன் எப்படியும் சங்கிதத்தில் முன்னுக்கு வந்து விடுவான் என்று பஜனை மடத்தைச் சேர்ந்த சிலர் அபிப்பிராயப் பட்டதன் பேரில், ராமச்சந்திரனுக்குச் சங்கித சிக்ஷைக்கு ஏற்பாடு செய்தார் அவர் தகபபனுர் ரங்கராவ்.

ஆர்மோனிய ஸ்ருதியை வைத்துக் கொண்டு அவரது குரு பாட ஆரம்பித்தவுடனே, ராமச்சந்திரன், 'கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி' படத்தில் ஸ்ருதியோடு பாடியது போல், பாட ஆரம்பித்ததைக் கேட்டு குரு இரண்டு காதுகளையும் கெட்டியாகப் பொத்திக் கொண்டார்! ஆரம்பிக்கும போதே ராகங்களில் ஸ்ருதி பேதம் செய்து, ஸ்ருதியுடன் ராமச்சந்திரன் பேதம் கொள்ளவே, அவரது குரு தனக்குத் தெரிந்ததைக் காப்பாற்றிக் கொள்ளும நோக்கத்தோடு அந்த சிக்ஷையை நிறுத்திக் கொண்டார்! கல்விக்கே கட்டுப்படாதவன் கேவலம் சங்கிதத்திற்குக் கட்டுப்பட்டு விடுவேனே என்ற ராமச்சந்திரன் வைராக்கியம் கொண்டு விட்டபோது அவரை அசைக்க யாரால்தான் முடியும்? உதவாக்கரை என்ற பட்டம் அவ

ருக்கு "கன்பர்ம்" ஆயிற்று! சந்தோஷத்தோடு ஏற்றுக் கொண்டார் அவர்!

ராகவேந்திரராவ் என்பவர் ரங்கராவின் குடும்ப நண்பர். நாடகங்களுக்கு ஆர்மோனியம் வாசித்து வந்த அவர் ஒரு நாள் ரங்கராவைப் பார்க்க வந்திருந்தார். ராமச்சந்திரனிடம் நாடக உலகைப் பற்றிப் பேசியதும் அவருக்கு நாடகங்களில் நடிக்க வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டு விட்டது. தகப்பனரிடம் போய், "நான் நாடகத்திலே நடிக்கப் போறேம்ப்பா!" என்றார். அப்பா பார்த்தார். பிள்ளை எப்படியாவது பிழைத்துப் போனால் போதும் என்ற நினைவுடன் உடனே அனுமதி கொடுத்து விட்டார். ராகவேந்திர ராவுடன் கிளம்பி திருச்சிக்கு வந்தார் ராமச்சந்திரன். இப்போது வெலிங்டன் டாக்கிஸாக இருக்கும கட்டிடம் அப்போது ரங்க விலாஸ் தியேட்டர் என்ற பெயரோடிருந்தது. அங்கே ஜகந்நாதய்யரின் மதுரை பால மோகன ரஞ்சித சங்கீத சபாவினர் நாடகங்களை நடத்தி வந்தனர். ராகவேந்திரராவின் சிபார்சினல் ராமச்சந்திரன் அங்கே நடிகராக வேலைக்கமர்ந்தார். அங்கே அவருக்குத் தோழி வேஷம்தான் கொடுக்கப்பட்டது. ஆறு மாத காலம் கதாநாயகிகளை உருட்டி உருட்டி விழித்துப் பார்த்துக் கொண்டு, அவர்கள் பாடியதையும் பேசியதையும் கேட்டுச் சகித்து வந்தார்! அதற்காக அவருக்குச் சம்பளம் கூடக் கிடையாது. தொழில் கற்பதற்காகவும் சபைக்கூச்சம் தெளிவதற்காகவும் அவருக்கு தோழி வேஷங்கள் சாப்பாட்டுடன் கிடைத்தன! பிறகு மாதச் சம்பளம் சாப்பாடு போக மூன்று ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டது!

ராமச்சந்திரன் ரூபாயைக் கண்டதும் பிரமாதமாக நடிக்க ஆரம்பித்து விட்டதாலோ என்னவோ, சில மாதங்களில் ஐந்து ரூபாயாக உயர்த்தப் பட்டது அவரது மாதச் சம்பளம்! இப்படிச் சுமார் இரண்டு வருஷங்கள் சென்றதும் அவரது மாதச் சம்பளம் பதினைந்தாக உயர்ந்தது! ராமச்சந்திரன் ரொம்பவும் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தபோது, சம்பளமும் இருபது ரூபாயாக உயர்ந்தது: கம்பெனியும் மூடப்பட்டது! வெண்ணை திரளும் போது தாழி உடைந்த கதையாக ஆகிவிடவே ராமச்சந்திரனின் மனம் உடைந்து விட்டது. இது நடந்தது 1936–ம் வருஷத்தில். கொல்லத்தில் தான் புகழ் பெற்ற ஜகந்நாதய்யர் கம்பெனியின் மூடு விழா நடைபெற்

றது. அப்போது ராமச்சந்திரன் ஹாஸ்ய பாத்திரத்தில் மிகவும் புகழ் பெற்றிருந்தார். முதலாளி ஓடி விட்டார். அவரைப் பின்பற்றி பிரதம நடிகர்கள் நழுவி விட்டனர். ஆனால் 'ஓடிப்போவ'தில் புகழ் பெற்ற ராமச்சந்திரன் மட்டும், அப்போது. வகுப்பில் தேளூது உட்கார்ந்திருந்தது போல், அசைந்து கொடுக்காமல் உட்கார்ந்திருந்தார்!

ராமச்சந்திரனும் சக நடிகர்களும் சேர்ந்து தமாஷாகப் பாடுவதும் பஜனை செய்வதுமாகக் காலக்ஷேபம் செய்து வந்தனர். இப்படி ஒவ்வொரு வேளையிலும் கஷ்டப்பட்டு வந்த அந்த கோஷ்டியினரைக் கண்டு அனுதாபப்பட்ட ஒருவர்கொல்லத்தில் இருந்தும் ஆச்சரியம்தான்! ராமச்சந்திரனுக்குச் சாரீரம் வேறு உடைந்து விட்டது அப்போது.

மணி அய்யர் என்பவர் ராமச்சந்திரன் கோஷ்டியார் படும் துன்பங்களைக் கண்டு மனமிரங்கி. மதுரை பால மோகன ரஞ்சித சங்கித சபாவின் நிர்வாகத்தை ஏற்ருர். ஆனால் முக்கியமான நடிகர்கள் எல்லாம் போய்விடவே, ராமச்சந்திரன் கோஷ்டியினர் பிரதான வேஷங்களில் நடித்தனர். மணி அய்யரும் கஷ்ட நஷ்டங்களுக்கிடையே கம்பெனியை நடத்தி வந்தார். அப்போது ராமச்சந்திரன் மறுபடி கம்பி நீட்டவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டது!

மதுரை பால மோகன ரஞ்சித சங்கித சபாவில் ராமச்சந்திரனுடன் நடிகராக இருந்த எஸ். வி. வெங்கட்ராமன் தன பொறுப்பில் ஒரு நாடகக் கம்பெனியை ஆரம்பித்து டி.ஆர்.ஆர்.ஐயும்வரும்படி எழுதினர். அவ்வளவுதான்! ராமச்சந்திரன் இருளை எதிர்நோக்கித் தயாராகி விட்டார்! இருளும் வந்தது! அவரும் நண்பர்களும் மணி அய்யரிடம் சொல்லிக் கொள்ளாமல் குறிஞ்சிப்பாடிக்குப் பிரயாணமாகி விட்டனர். 'அப்பாடி!' என்று அவர் குறிஞ்சிப்பாடி போய்ச் சேர்ந்ததும், வெங்கட்ராமன் பிரமாதமாக உபசரித்து வசதிகள் செய்து கொடுத்தார். ஆனால் 'உள்ளதும் போச்சு நொள்ளைக் கண்ணு!' என்று செய்து விட்டார் வெங்கட்ராமன். அவருக்குப் படவுலகில் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு. ஒருவரிடம் கம்பெனியின் பொறுப்பை ஒப்படைத்து விட்டு, வடக்கே ரயிலேறி விட்டார். அப்போது கம்பெனி கோலாரில் இருந்தது. அவர் திரும்பி வரும்வரை கம்பெனியினர் பட்டபாடு சொல்லத் தரமன்று. மோசமான நிலையிலிருந்த கம்பெனி, வெங்கட்ராமன் திரும்பியதும் மூடப்பட்டு விட்டது. பழையபடி வறுமையோடு போராடத் தொடங்கினர் ராமச்சந்திரன. செழுமையான கேரளத்திலும் தங்கம் விளையும் கோலாரிலும் கூட அவருக்கு வயிற்றுப்பாட்டுக்கே வழியில்லாமற் போய்விட்டது. எஸ். வி. வெங்கட்ராமன் உள்பட எல்லோரும் மூனறு வார காலம் பல வேளைகளில்

வெறும் நீரைக்குடித்துக் காலக்ஷேபம் செய்ய நேர்ந்தது. பிறகு எப்படியோ ஒரு விதமாக தலைக்குக் கொஞ்சம் சில்லறை போட்டு, கோலாரி விருந்து பெங்களூருக்கு ஒரே ஒரு டிக்கட்டு வாங்கி, அதை வெங்கட்ராமனிடம் கொடுத்து, ஏதாவது கம்பெனியில் வேலை தேட அனுப்பி வைத்தார்கள். பெங்களூரில் பல இடங்களிலும் சுற்றிவிட்டுச் சோர்ந்து போய் லால்பாக் இல் வந்து உட்கார்ந்தார் வெங்கட்ராமன். அவர் முகம் திடீரென்று பிரகாசமடைந்தது!

ஆம்! ஏவி. மெய்யப்ப செட்டியாரும் சுப்பராய செட்டியார் என்பவரும் அங்கு வந்தனர். அவர்கள் பிரகதி பிக்சர்ஸுக்காக 'நந்த குமா'ரைத் தயாரிப்பதில் ஈடுபட்டு நடிகர் தேர்தலுக்காக அங்கு வந்திருந்தனர் வெங்கட்ராமனிடம் பேசி அந்தக் கோஷ்டியினரை அப்படியே ஒப்பந்தம் செய்து கொண்டு, எல்லோரையும் வரவழைத்துப் பெங்களூரில் தங்கியிருக்க ஏற்பாடு செய்தார் ஏவி. எம்.

'நந்த குமார்' படப்பிடிப்புக்காக சென்னை கோஷ்டியுடன் பூனாவுக்குக் கிளம்பிய ஏவி. எம்., ராமச்சந்திரன் கோஷ்டியினருக்கு தந்தி மணியார்டர் அனுப்பி, அப்படியே பூனாவுக்குவரும்படிச் செய்தியனுப்பினார். வழி தெரியாமல் வேறுமார்க்கத்தில் பிரயாணம் செய்து திண்டாடிய பின், ஒரு மாதிரியாக பூனா சென்றனர் ராமச்சந்திரன் கோஷ்டியினர். நந்தகுமாரில் கிருஷ்ணனின் தோழனாக சிறிய பாத்திரத்தில் ராமச்சந்திரன் நடித்தார். நந்தகுமாரும் ஸ்ரீவள்ளியும் டி. ஆர். மகாலிங்கம், டி. ஆர். ராமச்சந்திரன் இருவருக்கும் புகழை அள்ளிக் கொடுத்ததுடன் 'மேனா'வுக்கும் பொருளை வாரிக்கொடுத்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நந்தகுமாரில் நடித்து முடித்ததும் இருக்காம்புலியூருக்கே திரும்பி கொஞ்ச நாள்வரை தங்கியிருந்தார் ராமச்சந்திரன். ஊரில் அதிகநாள் தங்கினால் கௌரவம் குறைந்து விடும் என்பதற்காக, சென்னைக்குக் கிளம்பினார் அவர். ஆனால் சினிமாவில் அவருக்கு அவ்வளவு லேசில் சந்தர்ப்பம் கிடைத்துவிடவில்லை. ஏவி.எம்.மைப் பார்க்கும் நோக்கத்துடன் பிரகதி ஸ்டுடியோவுக்குப் போனார். அப்போது அங்கே எஸ்.எஸ். பார்ஸ் என்ற படம் தயாராகவிருந்தது. தனக்கு ஏதாவது சந்தர்ப்பம்கொடுக்கும்படிக் கேட்டார் ராமச்சந்திரன்.

"உனக்கும் நடிப்புக்கும் வெகு தூரம். போய்வா தம்பி!" என்று ஆசீர்வாதம் செய்தனுப்பினார் ஏவி. எம. "ஆஹா, எவ்வளவு அலக்ஷியமாகச் சொல்லி விட்டார்! இவரிடமே வேலை செய்து புகழ் பெறுவேன்!" என்று சபதம் செய்து உபவாசமிருந்து (பட்டினி கிடந்து) சின்ன கடை அம்மனைத் துதித்து வந்தார்

ராமச்சந்திரன். சின்னகடை அம்மனைப் பத்து வாரங்கள் இடைவிடாது பூஜித்ததற்குப் பலன் கிடைக்காமற் போகவில்லை. வேண்டாம். என்று துரத்திய ஏவி. எம்., ராமச்சந்திரனை அழைத்து அதே ஹாஸ்யப் படத்தில் நடிக்கச் செய்தார். சின்னக்கடை அம்மன், செட்டியாரின் கனவில் வந்து ஏதாவது சொல்லியிருக்க வேண்டும்! எஸ். எஸ். பார்ஸ் படத்தில் நன்றாக நடித்து ஏவி எம்., சுப்பய்யா செட்டியார் இருவரின் நன்மதிப்பையும் பெற்ருர் அவர். "சின்னகடை அம்மன் அபார சக்தி வாய்ந்தவள். எனக்கு அருள் பாலித்து என் நல்வாழ்வுக்கு வழி காட்டிய தேவி அவள்" என்று உணர்ச்சியுடன் கூறுகிருர் ராமச்சந்திரன்.

பிரகதியினர் ராமச்சந்திரனை மாதச் சம்பளத்தில் இரண்டு வருஷங்களுக்கு ஒப்பந்தம் செய்து கொண்டனர். மாதச் சம்பளம் எவ்வளவு தெரியுமா? முப்பத்தி ஐந்தே ரூபாய்கள்தான்! பிரகதியின 'வாயாடி போலிப்பாஞ்சாலி' ஹாஸ்ய சித்திரம் வந்தது. அதில் டி. ஆர். ராமச்சந்திரனும், மாதுரிதேவியும், டி.வி. அன்னபூரணியும் பிரமாதமாக நடித்தனர். பிறகு 'நவீன மார்க்கண்டேயா,' திருவள்ளுவர், வானரசேனை ஆகிய படங்களில் நடித்தார் ராமச்சந்திரன்.

'சபாபதி' வந்தது. ரஸிகர்களை வயிறு குலுங்கச் சிரிக்கச் செய்த அற்புதமான ஹாஸ்ய படமாக அமைந்தது அது. டி. ஆர் ராமச்சந்திரன் சபாபதியாகத் தோன்றி 'ஓஹோ' என்று நடித்து தமிழ் நாட்டின் 'எட்டி காண்டர்' எனப் புகழ் பெற்ஞர். அவரோடு ஆர். பத்மா, காளி என். ரத்தினம். கே. சாரங்கபாணி முதலியோர் நடித்தனர். சபாபதியில் நடித்த பின்பு, ராமச்சந்திரன் பிரகதியிலிருந்து விலகி தேவகன்யா, கண்ணகி, திவான்பகதூர், பிரபாவதி, குண்டலகேசி, பூம்பாவை, மானசம்ரக்ஷணம், சகடயோகம், வித்யாபதி, சௌசௌ, அர்த்தநாரி, விஜயலக்ஷ்மி, ஸ்ரீவள்ளி, லவங்கி, நாம் இருவர், ஜெமினி ஞானசௌந்தரி, சம்சார நௌகா, மகாத்மா உதங்கர் முதலிய பலபடங்களில் நடித்தார். நாம் இருவர், ஸ்ரீவள்ளி இரண்டும் மேனுவன் வெற்றிப்படங்கள். ஸ்ரீவள்ளி பிரகதியின் முத்திரையிலும், நாம் இருவர் ஏவி. எம. முத்திரையிலும் தயாராயின. இரு படங்களும் ஏவி. எம்., டி. ஆர். ஆர்., மகாலிங்கம் மூவருக்கும பொருளும் புகழும் தந்தன.

பிறகு ஸ்ரீராஜராஜேஸ்வரி பிலிம் கம்பெனியின நவஜீவனத்தில் நடித்தார் ராமச்சந்திரன். மீண்டும் ஏவி. எம். முடன் ஒப்பந்தம் செய்து கொண்டு 'வாழ்க்கை' படத்தில் கதாநாயகனுக நடித்தார். படஉலக சரித்திரத்தில் வாழ்க்கையின் வெற்றியை படஉலகின் வெற்றி என்றே கூறவேண்டும். ஒரு அற்புதமான ஹாஸ்ய சித்திரமான அதன் மூலமதான், முதல் தடவையாக நடித்த வைஜயந்திமாலா நக்ஷத்திரமாகி விட்டார்.

டி. ஆர் ராமச்சந்திரன் அது முதல் ரஸிகர்களின் உள்ளங்களில் அழியா இடம் பெற்று விட்டார். அவரும் வைஜயந்தியும் சிறப்பாக நடித்த அப்படத்தில் சகஸ்ரநாமம், திரௌபதி, சாரங்கபாணி முதலியோர் தரமாக நடித்திருந்தனர். அதன் பின்னர் ராமச்சந்திரன் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரியின் சௌதாமினியில் நடித்தார். அந்தப் படம் சர்வசாதாரணமாக அமைந்து வீட்டாலும் ராமச்சந்திரன் வழக்கம் போல் ஹாஸ்ய பாகத்தில் சிறப்பாகவே நடித்தார்.

இதன் பின்னர் ஜீவிதம் (வாழக்கையின் தெலுங்குப் பதிப்பு), சிங்காரி, மங்களா (தெலுங்கு), சம்சாரம் முதலிய படங்களில் நடித்தார் ராமச்சந்திரன். அதன் பின் சமீபமாக வெளிவந்த மருமகள், மனிதனும் மிருகமும் ஆகிய படங்களில் ஹாஸ்ய பாகத்தில் சிறப்பாக நடித்தார் அவர்.

ஏ. டி. கே., கே. சாரங்கபாணி, அப்துல்காதர் ஆகியோருடன் கூட்டாக அவர் ஆரம்பித்த ஜெயந்திபுரொடக்ஷன்ஸார் 'கல்கி'யின் பொய்மான் கரடு 'கதையை' பொன்வயல் என்ற பெயரில் வெளியிட்டார்கள். ராமச்சந்திரன் செங்கோட கவுண்டராக நடித்தார் கதை கொலை செய்யப்பட்டதாலும் ராமச்சந்திரன், சாரங்கபாணி முதலியோர் நன்கு நடிக்க இடமில்லாது போய்விட்டதாலும் படம் வெற்றி பெறவில்லை. மற்ற படங்களில் திறமையுடன் நடிக்கும் இந்த இரு கலைஞரும் சொந்தப் படத்தில ஏனோ நன்ருக நடிக்கவில்லை.

ராமச்சந்திரன் ஒரு ஹாஸ்ய நடிகர் மட்டுமல்ல; குணசித்திர நடிகரும் கூட என்பதை விளக்கியது ஜெமினியின் 'ராஜி என் கண்மணி' படமாகும்.

ராமு!

தனக்கென்று எதுவுமே இல்லாத நல்லவன்; உற்ருர் உறமுறையோர் இல்லை; உண்ண உணவில்லை; உடுக்க உடையில்லை; இருக்க இடமில்லை. ஊசலாடும் உயிருடன் அவ்வப்போது கிடைப்பதைக் கொண்டு காரணமில்லாமல்—குறிக்கோள் இல்லாமல் — வாழ்ந்தான் ராமு.

யாரிடமும் உதவி பெற முடியாத அந்த ஏழை. கண்ணிழந்த கன்னி ராஜிக்கு உதவி செய்கிருன். அவள் நல்வாழ்வுக்காகவே அவன் வாழ்கிருன். இப்போது அவன் வாழக் காரணம் ஏற்பட்டு விட்டது. அவளுக்காக அவன் சிறை சென்று திரும்பியதும் அவள் வேருெருவனின் மனைவியாகி விட்டதை யறிந்து, தன் கடமை முடிந்ததென கால் சென்ற வழியே சென்ருன். அவன் மீண்டும் அனாதை; அவனைப் பற்றிய கவலை இப்போது மீண்டும் அவனுக்கு இல்லை. ராமு ஒரு துரதிருஷ்டசாலி; நடைப்பிணம்.

இந்த ராமுவாக நடித்த டி. ஆர் ராமசசந்திரன் தனது நடிப்புத் திறமையால் நம் உள்ளத்தில் ஒரு தனி இடம் பெற்று விட்டார். ராமுவை நினைக்கும்போதெல்லாம் நம் உள்ளம் வேதனைப்படுகிறது அவனுக்காக நம் மனம் அனுதாபப் படுகிறது. இந்த ராமுவாக ஐக்கியமாகி விட்ட ராமச்சந்திரன், இதே படத்தில் ஹாஸ்ய கட்டங்களிலும் நம்மைச் சிரித்துச் சிரித்து வயிறு புண்ணுகும் படிச் செய்து விட்டார். குத்துச் சண்டை, மெழுகு சாப்பிடும் இடம் இதெல்லாம் பிரமாதமாக இருந்தன.

மனிதனும் மிருகமும் படத்திலிருந்தே ராமச்சந்திரன் சிரிஸ் ஆரம்பமாகிவிட்டது. பொன் வயலும் உடன் வந்தது. அதைத் தொடாந்து ராஜி என் கண்மணி வந்தது தற்போது வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் 'கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி'யில் கதாநாயகன் கணபதியாக நடித்திருக்கிருர் ராமச்சந்திரன். பத்மினி பிக்சாஸாரின் தயாரிப்பான இதில் அவருடன் சிவாஜி கணேசன் பத்மினி, ராகினி, பந்துலு முதலியோர் நடித்திருக்கின்றனர். ப. நீலகண்டன் அருமையாக வசனம் எழுதி



யிருக்கிறார். டைரக்டரும் அவரே தான்.

மேடை விஸ்வாமித்திரரைக் கண்டிக்குமிடத்திலும், ராகினி தேவியுடன் சம்பந்தப்பட்ட காட்சிகளிலும் பிரமாதமாக நடித்திருக்கிறார் ராமச்சந்திரன். ஜெயந்தி புரொடக்ஷனரின் 'பங்காரு பூமி'யில் ராமச்சந்திரன் நடித்திருக்கிறார். இனிவரும் படங்களில எல்லாம் அவர் சந்தர்ப்பம் பெற்றால் அதில் ஆச்சரியமில்லை.

டி. ஆர். ராமச்சந்திரன் 1948-ம் ஆண்டில் திருமணம் செய்து கொண்டார். அவருக்கு ஜெயந்தி, வசந்தி என்ற இரு பெண்கள் இருக்கிறார்கள். ஜெயந்தியின் பெயரால் தான் தனது படக்கம்பெனியை அவர் ஆரம்பித்தார். ராமச்சந்திரனிடம் ஒரு நாய் இருக்கிறது. குதிரையாகவும் உபயோகித்துக் கொள்ளக்கூடியது! தவறி யாராவது உள்ளே நுழைந்தால் அது குரைக்கும் சப்தத்திலேயே பாதி உயிர் போய்விடும்! அவரது சகோதரர்கள் ஊரிலேயே இருக்கிறார்கள்.

ராமச்சந்திரனின் சிறந்த பொழுது போக்கு போட்டோ பிடிப்பதுதான். தனது 'ரோலி பிளக்ஸ்' காமிராவில் தினசரி எதையாவது போட்டு அடைத்துக் கொண்டே யிருப்பார் அவர். அவருடைய படங்கள் பத்திரிகைப் பிரவேசம் செய்திருக்கின்றன. கிரிக்கெட் ஆடுவதிலும் அவருக்கு அபார மோகம்.

சிவந்த நிறமும் குறைந்த உயரமும் கொண்ட ராமச்சந்திரன் ஹாஸ்ய பாத்திரங்களில் பிரமாதமாகச் சோபிக்கிறார் அவரது கண்கள் அவருக்குத் தனிச்சிறப்பைக் கொடுக்க வல்லவை. உருண்டு பெரிதாக இருக்கும் அவைகளால்தான்முதன்முதலில் அவர் ஒரு ஹாஸ்ய நடிகராக முடிந்தது. எட்டிகாண்டர் எனப் புகழப்படும் ராமச்சந்திரன் தனக்கென தனிப் பாணியைச சிருஷ்டித்துக் கொண்டிருக்கிறார். அவ்வளவு லகுவில் பின்பற்றக்கூடாத பாணி அவருடையது.

பழகுவதற்கு மிகவும் ஏற்றவர் அவர். சிரிக்கச் சிரிக்கப்பேசி, வருகிறவர்களின் கவலைகளை மறக்கும் படிச் செய்து விடுவார். ராமச்சந்திரனுக்குக் கட்சி, மத, பேதம் இவை பற்றி ஒன்றுமே தெரியாது. 'அது என் பாணிக்கு உகந்ததலல' என்கிறார் அவர் விரோதியையும் தன் வசப் படுத்தும் ஹாஸ்ய நடிகரான அவர் கட்சிப் பாகுபாடு இல்லாதிருப்பதில் ஆச்சரியமில்லை. அவரும் அவரது கம்பெனி பாகஸ்தர்களுமே அதற்குச் சாட்சி கூறுவார்கள்! டாம்பீகமோ, கர்வமோ இல்லாத எளிய மனப்பான்மையுள்ளவர் ராமச்சந்திரன்! 'செட்'டிலும் அவரால் யாருக்கும் சிரமமிருக்காது. தெய்வபக்தியுள்ளவர்.

"சாதாரணமாகவே எந்தக் கலையிலும் ஜாதி, மதம், கட்சி இவைகளுக்கு இடமளிக்கக் கூடாது. வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் ஒரே கலையில் ஈடுபடும்போது, தங்கள் தங்கள் மதம் கட்சி இவைகளுக்கு இடம் கொடுத்தால் கலையிலேயே பாகுபாடுகளுக்கும் பூசலுக்கும் இடமுண்டாகி விடும் ஆகையினால் கலையில் பங்கெடுத்துக் கொள்ளும் நேரம் போக மிகுதி நேரங்களில் கட்சி, மதம் இவைகளுக்காகப் பாடுபடும் யாரையும் யாரும தடுக்க மாட்டார்கள். கலை வளர்ச்சியில் மட்டும் யாவரும் குறிக்கோளுடன் இருக்க வேண்டும்" என்கிறார் ராமச்சந்திரன்.

'வாழ்க்கைப் பாதையில் நடந்து கொண்டேயிருந்தேன். எதிரே வருகிறவர் கூடத் தெரியாத கும்மிருட்டு பாதையில்தான் போகிறேனா இல்லையா என்றே தெரியாது. அப்போதுதான் அம்மன் கிருபை செய்து வழி காட்டினாள்' என்று பரவசத்துடன் மெய்சிலிர்க்கக் கூறுகிறார் ராம்ச்சந்திரன். அவருக்கு ஆதரவளித்து இன்றைய நிலைக்குக் கொண்டுவரக் காரணமாயிருந்தவர் ஏவி. எம். என்பதையும் அவர் மறக்கவில்லை. ஏவி. எம். மிடம் கௌரவமும் பக்தியும் அவருக்கு இருக்கின்றன.

வாழ்க்கையின் இரு கரைகளையும கண்டு அனுபவித்தவர் ராமச்சந்திரன். அவரைப் போன்ற அனுபவஸ்தர்களின் தொண்டு படவுலகிற்குத் தேவை. கிடைக்கும் என்று திடமாக நம்புகிறேன்.

—எஸ். வி. சம்பத்குமார்.

பத்மினி பிக்சர்ஸ்...

கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி

திரைக் கதை — வசனம்

பாலசுந்தரம் வீட்டில் அவர் மகன் கணபதி தன் அறையிலுட்கார்ந்து கொண்டிருக்கிருன். அவன் கையிலிருக்கும் 'பிரம்மச்சரியம்' என்ற புத்தகத்தை அவன் உரக்கப் படிக்கிருன்.

கண : அன்பர்களே! பிரம்மச்சரியம் என்பது அருமையான வரப்பிரசாதம். வானுலக இன்பத்தை இவ்வையகத்தில் அனுபவிக்க ஆசைப்படுகிறவர்கள் பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். பிரம்மச்சரியத்திஞல் உள்ளம் உறுதியடையும். உரம் பெறும். முகத்தில் ஞான ஒளி வீசும்....

கண : ஆஹா! முகத்திலே ஞான ஒளி வீசும் (மேஜை மீதிருந்த கண்ணுடியை எடுத்து முகத்தைப் பார்த்துக் கொண்டே) ஆமா இப்ப நம்ப முகத்திலே ஞான ஒளி வீசுதோ? வீசும்... வீசும்! (மீண்டும் படிக்கிருன்) பிரம்மச்சரியம் சினத்தை அடக்கும். சினத்தை அடக்கிஞல் சிந்தை அடங்கும். ஆமா . சிந்தை அடங்கிஞல் சிங்கத்தை அடக்கலாம். ஹூம், சிங்கத்தைக்கூட அடக்கலாமா...? நீர் மேல் நடக்கலாம். நெருப்பில் படுக்கலாம். காலனைத் தடுக்கலாம்... ககனத்தில் பறக்கலாம் ... ஆஹா ... ஆஹா....



ப நீலகண்டன்
டைரக்டர் & வசனகர்த்தா

வெளியில் குழந்தைகள் கூச்சல் போட்டுக்கொண்டு விளையாடுவது அவன் காதில் விழுகிறது அவன் தொடர்ந்து படித்துக் கொண்டேயிருக்கிருன்.

கண : நான்ஸென்ஸ்! சைத்தான் மனிதனைக் கெடுக்க எண்ணினுன். பூமிக்கடியில் தங்கத்தையும் வைரத்தையும் புதைத்து வைத்தான். மரங்களிலே மதுரசத்தை உண்டாக்கிஞன். கடலுக்கடியில் முத்துக்களைப் பரப்பிஞன். இதனுலெல்லாம் மனிதன் கெட்டுப் போகவில்லை. பேஷ்! சைத்தான் யோசித்தான். பூமிக்கு ஒரு பெண்ணை அனுப்பி வைத்தான் அவ்வளவுதான்! மனிதன் கெட்டே போனுன்.

தெருக்குழந்தைகளின் சப்தத்தால் கணபதியால் தொடர்ந்து படிக்க முடியவில்லை. அதனுல் கோபமடைகிருன். "இடியட்!" என்று சொல்லிக் கொண்டே மாடியிலிருந்து கணபதி கீழே வருகிருன். தெருவில் அவன் வீட்டு



வேலைக்காரன் தன் குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருக்கிறான். கணபதி கோபத்துடன் வருவதைக் கண்டு குழந்தைகளின் சப்தம் நின்று விடுகிறது.

கண : டேய்! முத்தழகு!

முத்தழகு : எஜமான்!

கண : இதென்ன வீடா, சந்தக் கடையா?

முத் : நீங்க ஒரு பைத்தியம். குடும்பமுன்னா இப்படித்தான் இருக்கும்.

கண : ஆமா... குடும்பம்! டஜன் கணக்கிலே குழந்தைங்களைப் பெத்து வச்சுக்கிட்டு குடும்பமாமில்லே குடும்பம்.

முத் : இதுக்கு நானல்ல வருத்தப் படணும்...

கண : டேய்! இனிமே ஒவ்வொரு குடும்பத்திலேயும் இவ்வளவுதான் குழந்தைகளைப் பெத்து வச்சுக்கலாமுன்னு ஒரு கட்டுப்பாடு சட்டம் வரணும்டா நம்ப இந்தியாவிலே.

முத்தழகு சிரிக்கிறான்.

கண : இனிமேலாவது பிரம்மச் சாரியா இருந்து தொலையடா!

முத்தழகின் மனைவி : பிரம்மச் சாரின்னு என்னுங்க?

கண : பிரம்மச்சாரின்னு...பிரம்ம . பிரம்மச்சாரின்னு.. பிரம்மச்சாரி..... இதுக்குத்தான் கல்வி அறிவு வேணுங்கறது. இடியட்!

கணபதி திரும்பிப் போகிறான்.

கணபதி வீட்டில் அவன் தகப்பனார் பாலசுந்தரம் தன் மனைவியிடம் பேசிக் கொண்டிருக்கிறார்.

பால : என்னடியம்மா பார்வதி! ஒன் பிள்ளையினுடைய பிரம்மச்சரியம் முத்திகிட்டே போகுதே...

பார்வதி : ஏண்டா கணபதி! எப்பத்தாண்டா ஒன் பிரம்மச்சரியத்துக்கு ஒரு முடிவு வரும்?

கண : வராது. ஒரு நாளும்வராது! அமெரிக்கா அணுகுண்டைக் கைவிட்டாலும்சரி, ரஷ்யா ஹைட்ரஜன் குண்டைக் கைவிட்டாலும்சரி, இந்தக்

கணபதி தன் பிரம்மச்சரிய லட்சியத்தைக் கைவிடமாட்டான்.

பால: டேய்.. டேய் நிறுத்துடா! பெரிய லட்சியவாதிக்குப் பொறந்த பயதான்.

கண : ஆமா..

பார் : ஏண்டா கணபதி! காலா காலத்திலே ஒரு கல்யாணத்தை பண்ணினுதானேடா எங்க காலத்துக்குள்ளே ஒரு பேரன், பேத்தியைப் பார்த்து ஆனந்தப்படலாம்.

கண : அடடா... பொழுது விடிஞ்சு பொழுதுபோனு இதானு... கல்யாணத்தைப் பண்ணிக்க, பிள்ளையைப் பெத்துக்க, கல்யாணத்தைப் பண்ணிக்க பிள்ளையைப் பெத்துக்க. அப்படியென்ன இந்த உலகத்திலே பிள்ளைப்பஞ்சம் வந்துட்டது! அதான் ஒரு நாளைக்கு எழுபத்திரெண்டாயிரம் குழந்தைகள் பொறக்குதாமே!

பால : அட .. யார்ரா ... அறிவு கெட்டவனு இருக்கியே?

இவர்கள் பேசிக்கொள்வதை வீட்டின் பின்புறமிருந்து கேட்டுக் கொண்டிருந்த வேலையாள் முத்தழகு அங்கு வருகிருன்.

பால : உலகத்தைப் பற்றி ஏண்டா பேசறே? வீட்டிலே குவான்னு கத்தறதுக்கு ஒரு குழந்தை இல்லேன்னு..

கண : அதுக்கென்ன? இந்தியாவிலேதான் அனுதைக் குழந்தைங்க ஆயிரக்கணக்கிலே இருக்குதே .. ஒண்ணெ ன்ன, ஒரு ஏழெட்டைப் பிடிச்சுக் கொண்டாந்து கத்தவிடுங்களேன்.

பால : அது ஒன்னைச் சொல்லிக் குத்தமில்லே பா.. நான் பிரம்மச்சாரியா இருந்திருக்கணும்.

முத்தழகு : ஆமா ... எஜமான்.

கண: ஊக்கும்!

பார் : இப்படியே விட்டுக்கிட்டிருந்தா முடிவுதான் என்ன?

பால : இதுக்கு என்ன பண்ணச் சொல்றே? ..வேணும்னு அவனைக் கட்டிவச்சு ஒதைக்கலாம்; கல்யாணத்தை எப்படி பண்ணி வைக்கிறது?

முத் : வந்து...

பால : என்ன...?

முத் : நல்ல அழகான பெண்களோடே பழகவசசா அவருக்கு மனசு மாறினலும் மாறிடும். எஜமான்

பால : ஆமாண்டா இந்தப் புள்ளையெ பெத்த லக்ஷணத்துக்கு அந்த உத்தியோகம் ஒண்ணுதான் பாக்கி. அடெ, போடா போடா...

முத் : அப்ப ஒண்ணு செய்யுங்க. எஜமான் ..ஓங்க தங்கச்சி மகளே வரவழைச்சு சின்னையாவுக்குப் புத்திமதி சொல்லச் சொன்னு

பால : சொன்னு ..

முத் : சின்னஞ்சிறுசுங்க ... அதுகளா கலந்து பேசி ஒரு முடிவுக்கு வந்தாலும் வந்துடுவாங்க!

பால : அடே ஹூம் . உனக்கு யாரோ மூளை இலலேன்னு சொன்னுங்களே...

முத் : அது இல்லாதவங்க யாரா

பாத்திரங்கள்

பத்மினி	பத்மினி
ராகினி	சாவித்திரி
சிவாஜி கணேசன்	
	அம்பலவாணன்
டி. ஆர். ராமச்சந்திரன்	கணபதி
பி. ஆர். பந்துலு	ஆனந்தரங்கம்
கணபதி	கோதண்டம்

வது சொல்லியிருப்பாங்க எஜமான்.

பால: ஹூம்...சரிதான். அப்ப... பார்வதி...அம்பலவாணனை வரச் சொல்லி லெட்டர் எழுதிடட்டுமா?

பார்: ஏன்.. ஒரு தந்திதான் கொடுத்து வையுங்களேன்.

காட்சி 2

சென்னையில் காலேஜில் அம்பலவாணன் படித்துக் கொண்டிருக்கிருன். காலேஜ் விடுமுறை ஆரம்பமாகிவிடவே மாணவர்கள் தங்கள் ஊருக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். அம்பலவாணன் தன் காலேஜ் காதலி பத்மினியை ஊருக்கனுப்புவதில் முனைந்திருக்கிருன்.

பத்: மிஸ்டர்...அம்பலவாணன்!

அம்: ஹூம்..

பத்: கொஞ்சம் ஹெல்ப் பண்ணினு என்னவாம்? (பத்மினிக்கு

பெட்டி படுக்கைகளைக் கட்டுவதில் உதவி செய்கிருன்)

பத்: அப்ப...ரொம்ப தாங்ஸ்...

அம்: அப்பா ... கணேசா ... விக்னேச்வரா!.. நானும் பத்மினியும் இந்த வருஷம் பாஸாகக்கூடாதுடா...அப்பனே! உனக்கு ஆயிரத்து நூறு தேங்காய் சூரைவிடரேண்டா.. எங்கப்பா. பப்பி!...(அவளைத் தொடப் போகிருன். பத்மினி நகர்ந்து கொள்கிருள்)

அம்: ஏன்...?

பத்: அதெல்லாம் கல்யாணத்துக்கப்புறம். (அப்போது வெளியிலிருந்து 'ஸார்' என்று யாரோ கூப்பிடும் சப்தம் கேட்கிறது)

அம்: யார்ரா அவன்?...தேனைக் குடிக்கிறபோது தேள்கொட்டின மாதிரி!(பையன் உள்ளே நுழைகிருன்)

அம்: வாடா ராவுகாலம்! நான் இங்கே இருக்கிறது உனக்கெப்படிடா தெரியும்?

பையன்: உங்களை எனக்குத் தெரியாதுங்களா? வீட்லே இல்லாத போனு இங்கேதானே இருக்கப் போறீங்க...

பையன் தன் சட்டைப்பையிலிருந்து ஒரு தந்திக் கவரை எடுத்துக் கொடுக்கிருன்.

அம்: என்னடா தந்தி இது ? அட்டை மாதிரி விடமாட்டான் இத் தப்பய நம்மளை...

தந்தியைப் படிக்கிருன். பாலசுந்தரம்'தன் மகன் கணபதியின் கல்யாணம் சம்பந்தமாக அம்பலவாணனுடன் கலந்தாலோசிக்க விரும்புவதால் அவனை உடனே புறப்பட்டு வரச்சொல்லி' மதுரையிலிருந்து தந்தியடித்திருந்தார்.

அம்: பப்பி! நானும் உன்கூட மெஜூராவுக்கு வரேன்...

பத்: ஆஹா...ஹா...பிரமாதம்.

அம்: பப்பி...நாளைக்கு

பத்: சாயந்திரம்!...

அம்பலம் தன் மூட்டை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டே

அம்: எங்கே?

பத்: தெப்பக்குளத்திலே...

அம் : (திகைப்புடன்) ஹூம்!

பத் : பக்கத்திலேயே இருக்கிற பார்க்கிலே...

இருவரும் சிரிக்கிறார்கள்.

மதுரை வந்து சேர்ந்த அம்பலவாணனை வரவேற்கிறார் பாலசுந்தரம்.

பால : வாடாப்பா!

அம் : வரேன் மாமா...

பார் : வாப்பா...

அம் : வரேன் அத்தை.

பால: உக்காரு...என்ன வீட்லே எல்லாம் சௌக்யம்தானே?

அம் : ரொம்ப சௌக்கியந்தான் மாமா. கல்யாண விஷயமா என்னமோ பேசணும்னு தந்தி குடுத்திருக்காங்களே...

பால : ஆமா...

அம் : கணபதி சம்மதிச்சிட்டானா...?

பால : அவன் சம்மதிச்சிருந்தா தந்தி ஏன் வருது? அழைப்பிலலே வந்திருக்கும்?

அம் : அப்படின்னா இன்னும் அவன் பைத்தியம் தெளியலியா?...

முத் : அந்த வயித்தெரிச்சலை ஏன் கேக்கறீங்க?

அம் : உன் விஷயத்திலே அது கரெக்டுதாம்ப்பா. ஏயப்பா!...

முத் : உம்...

அம் : இப்ப உனக்கு ஏழு குழந்தைதானே...?

முத் : இல்லீங்க...போன அமாவாசைக்கு பொறந்ததுங்களே, அதைச் சேர்த்து எட்டு.

அம் : ஐயே!

பால : இத பாரு அம்பலம், எங்களாலே முடிஞ்சவரைக்கும் கணபதிக்கு புத்தி சொல்லிப் பார்த்தோம்.

அம் : ஒண்ணும் நடக்கலேபோலிருக்கு.

பார்வதி அம்பலவாணனுக்குக் காப்பி கொண்டு வருகிறாள்.

பார் : ஆமாப்பா. இனிமே நீ தான் அவனுக்குப் புத்திசொல்லி...

அம் : பிரம்மச்சாரியே இரகஸ்தனாக்கணும், அவ்வளவுதானே?

பால : அவ்வளவுதாம்ப்பா!

அம் : அத்தை நீங்க கவலைப்படாதீங்க. இதுக்கு நான் ஒரு அருமையான ஐடியா பண்றேன்.

முத் : ஏதாவது பண்ணுங்க எஜமான்.

அம் : அப்படிங்களா...

கணபதி ஆர்மோனியம் வாசிப்பதைப்பார்க்கிறான் அம்பலவாணன்.

கண : ஸா...ரீ...க...க...நான் சென்ஸ்.

அம் : சங்கீதத்துக்கும் உனக்கும் என்னடா சம்பந்தம்? பேசாம பெட்டியை வையடா. எங்கப்பா...

கண : அம்பலம்! அம்பலம்!

கணபதி அம்பலத்தைக் கண்டதும் ஆச்சர்யப்படுகிறான்.

அம் : டேய்...டேய்...டேய் சிசி!

கண : என்னடா இப்படி திடீர்னு வநதுட்டே! டேய்! நம்ப போண்டா சுப்பனெல்லாம் எப்படிடா இருக்கான?

அம்: அவன் முன்னை விடக் கொஞ்சம் உப்பியிருக்கான்டா

கண: ஆமா! இந்த குரங்குமணி?

அம் : அவன் பிரம்மச்சாரியாவே இருக்கப்போறேன்னு சொல்லீண்டு திரிஞ்சான்ல..?

கண : ஆமா... இப்ப என்ன கல்யாணம் பண்ணிக்கிட்டானு?

அம் : அப்படிச் செஞ்சிருந்தாத்தான பரவாயில்லையே!

கண : பின்னே ?

அம் : இப்ப பைத்தியம் புடிச்சி தெருத்தெருவா அலையருன்.

கண : ஏண்டா?

அம் : சரியான வயசிலே கல்யாணம பண்ணிக்காததினுலேதான்.

கண : உண்மையாகவா?

திகைத்துப் போகிருன் கணபதி.

கண : ஐயையோ! இதென்னடா கூத்து?

அம் : கூத்துமில்லே, நாடகமுமில்லே! இது லேட்டஸ்ட் அமெரிக்கன் ஆராய்சசி. சரியான வயசிலே கல்யாணம் பண்ணிக்கலே, அவனுடைய மூளை நரம்பு படார்னு தெரிச்சி அவனுக்குப் பைத்தியம் புடிச்சிடும்.

கண : உம். பைத்தியம் புடுச்சிடுமா?

அப்போது வேலையாள் முத்தழகு வருகிருன். பாலசுந்தரம் தனக்கு வேலைத் தொந்திரவாக இருப்பதால் கணபதியை பள்ளி ஆண்டு விழாவைபவத்திற்குப் போகச் சொன்னதாகச் சொல்லி அழைப்பிதழைக் கொடுக்கிருன். கணபதி அதை வாங்கி வெறுப்புடன் வீசுகிருன்.

கண : வேற வேலையில்லை.

அம் : என்னப்பாது! வெறுப்பாத் தூக்கிப் போடுறே? "பழைய மாணவர் சங்க ஆண்டு விழா"

கண : அதிருக்கட்டும். பார்த்தியா டான்ஸாம் டான்ஸ். டின்னர்லே டான்ஸ், டீபார்ட்டிலே டான்ஸ், படத்திலே டான்ஸ், பள்ளிக்கூடத்திலே டான்ஸ், கல்யாணத்திலே டான்ஸ், கண்ட எடங்கள்ளே எல்லாம் டான்ஸ்! சே...சே சகிக்கலேப்பா இது! அம்பலம், இன்னும் ஐம்பது வருஷத்துக்கு நம்ப இந்தியாவிலே யாருமே டான்ஸே ஆடக்கூடாதுன்னு ஒரு சட்டம் வரணும்.

அம் : உம். நீ சர்வாதிகாரியா வரும்போது அந்தச் சட்டத்தைப் போட்டுக்கலாம். இப்ப ஆண்டு விழாவுக்குப் போயிட்டுவா...

கண: போடா! வேற வேலையில்லை.

அம் : டேய்..உன்ன ஒரு மனுஷன்னு மதிச்சுத்தானே இந்தப் பத்திரிக்கை அனுப்பிச்சிருக்கான்? அதுக்காகவாவது போயிட்டு வாடா

கண : அப்ப நீயும் வாடா...

அம் : உம்...உம் நம்பளை டச்சுப் பண்ணுதே. டேஞ்சர்! நமக்கு வேற வேலை இருக்கு. இன்னைக்கு நான் அம்பாளை தரிசிக்கப் போகணும்.

(85-ம் பக்கம் பார்க்க)


ஏவி.எம்.
பெண்
படக்காட்சிகள்



'இதுவரை
இவ்வளவு
நக்ஷத்திரங்
கள் சேர்ந்து
ஒரு படத்தில்
நடித்ததில்லை;
இதுவரை இவ்
வளவு அற்புத
மான நடனங்
கள் எந்தப்



படத்திலும் இருந்த
தில்லை; இவ்வளவு
இனிமையான பாட
ல்களை இது வரை
கேட்டதில்லை; இது
வரை இவ்வளவு
பிரம்மாண்டமான
காட்சி ஜோடனை
கள் எந்தப் படத்தி
லும் அமைக்கப்பட்

டதில்லை')என்
றெல்லாம் ரஸி
கர்களின்
அபிப்பிராய
த்தைப்பெறப்
போகிறுள்
ஏவி எம். மின்
பெண்.

'பெண்'ணி
ன் கதை, வச
னங்களை 'ரா
வே' அருமை

யாக எழுதியிருக்கிறார். எம். வி. ராமன் தனது முழுத்திறமையை யும் இப்படத்தின் மூலம் வெளிப் படுத்தியிருக்கிறார். 'பெண் விரை வில் திக்விஜயத்திற்குக் கிளம்பப் போகிறாள்.


AVM
புரொடக்ஷன்ஸ்

செய்திச் சுருள்

விளையாட்டு பொம்மை

குமாரி கமலா முதல் தடவையாகப் பிரதம பாகத்தில் தோன்றி நடிக்கும் 'விளையாட்டு பொம்மை' ஒரு ரஸிக ரஞ்சகமான படமாகத் தயாரிக்கப் பட்டுள்ளது. நீண்ட நாட்களுக்குப் பின் மகாலிங்கத்தை இப்படத்தில் நேயர்கள் சந்திக்கப் போகிறார்கள் தமது சொந்தப்படமான இதில் அதி யற்புதமாகப் பாடி, அபாரமாக நடித்திருக்கிறார் மகாலிங்கம். ஸ்ரீ சுகுமார் புரொடக்ஷன்ஸாரின் நான்காவது வெளியீடான இதை டி. ஆர். ரகுநாத் டைரக்ட் செய்து வருகிறார். ரோஹிணியில் தயாராகும் இப்படத்தில் டி. கே. ராமச்சந்திரன், பி. ஆர். பந்துலு, தங்கவேலு, இ. வி. சரோஜா, பேபி ராதா மற்றும் பலரும் நடித்து வருகிறார்கள். 'விளையாட்டு பொம்மை'யை இம்மாதம் ரஸிகர்கள் பார்வைக்கனுப்ப மகாலிங்கம் ஏற்பாடுகள் செய்து வருகிறார்.

போன மச்சான் திரும்பிவந்தான்

மெர்க்குரி பிலிம்ஸார் தயாரித்து வரும் 'தமிலனி'ன் ஹாஸ்யப் படத்திற்கு 'போன மச்சான் திரும்பி வந்தான்' என்று இப்போது பெயர் தரப் பட்டிருக்கிறது. நியூடோன் ஸ்டுடியோவில் தயாராகும் இப்படத்தில் குசலகுமாரி பிரதான பாகத்தில் நடித்து வருகிறார். சமீபத்தில் இப்படத்திற்கான மூன்று பாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டன. இந்த மச்சானை விரைவிலேயே சுட்டுத்தள்ளி, வெளியே அனுப்பிவிட வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறார் தயாரிப்பாளர் டி. எஸ். வெங்கடசாமி.

மிஸ். அம்மா

'சந்திரஹாரம்' என்ற பிரம்மாண்ட தயாரிப்பை வெளியிட்ட விஜயா புரொடக்ஷன்ஸார் மிஸ். அம்மா என்ற ஹாஸ்யப் படத்தை அடுத்தபடியாக உருவாக்கப் போகிறார்கள். பிரஸாத் இந்தப் படத்தை டைரக்ட் செய்ய அமர்த்தப் பட்டிருக்கிறார். பானுமதி, என். டி. ராமராவ், நாகேஸ்வர ராவ் முதலியோர் இப்

'நல்ல கால'த்தில் எம். கே ராதா நடிக்கிறார்.

சாவித்திரி—'பரிவர்த்தனை'யில்.

படத்தில் நடிக்கப் போகிறார்கள். விஜயாவின் இத்தயாரிப்பு ஒரு புது மாதிரியான கதைப் போக்குடையதாகும்.

நள்ளிரவில் நடந்தது

சென்னை ரஸிக ரஞ்சனி சபையில் 'நள்ளிரவில் நடந்தது!' என்ற நாடகம் சமீபத்தில் நடைபெற்றது. ஒய். ஜி. பார்த்தஸாரதி குழுவினர் நடித்த இந்த நாடகத்தை ரேவதி புரொடக்ஷன்ஸார் அடுத்தபடியாக படமாகத் தயாரிக்கப் போகிறார்கள். கே. வேம்பு இப்படத்தை டைரக்ட் செய்வார் என்று தெரிகிறது. ஜூன் மாத வாக்கில் படப்பிடிப்பு ஆரம்பமாகும்.

மலைக்கள்வன்

பானுமதி பிரதம பாகத்தில் நடித்து வரும் மற்றொரு படம் மலைக் கள்வனாகும். பக்ஷிராஜாவின் தயாரிப்பான இப்படம் எஸ். எம். ஸ்ரீராமுலு நாயுடுவின் டைரக்ஷனில் வளர்ந்து வருகிறது. பானுமதியுடன் கதாநாயகனாக எம். ஜி. ராம்சந்தர் நடித்து வருகிறார். நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளையின் கதை இது. தமிழ் தெலுங்கு இரு பாஷைகளிலும் மலைக்கள்வன் உருவாகி வருகிறது. தெலுங்குப் பதிப்பில் எம். ஜி. ராமசந்தருக்குப் பதிலாக என். டி. ராமராவ் நடித்து வருகிறார்.

என் மகள்

எஸ். வரலக்ஷ்மி, விமலா, ரஞ்சன், நம்பியார் முதலியோர் நடித்துவரும் அசோகா பிக்சர்ஸாரின் என் மகள் படம் முடிவடையும் தருவாயிலிருக்கிறது. ரேவதியில் தயாராகி வரும் இப்படத்தை கே. வி. ஆர்: ஆசார்யா, நம்பியார் டைரக்ட் செய்து வருகிறார்கள்.

புது வாழ்வு

எம். கே. தியாகராஜ பாகவதர் தயாரித்து வரும் புது வாழ்வு முடிவடையும் தருவாயிலிருக்கிறது. விரைவிலேயே வெள்ளித் திரைக்கு வரவிருக்கும் படங்களில் புது வாழ்வையும் குறிப்பிடலாம். நீண்ட நாட்களுக்குப் பின் பாகவதருடன், கிருஷ்ணன், மதுரம் இருவரும் இதில் சேர்ந்து நடித்து வருகிறார்கள். புது வாழ்வின் நக்ஷத்திர மதிப்பு மிக உயர்ந்தது. லலிதா, மாதுரி தேவி, குமாரி துளசி, டி. எஸ். பாலய்யா போன்ற பல முன்னணி நக்ஷத்திரங்கள் இதில் நடித்து வருகிறார்கள். பாகவதர் இதில் ஏற்று நடித்திருக்கும் பாத்திரமும் புது மாதிரியானதாகும். புது வாழ்வு முதல் முதலாக பாகவதர் டைரக்ட செய்யும் படம் என்பதும் குறிப்பிடத்தக்கது. படம் நியூடோனில் தயாராகி வருகிறது.

கடவுள்

பிரபல பின்னணிப் பாடகரும், சங்கீத டைரக்டருமான கண்டசாலா, தமது இரண்டாவது படத்திற்கான ஆரம்பபூஜையை சென்றமாதம் 26-ம் தேதியன்று வாஹினியில் நடத்தினார். ஷோபா பில்ம்ஸாரின் இரண்டாவது வெளியீடான இப்படம் 'கடவுள்' என்ற பெயரில் தமிழிலும், தெலுங்

இல் 'தெய்வமு' என்ற பெயரிலும் தயாராகும். சில பாடல்கள் இதற்கென அன்று பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

வாடா மலர்

மைசூர் நவஜோதி ஸ்டுடியோவில் 'வாடா மலர்' என்றொரு படம் தமிழ், தெலுங்கு இரு பாஷைகளிலும் தயாராகி வருகிறது. சி. எஸ். எம். நாயுடுவின் டைரக்ஷனில் வளர்ந்து வரும் இப்படத்தில் பல புது முகங்களும், சில முன்னணி நக்ஷத்திரங்களும் நடித்து வருகிறார்கள். இன்னும் இரண்டொரு மாத காலத்தில் இப்படம் திரையிடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வான விளக்கு

'வான விளக்கு' என்ற படத்தை, காலஞ்சென்ற பி. யு. சின்னப்பா தயாரிக்க விருந்தது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். தற்போது அதே கதையை அனுராதா பிக்சர்ஸார் சியாமளா ஸ்டுடியோவில் தயாரிக்க முன் வந்திருக்கிறார்கள். கல்லல் ராமநாதன் 'வான விளக்கு'க்கான கதை, வசனம், பாடல்களை அமைத்துக் கொடுத்திருக்கிறார். எஸ். கே. வாசகம் டைரக்ட் செய்யும் இப்படத்தை ஒரு ரஸிக ரஞ்சகமான படமாக உருவாக்க வேண்டும் என்று, தயாரிப்பாளரான ஜெயராஜ் திட்டமிட்டிருக்கிறார்.

சேவகி

சியாமளா ஸ்டுடியோவிலேயே, பி. யு சின்னப்பா மேடைகளில் நடித்துவந்த 'சேவகி' நாடகமும் படமாக்கப்பட விருக்கிறது. நீண்ட நாட்களுக்குப் பின் கொத்தமங்கலம் சீனு இப்படத்தின் மூலம் திரையுலகில் மீண்டும் அடி எடுத்து வைக்கப் போகிறார். பீ. எஸ். கோவிந்தன், கே. ஆர். வெங்கட்ராமன், எம் எஸ். எஸ். பாக்கியம், காரைக்குடி லக்ஷ்மி மற்றும் பலரும் அவருடன் இதில் நடிக்கப் போகிறார்கள். கதாநாயகியாக எஸ். வரலக்ஷ்மி, பி. கே. சரஸ்வதி இருவரில் யாராவது நடிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சேவகி பிக்சர்ஸ் தயாரிப்பான இப்படமும் எஸ். கே. வாசகம் டைரக்ஷனில் உருவாகப் போகிறது.

அஞ்சலி-'பரிவர்த்தனு'வில்.

கூண்டுக்கிளி

ஆர். ஆர். பிக்சர்ஸின் தயாரிப்பான 'கூண்டுக்கிளி' முடிவடையும் தறுவாயிலிருக்கிறது. ரேவதியில் வளர்ந்து வரும் இப்படத்தை ராமண்ணா டைரக்ட் செய்து வருகிறார். புது மாதிரியான கதைப போக்குடையதும் புரட்சிகரமான கருத்துக்கள் மிகுந்ததுமான இப்படக் கதைக்கு 'விந்தன்' வசனங்களை எழுதியிருக்கிறார். ரஸிகர்களின் அபிமான நக்ஷத்திரங்களான சிவாஜி கணேசன், எம. ஜி. ராம்சந்தர், கே. சாரங்கபாணி, பி. எஸ். சரோஜா, குசலகுமாரி முதலியோர் 'கூண்டுக்கிளி'யின் பிரதான பாகங்களை ஏற்று நடித்து வருகிறார்கள். ராகினி கோஷ் டயாரின் நடனமொன்றும் 'கூண்டுக்கிளி'யின் பிரத்யேக அம்சமாக இருக்குமாம். விரைவில் திரையிடப் பட விருக்கும் படங்களின் வரிசை

'எதிர்பாராதது' படத்தில் பப்பி, துரைசாமி.

போவதாக அறிவித்தனர். ரஸிகர்கள் அன்றைய தினமிருந்தே இப்படத்தை மிக்க ஆவலுடன் எதிர்பார்த்து வருகின்றனர். 'ரத்தக் கண்ணீர்' ரேவதியில் முடிவடையும் தருவாயிலிருக்கிறது என்ற செய்தி திரைப்பட ரஸிகர்களுக்கு நிரம்பவும மகிழ்ச்சியளிக்கும். கிருஷ்ணன் பஞ்சு டைரக்ட் செய்யும் இப்படத்தில் எம். ஆர். ராதாவே பிரதான பாகத்தில் தோன்றுகிறார். தாஸி வேஷத்தில் எம். என். ராஜமும், உத்தம பத்தினியாக ஸ்ரீரஞ்சனியும் நடித்து வருகிறார்கள். கட்டிய மனைவியைக் கைவிட்டு, காமாந்தகாரத்தில் மூழ்கிய கணவன் வேசி ஒருத்தியின் வலையில் வீழ்ந்து, தன் வாழ்க்கையையே வீணடித்துக் கொள்ளும் கதைதான் 'ரத்தக்கண்ணீர்' ஜூன் மாத வாக்கில் இப்படத்தையும் நாம் எதிர்பார்க்கலாம்.

யில் கூண்டுக் கிளியையும் சேர்த்துக் கொள்ளலாம்.

ரத்தக் கண்ணீர்

நேஷனல் பிக்சர்ஸ் பராசக்தியை வெளியிட்ட கையோடு. ரத்தக் கண்ணீரைப் படமாகத் தயாரிக்கப்

'ராஜூபேதா' ஆர். நாகேஸ்வரராவ்

பெண்

ஏவி. எம். மிலிருந்து அடுத்து வெளிவரப்போகும் தமிழ்ப்படம் 'பெண்' என்ற அவர்களது பிரம்மாண்டமான தயாரிப்பாகும். 'பெண்'ணை 'மேனா' பல வருஷங்கள் சீராட்டி, பாங்குற வளர்த்திருக்கிறார். வைஜயந்திமாலாவின் பல நடனங்கள் 'பெண்'ணின் கவர்ச்சிக்கு தனி சோபையை அளிக்கின்றன. 'இந்தியக் கலைக்கு நிகர் வேறில்லை' என்று மேனாட்டு பெண்மணியுடன் சவால் விடுத்து அவர் ஆடும் பரதம், இரு வேஷங்களில் தோன்றும் கிராமிய நடனம் இவை வைஜயந்திமாலாவின் முழுத் திறமையையும் எடுத்துக் காட்டுவதாக அமைந்திருக்கின்றன. 'பெண்' திரைக்கதை வசனத்தை ரா. வெங்கடாசலம் எழுதியிருக்கிறார். 'பெண்'ணை பாமர-பண்டித ரஞ்சகமானவகையில் உருவாக்கியிருக்கிறார் டைரக்டர்

'சதாசுலங்' என்ற சிங்களப் படத்தில் ஒரு காட்சி.

எம். வி. ராமன். 'பெண்'ணில் பல முன்னணி நக்ஷத்திர நடிகர்கள் நடித்திருக்கிறார்கள். அஞ்சலிதேவி, திரௌபதி, நாகய்யா, ஜெமினி கணேசன், எஸ் பாலசந்தர் முதலியோர் 'பெண்'ணில் தங்கள் திறமையைக் காட்டியிருக்கிறார்கள். 'மேனா'வின் செல்வக் குமரியான 'பெண்' ரஸிகர்களின் மனதிற்குப் பிடித்தவளாக இருப்பாள் என்பதில் சந்தேகமில்லை.

மாங்கல்யம்

கோவை சென்டிரல் ஸ்டுடியோவில் எம். ஏ. வி. பிக்சர்ஸ் தயாரித்து வரும் மாங்கல்யம் முடிவடையும் தறுவாயிலிருக்கிறது. 'மாங்கல்யம்' தமிழ் மரபின் விலை மதிக்க முடியாத ஆபரணம் என்பதையும் அதன் சிறப்பையும் இந்தப் படம் விளக்குமாம். ஏ. பி. நாகராஜன் இப்படக்கதை, வசனங்களை எழுதியிருப்பதுடன், பிரதான பாகத்தில் பி.எஸ். சரோஜாவுடன் தோன்றி நடிக்கவும் செய்து வருகிறார். நம்பியார், ராஜசுலோசனா மற்றும் பலரும் இதில் நடித்து வருகிறார்கள். கே. சோமுவின் டைரக்ஷனில் உருவாகிறது 'மாங்கல்யம்'.

நல்ல காலம்

சிட்டடெலில் தயாராகும் ஜெய் சக்தி பிக்சர்ஸாரின் 'நல்ல காலம்' நல்ல முன்னேற்றத்தை அடைந்திருக்கிறது. தவிர நடிகர்கள் பட்டியலில் பல மாறுதல்களும் ஏற்பட்டிருக்கின்றன. எம. கே. ராதா தற்போது இப்படத்தின் கதாநாயகனாக நடித்து வருகிறார். ஹாஸ்ய பாகத்தில் கிருஷ்ணன்—மதுரம் இருவரும் தங்கள் கைவரிசையைக் காட்டப்போகிறார்கள். சமீபத்தில் இவர்கள் சம்பந்தப்பட்ட சில காட்சிகள் படமாக்கப்பட்டன. எம். எல். பதி தயாரித்து வரும் இப் படத்தின் டைரக்டராக கே. வேம்பு அமர்நதிருக்கிறார்.



'கல்யாணம் பண்ணியும் பிரம்மசாரி'யில் கோதண்டமாக நடிக்கும் கணபதி.

ரத்த பாசம்

ஸ்ரீதர் எழுதிய 'ரத்த பாசம்' நாடகத்தை 'ஔவை புரொடக்‌ஷன்ஸ்' என்ற பெயரில், அதை மேடையில் நடித்துக் காட்டிய டி. கே. எஸ். சகோதரர்களே ஜெமினியில் படமாக்கி வருகிறார்கள். பம்பாயிலே இதற்கென சில வெளிப்புறக் காட்சிகள் சுடப்பட்டு வருகின்றன. சகோதரர்களும் தற்போது பம்பாயில் இருந்து வருகிறார்கள். ஆர். எஸ். மணி டைரக்ட் செய்யும் இதில் அஞ்சலிதேவி, வித்யாவதி, பாலய்யா முதலியோர் சகோதரர்களுடன் நடித்த வருகிறார்கள். படப்பிடிப்பின் இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் 'ரத்த பாசம்' இரண்டொரு மாதங்களில் ரஸிகர்களின் அன்பையும் ஆதரவையும் பெற வந்து விடும்.

பெல் பிக்சர்ஸ்

பிரபல பட விநியோகஸ்தர்களான பெல் பிக்சர்ஸார் படத் தயாரிப்பிலும் முனைந்திருக்கின்றனர். விரைவிலேயே அவர்கள் படம் ஆரம்பமாகுமென்று தெரிகிறது.

கனவு

சமீப காலத்தில் வெள்ளித் திரைக்கு வரக்கூடிய படங்கள் ஏராளமாக இருக்கின்றன. ரேவதியில் கே. ஆர். கே.யின் முதல் முயற்சியாக உருவாகும் 'கனவு' படத்தையும் இந்த வரிசையில் குறிப்பிடலாம். லலிதா இப்படத்தில் ஒரு வேலைக்காரப்பெண்ணாக வருகிறாராம் சூழ்ச்சிக்கும் சுயநலத்திற்கும் படிப்பினையூட்டக்கூடிய பாத்திரமாம் அவர் ஏற்றிருப்பது. வி. கே. ராமசாமி, செல்லம் ஸ்ரீநிவாஸன் 'பொள்ளாச்சி கமலா முதலியோர் கனவின் வெற்றிக்குப் பாடுபட்டு வருகிறார்கள். பி. வி. கிருஷ்ணன் இதன் டைரக்டர்.

தூக்குத்தூக்கி

'தூக்குத் தூக்கி' நாடகக் கதையைப் பற்றிக் கேள்விப்படாதவர்களோ, அலலது மேடைகளில அதை காணுதவர்களோ எண்ணிக்கையில் அதிகம் இருக்கமுடியாது. தமிழ் நாட்டின் இன்றைய முன்னணி நக்ஷத்திரங்களான சிவாஜி கணேசன், டி. எஸ். பாலய்யா, லலிதா, பத்மினி முதலியோரைக் கொண்டு 'தூக்குத் தூக்கி'யை ஒரு உயர்ந்த படமாக உருவாக்கி வருகிறார்கள் அருணா பிலிம்ஸார். ஆர். எம். கிருஷ்ணசாமி டைரக்ட் செய்யும் இப்படத்தை எம் ராதாகிருஷ்ணன் அருணாவுக்காகத் தயாரித்து வருகிறார். படம் பிலிம் சென்டரில் சுடப்பட்டு வருகிறது.

செந்தாமரை

மதராஸ் பிக்சர்ஸார் 'செந்தாமரை' என்ற படத்தை நியூடோன் ஸ்டுடியோவில் தயாரித்து வருகிறார்கள். அரங்கண்ணல் இப்படத்திற்கான கதை, வசனங்களை எழுதியிருக்கிறார். பீமன் டைரக்ட் செய்யும் இதில் லலிதா, பத்மினி, எம. கே. ராதா, சிவாஜி கணேசன் முதலியோர் நடித்து வருகிறார்கள்.

புதுயுகம்

ஜி. ராமனாதன் வாஹினியில் தயாரித்து வரும் 'புதுயுகம்' படம் பூர்த்தியாவதற்கு இன்னும் சில காட்சிகள் தாம் இருக்கின்றன. கிருஷ்ணகுமாரி, விமலா, திரௌபதி முதலியோர் இதில் நடித்து வருகின்றனர். டி. ஆர். கோபு, ஜி. எஸ். பாகவதர் இருவரும் கூட்டாக அமர்ந்து டைரக்ட் செய்யும் 'புது யுகம்' ஸ்ரீ ஸாயி கானம்ருதாவின் தயாரிப்பாகும்.

ரேவதியில் புது தெலுங்குப் படங்கள்

ரேவதி ஸ்டுடியோவில் சில புதுப் படங்கள் விரைவிலேயே ஆரம்பமாகவிருக்கின்றன. ஸாதனா பிலிம்ஸார் சம்சாரத்திற்குப் பிறகு 'சந்தானம்' என்ற படத்தை தயாரிக்கப்போகிறார்கள். குழந்தைகளைப் பற்றிய இக் கதையில் என். டி. ராமராவ் நடிக்கப் போகிறார். ரங்கநாததாஸின் கண்காணிப்பில் 'சந்தானம்' வளரும்.

பி. புல்லையா ராகினி பிலிம்ஸ் என்ற தமது சொந்தப் படக்கம்பெனியின் ஆருவது தயாரிப்பாக ஒரு படத்தை இங்கு ஆரம்பிக்கப்போகிறார். நாகேஸ்வர ராவ், சாவித்திரி இருவரும் இப்படத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இவை தவிர பிரதிபாவின் தெலுங்குப் படமொன்று இங்கு ஏற்கனவே தயாராகி வருகிறது. அஞ்சலிதேவி நடிக்கும் இப்படத்தையும் பி. புல்லய்யா டைரக்ட் செய்து வருகிருர்.

சிவகாமி

'விந்தன்' வசனமெழுதி வரும் 'சிவகாமி' என்ற படம் நியூடோனில் தயாராகி வருகிறது. கே. சாரங்கபாணி, குமுதினி முதலியோரைத் தனது நடிகர் பட்டியலில் கொண்டிருக்கிறது இப்படம்.

ரஷ்யாவில் இந்திய சினிமா விழா

சோவியத் யூனியனில் ஒரு இந்தியத் திரைப்படக்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த விழாவில் காட்டப்படுவதற்கென பனிரெண்டு இந்தியப் படங்கள் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டிருக்கின்றன. தென் இந்தியாவிலிருந்து 'பல்லட்டூரு' என்ற தெலுங்குப் படம் இவ்விழாவிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஜான்ஸி–கி–ராணி, ஆவாரா, தோபீகா ஜமீன், பைஜூ பாவ்ரா ஆகியவை இவற்றில் சில. ரஷ்யத் தலைநகரான மாஸ்கோவில் மட்டுமின்றி, ரஷ்யாவின் வேறு பல இடங்களிலும் இவை காட்டப்படும்.

ரஷ்யாவில் ஒரு இந்தியப்படம்

பிரபல எழுத்தாளரான மூல்க்ராஜ் ஆனந்தின் 'கூலி' என்ற கதையைத் தழுவி 'ராகி' என்றொரு படம் ஹிந்தி ஆங்கிலம் இரண்டிலும் தயாரிக்கப்பட்டிருக்கிறது. கே. ஏ. அப்பாஸ் தயாரித்து டைரக்ட் செய்திருக்கும் இப்படம ரஷ்யாவில் காட்டப்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

செக்–இந்திய பரிவர்த்தனை

இந்தியப் படங்களை உலக நாடுகளில் காட்டுவதற்கான ஏற்பாடுகள் தற்போது நல்ல முன்னேற்றத்தைக் கண்டிருக்கின்றன. செக்கோஸ்லோவகியாவில் தற்போது இந்திய படங்களைக் காட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன. பிரதி வருஷமும் ஐந்து இந்தியப் படங்கள் இங்கு திரையிடப்படும். பதிலுக்கு ஐந்து செக்கோஸ்லோவகிய படங்களைக் காட்ட இந்தியாவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

பிரிட்டனில் இந்தியப் படங்கள்

பிரிட்டனிலுள்ள லண்டன் போன்ற பெரிய நகரங்களில் மட்டும் சில குறிப்பிட்ட வாரங்கள் வரை நம் இந்தியப் படங்கள் திரையிடப்பட்டு வந்தன. தற்போது தொடர்ந்து பிரிட்டனிலுள்ள எல்லா இடங்களிலும் நம் படங்களைக் காட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. 'ஆன்' சுமார் இரண்டு மாதங்கள் வரை இங்கு ஓடியது. சமீபத்தில் நடைபெற்ற கேன்ஸ் விழாவில் காட்டப்பட்ட இந்தியப் படங்கள் எல்லாமே சிறப்பாக இருந்தன என்று மேனுட்டினரால் புகழப் பட்டுள்ளன. 'தோ பிகா ஜமீன்' என்ற படம மேனுட்டினரை ஸ்தம்பிக்கச் செய்து விட்டது. தவிர பிரிட்டிஷ் சினிமா பத்திரிகைகளும் இந்தியப் படங்களின் உயர்ந்த தரததைப் பாராட்டி புகழ்மாரியாக பொழிந்து தள்ளியிருக்கின்றன. இந்தியாவில் தயாரான முதல் டெக்னிகலர் படமான ஜான்ஸி–கி–ராணி விரைவில் இங்கு காட்டப்பட விருக்கிறது. அதைத் தொடர்ந்து 'பம்போஷ்', மற்றும் பல படங்களும் காட்டப்பட விருக்கின்றன.

எடின்பரோ பிலிம் விழா

வரப்போகும் ஆகஸ்ட் மாதம் 23–ம் தேதி முதல் செப்டம்பர் 12–ம் தேதி வரை எடின்பரோவில் ஒரு சர்வதேச சினிமா விழா நடைபெற விருக்கிறது. 1947–ல் ஆரம்பமான இவ்விழா பிரதி வருஷமும் நடைபெற்று வருகிறது. இந்தியாவிலிருந்தும் சில படங்கள் இவ்விழாவுக்கு அனுப்பப்பட விருக்கின்றன.

கேன்ஸ் பிலிம் விழா

கேன்ஸ் நகரத்தில் சமீபத்தில் ஒரு சர்வதேச சினிமா விழா நடைபெற்றது. இங்கிருந்து 'தோ பிகா ஜமீன்' 'மயூர் பங்க்' முதலிய படங்கள் இவ்விழாவிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. 'தோ பிகா ஜமீன்' ஒரு அற்புதமான படம் என் விழாக் கமிட்டியாலும், மற்றும் பலராலும் புகழப்பெற்றதோடு அதற்கு ஒரு விசேஷப் பரிசும் வழங்கப்பட்டிருக்கிறது.

மேகவண்ணன்

கண்ணதாசன்

கலைஞன் என்பவன் யார்?

கல்லுளி கொண்டு கற்களைச் செதுக்கி அற்புதச் சிலை வடிப்பவன் கலைஞன்; எண்ணத்தின் எழுச்சியை எழுத்தாணி மூலம் ஏட்டிலே வடித்துக் காட்டுபவன் கலைஞன்; வண்ணக் காவிகளில் தூரிகை கொண்டு தோய்த்தெடுத்து உயிர் ஓவியம் அமைப்பவன் கலைஞன்; செவிக்குணவு தருவதன் மூலம் சிந்தனைக்கும் இடமளிக்கும் பண் இசைப்பவன் கலைஞன்; பாட்டெழுதி உள்ளத்திலே உவகை ஊட்டுபவன் கலைஞன்-ஆக கலைஞர்கள் யார். என்ற கேள்விக்குப் பதிலளிப்பதானால் இத்தொடர் நீண்டு கொண்டே போகும்.:

ஆனால் 'இல்லற ஜோதி'யில் கண்ணதாசன் 'கலைஞர்கள் எனப்படுவோர் எவர்?' என்ற இந்தச் சிக்கலான கேள்விக்கு அழகாகப் பதில் கொடுத்திருக்கிறார். அதன் மூலம் தானும் ஓர் உண்மைக் கலைஞன் என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார் அவர்.

கலைஞன் ஒருவனது வாழ்க்கையை உள்ளபடி, ஒரு கலைஞனால்தான் எடுத்துக் காட்ட முடியும் என்ற உண்மையை 'இல்லற ஜோதி'யின மூலம் அழகாக விளக்கியிருக்கிறார் கண்ணதாசன். ஒரு கலைஞனின் வாழ்க்கையைச் சித்தரிப்பதுதான் படக்கதை.

மனோகர் ஒரு பிறவிக் கலைஞன். அவனது சிந்தனை இவ்வுலக விவகாரங்களிலோ, உற்றார் உறவினரிடமோ சுற்றிச் சுழலவில்லை. அவன் சிந்தனை செய்வான; முத்துக்களென முற்றிலும் புதிய பாணியில் கவிதைகள் பிறக்கும். அவன் தன் சிந்தனையைச் சற்று ஓடவிடுவான்; புரட்சிக் கருத்துக்களை அலைமோத விட்டுக் கொண்டு காட்டாற்று வெள்ளமெனப் பொங்கிவரும் புது நாடகங்கள்! அவன் சிந்தனைக்கு சற்று வேலை கொடுப்பான்; வற்றாத ஜீவநதியான அந்த விலை மதிப்பற்ற ஊற்றிலிருந்து சூருவளியெனச் சுழன்று வரும் சொல் ஓவியங்கள்.

ஆனால் மனோகர் தன் சிந்தனையைத் திருப்பிய விதமோ, பாதையோ அவனது பெற்றோருக்காவது, மனைவிக்காவது புரிவதில்லை.

நாடக வசனங்களை சுவற்றோடு பேசுவான்; கட்டிலின் கால்களோடு கவிதைகளைச் சொல்லிச் சிந்தனையைத் தீட்டிக் கொள்வான்.

இவையெல்லாம் மூளை கெட்டு விட்டதால் ஏற்பட்ட 'மிஷ்டேக்' என்று சொன்னார் அவன் தந்தை. மனோகர் சிரித்தான். 'மீஸ்டேக்' என்ற பதத்தை. அழுத்தம் திருத்தமாக, தவறாக தன் தந்தை உச்சரிக்கிறாரே என்று அவன் சிரிக்கவில்லை. தன்னை ஒரு புரியாத புதிராக எண்ணும்படி தன் தந்தையின் அறிவை ஆண்டவன் குறைத்து வைத்து விட்டானே என்று சிரித்தான்.

"அப்பா உங்கள் உலகம் வேறு. என் உலகம் வேறு .."

மனோகர் சொன்ன பதில் அவன் தந்தையைச் சிந்திக்க வைப்பதில்லையே தவிர, நம் சிந்தனையைத் தூண்டாமல் இருப்பதில்லை.

எவ்வளவு உண்மையான வார்த்தைகள்! கலைஞனைப் பற்றித் தெரியாதவர்களுக்கும், தெரிந்துகொள்ள விரும்பாதவர்களுக்கும் கண்ணதாசன் சரியான சவுக்கடி கொடுத்திருக்கிறார். கலைஞனின் உலகமே வேறு என்று கண்ணதாசன் சொல்வதை நாம் ஒப்புக் கொள்கிறோம். ஆனால் மனோகரின் தந்தை அதை ஒப்புக்கொள்ளாமல், "தன் மகனைப் பெற்றதே ஒரு மீஸ்டேக்" என்று சொல்லி விட்டுப்போய் விடுகிறார். அதுமட்டுமல்ல, மகனின் நிலைபற்றிக் கவலைப்படும் தன் மனைவியிடம், "நீ ஏண்டி

கவலையின் சிகரமாயிடறதே?'' என்று கண்டிக்கிறார்.

''கவலையின் சிகரம்'' என்பதன் மூலம் தாய்மையின் பாசத்தைப்பற்றி சுருக்கமாக விளக்கிவிடுகிறார் கண்ணதாசன். இதை ஹாஸ்யச் சரக்காக நினைத்துச் சிரிப்பதோடு நிறுத்தி விட்டால் விஷயம் பூரணத்துவம் பெறாது. சிரிப்பதன் கையோடு இந்தச் சிகரத்தைப்பற்றித் தெரிந்து கொள்ளவும் முயற்சிக்கும் போது தான் ''எவரெஸ்டைப்'போல் பல மடங்கு உயரமானது தாயின் அன்பு என்பது புரியும்.

சித்ரா! பெயரிலே புதுமையைக் கொண்டிருந்த அவள் இலக்கியங்களிலே புரட்சியை எதிர்பாக்கிறாள்; விரும்புகிறாள்; அதற்காக முயலவும் செய்கிறாள். மனோகரின் இலக்கியத் திறமையை தனது அறிவின் தராசில் எடைப்போட்டுப் பார்த்த சித்ரர அவன் கலைத்திறனை ரசிக்கிறாள்.

''கருத்துக் கடலிலே பிறந்த முத்துக்களை நீங்கள் தொடுத்த விதமே வேறு'' என்று அவனது எழுத்தோவியத்தின் சிறப்பைவெளியிடுகிறான்.

கண்ணதாசனின் வசனத்தை இந்த இடத்தில் சற்று கவனிக்க வேண்டும். கடலிலிருந்து எடுக்கப்படும் முத்துக்களின் எண்ணிக்கை அதிகம். மனோகரின் சிந்தனை சுழன்றபோது அதிலிருந்து சிதறிய சொல்லோவியங்கள், சாதாரண ஊற்றிலிருந்து எடுப்பதைப் போலல்ல; கடல்வழி வரும் முத்துக்களைப் போல் எண்ணிக்கையில் அதிகமானவை என்பதை சொல்லாமலேயே சொல்லி விளக்குகிறார் கண்ணதாசன்.

கடலிலிருந்து வரும் சிறப்பான பொருள் முத்து எனகிறோம். மனோகரின் கருத்தைக் கடலுக்கு உபமானமாக்கிய கணணதாசன், அவனது கருத்திலே தவழ்ந்து வந்த சிந்தனை வெடிப்புகளை முத்துக்களெனப் போற்றுவதன் மூலம் மனோகரின் சிந்தனைத் தரத்தைப் பற்றி ஒரு அபிப்பிராயத்தையும் எழுப்பி விடுகிறார். கலைஞனின் திறனும், தரமும் தான் எவ்வளவு பெருமைபடத் தக்க விஷயம் என்று நாமும் அக மகிழ்கிறோம்.

அத்துடன் சித்ரா நிற்பதில்லை. வசதிகள் பல நிறைந்த அறையொன்றைஅவனுக்கெனத்தயாரித்து, ''உங்கள் எண்ணங்களை அமைக்கும் சொர்க்கபூமி இதுதான்'' என்கிறாள்.

சொர்க்கலோகத்தைப் பற்றி புராணங்கள் சொல்கின்றன; சொர்க்கலோக வாசத்தைப்பற்றி அவை வர்ணித்துத் தள்ளுகின்றன. ஆனால் சொர்க்கலோகம என்பது என்ன என்பதை நாம் ஆராயாவிட்டாலும், அந்த வாசத்தின் உயர்ந்த தன்மையை நாம் அனுபவிக்காவிட்டாலும் அதைப்பற்றிய உண்மையை நாம் தெரிந்து கொள்ளுமளவுக்கு கண்ணதாசன் இங்கு விளக்கம் கொடுத்திருக்கிறார்.

''கலைஞன் வாழுமிடமே சொர்க்கலோகம்'' என்கிறார் அவர். ஏன் இப்படிச் சொல்ல வேண்டும்?

கலை என்பது அமரத்வமானது; அழியாத் தன்மை பெற்றது; அள்ளிக் கொடுத்துப் பெறமுடியாதது; ஆசைப்பட்டு ஏங்கி அடைய முடியாதது. தன் போக்கில் தவழ்ந்து விளையாடுவது கலை. இத்தகைய சிறப்பு வாய்ந்த கலையைத் தன் வாழ்நாளிலே ஜீவநாடியாகக் கொண்டவன் சொர்க்கலோகவாசியாகி விடுகிறான் என்பதை எவ்வளவு அழகாகச் சொல்லுகிறார் கண்ணதாசன்.

இலக்கியத்திலேஊறிப்போனசித்ரா அப்படிச் சொன்னால் அதன் பிறப்பிடமான மனோகர் என்ன சொன்னான்?

''என்னால் பேசவே முடியவில்லை'' என்கிறான், உணர்ச்சி வேகத்தில். 'நன்றி, நலம்' என்றெல்லாம், உதவியைப பெறும் அவன் பதில் கூறுவான் என்று எதிர்பார்க்கிறோம். ஆனால் கண்ணதாசன் இங்கே தன் கை வரிசையைக் காட்டி விடுகிறார்.

''என்னால் பேசவே முடியவில்லை!...'' என்பதன் மூலம், தான் அடைந்த உதவிகளின் மதிப்பு தனது வாய்க்குப் பூட்டுப் போட்டு, உணர்வையும் இழககச் செய்து விடுகிறது என்று சொல்ல வைத்திருக்கிறார் கண்ணதாசன். உண்மைதான்! வறுமையில வாடி வதங்கிய அவனுக்கு சித்ராவின் உதவிகள் விலை மதிப்பற்றவை தானே?

"கலைஞர்களுக்கு அவர்கள் உயிருடனிருக்கும் போதே மரியாதை செய்யும் காலம் வந்து விட்டதா, என்று நினைத்து ஆச்சர்யப்படுகிறேன்" என்று பிரிதொரு இடத்தில் சித்ராவிடம் கூறுகிறார் மனோகர்.

நிதி திரட்டும் படலம் ஒரு கலைஞரின் சாவுக்குப்பின் செய்யக் கூடிய விஷயம் எனபது, இன்றைய உலக வழக்கமாகி விட்டதைக் கிண்டல் செய்யும் கண்ணதாசன், கூடவே இந்த மரியாதையை, அவன் இருக்கும் போதே செய்ய வேண்டும்என்று மறைமுகமாக எச்சரிக்கையும் செய்து காட்டுகிறார், இக்காட்சியின் மூலம்.

ஆனால் 'முப்பது வருஷங்கள் குமாஸ்தா வேலை பார்த்து உலகத்தின் நடையுடை பாவனைகளில் நன்கு ஊறிப்போய் அனுபவஸ்தராகிவிட்ட மனோகரனின் தந்தை, அவன் இதை நம்பி தன் குமாஸ்தா வேலையை விட்டு விடவேண்டாமென்கிறார்.

"டேய்! எதற்கும் நீ இந்த வேலையை விட்டு விடாதேடா! எழுத்தாளன் வேலை என்னைக்கும் நிரந்தரமானதில்லே" என்று மகனுக்கு அறிவுரை போதிக்கிறார்.

இன்றைய எழுத்தாளர்களின் நிலையை ஓவியமாக வரைந்து காட்டுவது போல் இருக்கின்றன காதில் ஒலிக்கும் இந்த வசனங்கள். எழுத்தை நம்பி தங்கள் மண்டையைப் போட்டு உடைத்துக் கொள்ளும் 'எண்ணச் சிற்பிகள்' தங்கள் வாழ்க்கைப் பாதையின் முடிவை உணரும்படிச் செய்கிறது இந்த வசனம். தவிர எழுத்தாளர்களைப்பற்றி உயர்வாகப் பேசும் சமூகம், அவர்களைச் சந்தி சிரிக்கும்படி அவல வாழ்க்கையில் விட்டு விட்ட நிலையையும் விளம்பரப்படுத்துகிறார் கண்ணதாசன். அவர் ஒரு எழுத்தாளர்: உரிமைக்காக உரிமையோடு போராடுகிறார்!.

மனோகரின் மனைவி காவேரி ஒரு கட்டுப்பெட்டி. கணவனைத் தெய்வமென நினைக்கும் உத்தம பத்தினி 'காவேரிக்கு' தன் கணவனைப் பற்றித் தெரியும்: ஆனால் அவன் இயற்றும் கவிதைகளையோ, எழுதும் கட்டுரைகளையோ அவள் ரஸித்ததில்லை. கட்டுக் கட்டாக அவைகளைப் பார்த்து எடை போட்டு விற்கும் அளவுக்குத்தான் அவள் அவைகளைப் பற்றி அறிந்து கொண்டாளே ஒழிய, அவளுக்கு அவைகளின் உண்மை மதிப்பு தெரியாது!

"நக்ஷத்திரங்கள் கண் சிமிட்டுவது துவண்டு விழும் மனித ஜாதியைப் பார்த்துச் சிரிப்பது போல இல்லையா? சந்திரன் பாதி நாள் மறைந்து விடுவது, உலகிலே பாதி பேர்தான உத்தமர்கள் என்பதற்காகவோ?" முதல் நாளிரவு அவளிடம் முன்னுரை சொல்லி விடுகிறான், மனோகரன் கவிதா ரசம் சொட்ட.

காவேரி சிரித்தாள்; புரிந்துதான் சிரித்தாளோ, புரியாமல்தான் சிரித்தாளோ! கண்ணதாசனின் கவிதை ரஸம் சொட்டும் இந்த வசனங்களைக் கண்டு நாம் சிரிப்பதில்லை. நம் வாழ்க்கையின் ஆயுட் காலத்தையும், நம்மிடையே உலவி வரும் மக்களைப் பற்றியும் மேலெழுந்த வாரியாகத் தெரிந்து கொள்ள இவை உதவுகின்றன.

மோகன் சித்ராவின் முறைப்பையன். சித்ராவை அவன் நேசிக்கிறான். கலையார்வம் மிகுந்த சித்ரா கலையுலக மேதையெனத் திகழும் மனோகரைக் காதலிக்கிறாள். இது விஷயம் ஓரளவுக்குத் தெரிந்து விடுகிறது மோகனுக்கு. வாட்டமடைகிறான அவன்.

"என்ன மோகன்! முகத்திலே சோகக் காற்று வீசுதே!" என்கிறார் சித்ராவின் தந்தை. "இல்லை" என்று மழுப்புகிறான் மோகன்.

"வாய் அப்படிச் சொல்லுகிறதே தவிர, முகம் அப்படிக் காட்டவில்லையே" என்கிறார் அவர்.

'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்ற பழமொழிக்கு விளக்கம் தருகிறது இந்த வசனம். கண்ணதாசன் இதை புது முறையில் அமைத்திருக்கிறார், அவ்வளவுதான்.

தன் ஆசை நாயகியை, அடுத்தவன் அடைவதை மோகனின் மனம் விரும்புவதில்லை. காவேரியிடம உண்மையைச் சொல்லி விடுகிறான் உண்மை தெரிந்த காவேரி விம்மி

அழுகிருள். விஷயம் கேட்டு வரும் மனேகரின் பெற்ருேர்களிடம் செய்தியின் முக்கியத்துவத்தை இரண்டே வரிகளில் சொல்லி விடுகிருள்.

''நான் உண்ணுமலிருக்க எவ்வளவு சொல்லணுமோ, அவ்வளவும் சொல்லி விட்டான். நான் உறங்காமலிருக்க எவ்வளவு பேசணுமோ அவ்வளவும் சொல்லி விட்டான்'' என்கிருள்.

எவ்வளவு அர்த்தம் பொதிந்த வசனங்கள் இவை! தூக்கம் பிடிக்காமல் அலையும் நிலை எப்போது ஏற்படும்? அளவுக்கு மீறிய கவலை எழும்போது. உணவு பிடிக்காத நிலை ஏன் வருகிறது? சிந்தனையின் சுழற்சி நின்று, அது குழம்பிப் போகும் அளவுக்கு கவலைகள் சூழும்பொழுது!

கணவன் மற்ருெரு பெண்ணை விரும்பி, கட்டிய மனைவியை ஒதுக்கித் தள்ளுவது எவ்வளவு பெரிய சோகச் செய்தி! இதை கண்ணதாசன் சொன்ன முறை பாராட்டத்தக்கது; போற்றத்தககது.

காவேரிக்கு, கட்டுக்கடங்காத நிலையை மீறி, உணர்ச்சி உந்தித் தள்ளுகிறது. சித்ராவிடம் ஓடி தாலிப்பிச்சைக் கேட்கிருள்

''என் இதயக் கோயிலிலே வைத்து பூஜை செய்யும் அவரை மறக்க முயல்வது இயலாத காரியம்'' என்கிருள் சித்ரா.

''பூஜைக்குத் திருடுவதானுலும். கோயில் சிலையையே கொண்டு வந்து விடுவதா?'' என்று காவேரியின் மூலம் கேட்கிருர் கண்ணதாசன்.

கோயிலின் சிலை பொதுமக்களுக் குரியது. அதன் உரிமை அந்தக் கோயிலுக்குத்தான். அதே போல தன இதயக்கோயிலுக்கு தன் கணவன் உரிமை என்கிருள் காவேரி.

சித்ராவிடம் தாலிப்பிச்சைப் பெற்று வருகிருள் காவேரி. ஆனுல் அவள் மீது மையல் கொண்ட மனேகரின் மனம் மாறுவதில்லை. அவன் மனதிற்கு குறைவேண்டாமென்று, சித்ராவின் தந்தையிடமே பெண் கேட்கும் காவேரியின் தியாகம்தான் அவனை உண்மைக் கலைஞனுக்குகிறது.

அவனது மனச்சாட்சி பேசுவதாக அமைத்திருக்கும் வசனங்கள் எல்லாக் கலைஞர்களுக்குமே ஒரு நல்ல படிப்பினை.

கண்ணதாசனின் வசனம் 'இல்லற ஜோதி'யில் பல இடங்களில் சோபிக்கிறது. அவர் முதன்முதலாகக் கதை வசனம் எழுதிய படம் இதுதான்.

ஆனுல் இதற்கு முன்பாகவே பல முறை, பலவகையில் திரையுலகுக்குச் சேவை செய்து வந்திருக்கிருர் அவர். ஜூபிடர் மர்மயோகி, கன்னியின் காதலி முதலிய படங்களுக்கு அவர் பாடல்கள் எழுதியிருக்கிருர்.

ஏ. எல். எஸ். முத்தையன் என்ற இயற்பெயரைக் கொண்டு, 'கண்ணதாசன்' என்ற புனைப்பெயரினுல் பிரபலமடைந்த அவர் திரையுலகில் மேலும் பலவகைகளில் பிரகாசிக்க முடியும் என்று நம்பலாம்.

ரூ. 5க்கு

15 ஜூவெல கைககடிகாரம்

ரூ. 5-க்கு ஒரு பவுண்டன் பேனவும், 15 ஜூவெல் கைக்கடிகாரமும் அடையலாம். அழகுக்கும், உறுதிக்கும் 15 வருஷ உத்தரவாதம். தபாற்செலவு ரூ. 1-2-0

National Swiss Watch Supplier

Halka No. 28 (P.P.M.) Meerut

அமெரிக்க விஞ்ஞானி சமீபத்தில் கண்டுபிடித்த ரேடியோ

மின்சாரமோ, பாட்டரியோ இன்றி, ஸ்பஷ்டமாக நீங்கள் செய்திகளையும் சங்கீதத்தையும் தெளிவாகக் கேட்கலாம். விலை நெ. 555 ரூ. 5 ஸ்பெஷல் நெ 666 ரூ. 7/8. ஸ்பெஷல் டிலக்ஸ் நெ 777 ரூ. 9/8. பாக்கிங் மற்றும் தபால் கட்டணம் ரூ. 2/8. 5 வருஷத்திற்குள் ஏதாவது பழுது ஏற்பட்டால் இலவசரிப்பேர் செய்ய உத்திரவாதம். உடனே எழுதவும்.

ஸோல் ஏஜண்ட்ஸ்:

AMERICAN RADIO STORE

Halka No. 28 (P.P.M.) Meerut.

ராகினி

பத்மினி பிக்சர்ஸாரின் 'கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி' படத்தில் ராகினி நடித்திருக்கிறார். முதல் தடவையாக ஒரு கதாநாயகியின் பாத்திரத்திலே தோன்றி மிகவும் கச்சிதமாகவே நடித்திருக்கிறார்.

ராகினி இதற்கு முன்பு ஏராளமான படங்களில் மூத்த சகோதரிகளான லலிதா, பத்மினி இவருடனும் நடனமாடியிருக்கிறார். அப்போதெல்லாம்கூட அவர் பிரதம பாத்திரத்தில் நடிப்பதற்கு ஏற்றவர் என்று யாரும் எதிர் பார்த்திருக்க முடியாது. ஆனால் தகுந்தபடி சந்தர்ப்பம் கிடைத்தால் அதை தன்னால் நிர்வகிக்க முடியும் என்பதை ஓரளவு இப்படத்தின் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார் ராகினி.

'கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி'யில் அவர் கதாநாயகி என்னும் முழுப் பொறுப்பும் அவருடையதில்லை. இரண்டாம் கதாநாயகியாக பத்மினி வந்து, ராகினியின் சிரமத்தைக் குறைத்திருக்கிறார். தமிழ் நாட்டின் எட்டிகாண்டர் எனப் புகழ்பெற்ற டி. ஆர். ராமச்சந்திரன ராகினியின் கணவனாக இப் படத்தில் வருகிறார். ராகினியைத் தவிர படத்தில் நடிக்கும் யாவரும் முன்னணி நடிகர்கள். அவர்களுக்கெதிர ராக ராகினி கச்சிதமாக நடித்திருப்பது ரஸிக்கத் தக்கது.

படத்தில் ராகினி இருவிதமான குணவிசேஷமுள்ள பாத்திரங்களில் நடிக்கிறார். சரியான கட்டுப்பெட்டியான சாவித்திரியாக வரும் அவரை ஒரு அசலாயிட்ட நாட்டுப்புறம் என்று தீர்மானிக்கிறோம், அலக்ஷியமாக விசிறியை விசிறிக்கொண்டு நடமாடும் போது அமெரிக்கா மேடம், என்று நாமே சொல்லுகிறோம். வேஷப் பொருத்தம் இரண்டிலும் தரம்.

சாவித்திரி ஒரு பட்டிக்காட்டுக் கட்டுப்பெட்டி. குணத்திலும் நடத்தையிலும் நாகரீகம் காணும் அவள், தன் கணவனாக மாமன் மகன் கணபதியையே வரிக்கிறாள். ஆவலோடு அவள் பெற்றோருடன் அவன் வீடு செல்லும் போது, அவளைப் பற்றி அவன் கண்டபடி பேசி விடுகிறான். கோபத்தில் குதிக்கும் தந்தையிடம் அதிகம் பேசவில்லை அவள். 'அப்பா! நாகரீகம் தெரிஞ்சவங்க நடந்துக்கற முறை இதுதாம்பா! நமக்கு அந்த நாகரீகம் தெரியாது. வாங்க போக போகலாம்' என்று மட்டுமே கூறுகிறாள். நாகரீகத்தைப் பற்றித் தெரியாத அவர்களுக்கு, அவள் தன் வார்த்தைகளின் மூலமே அதை உணர்த்துகிறாள். கண்களில் நீர் வழிய, மேலாடையைப் போர்த்திக் கொண்டு அடக்க வொடுக்கமாக நிற்கும் சாவித்திரியிடம் நமக்கு அனுதாபமேற்படுகிறது. அவள் தன் கவலையை எடுத்துக் கூறி பத்மினியிடம் வருந்தும்போதும் நம் உள்ளம் சாவித்திரிக்காக வருந்துகிறது.

பிறகு அவள் அமெரிக்க மேடம் ராகினிதேவியாக நடமாடி அசட்டுக் கணபதியை ஆட்டிவைக்கும் போது ஆனந்தப்படுகிறோம்; அந்த வேஷம் வெளிப்பட்டு அவன் அவளை வெறுத்துத் தள்ளிவிடப் போகிறானே என்று பயப்படுகிறோம். அவள் காரில் அடிபட்டு மூர்ச்சையான பின், தெளிவு ஏற்படும் போதெல்லாம், 'கிறிச்' என்று கூவும் போது, நம் அடி வயிற்றை என்னவோ செய்கிறது.

இந்த சாவித்திரியின் பாத்திரத்திரத்திலே தோன்றுகிறார் ராகினி. அவர் கதாநாயகியாக நடிப்பது இது தான் முதல் படம் எனனும்போது, கச்சிதமாக நடித்திருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். இளம் கலைஞர்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற கொள்கைப்படி ராகினியை 'இம்மாத நக்ஷத்திர'மாகக் கௌரவிக்கிறோம்.

ராகினி பல படங்களில் நடனமாடியிருக்கிறார். சங்கீத வித்வாஷியாக விளங்க அவர் ஜி. என். பி. அவர்களிடம் சிக்ஷை பெற்று வருகிறார். அத்துடன் 'வைர மாலை' படத்திலும் நடித்து வருகிறார். ராகினி நடிப்பிலும் பாட்டிலும் புகழ்பெற்று விளங்க வேண்டும் என்பதே என் விருப்பம்.

எஸ். கே. மொஹிதீன்

சென்ற மாதம் 17-ம் தேதி—

படவுலகையே திடுக்கிடச் செய்யும்படியான சம்பவம் அன்றைய தினம் நடைபெற்றது. அதேசமயம் நம்புவதற்குச் சற்றுக் கடினமாகவும் இருந்தது அச்செய்தி.

ஜூபிடர் பிக்சர்ஸ் பாகஸ்தர்களில் ஒருவரான ஜனப் எஸ். கே. மொஹிதீன் காலமான செய்திதான் அது.

இச்செய்தியைப்பற்றி கிரனூரிலுள்ள எஸ். கே.யின் உறவினர்களுக்கு தந்தி அடிக்கப்பட்டதாம். தந்தி தாங்கி வந்த செய்தியை நம்ப முடியாமல் போன் மூலம் செய்தியை விசாரித்து, ஊர்ஜிதம் செய்துகொண்டார்களாம் அவர்கள்.

எஸ். கே. தன் இறுதி மூச்சு விடும் வரை தேகாரோக்யத்துடன்தான் இருந்தார். ஆகவே திடுதிப்பென்று அவர் காலமான செய்தி நம்புவதற்கு கடினமாகத்தான் இருந்தது.

படத்துறையிலே அனுபவம் என்ற பட்டறையில் அணுஅணுவாகத் தேறி வெளி வந்தார் எஸ். கே. தீர்க்க தரிசனம், வியாபார தந்திரம், காரியங்களை ஏற்றுச் சமாளிக்கும் திறமை அவரது உடன் பிறந்தவைகளாகும்.

பழநிக்கடுத்த கிரனூர்தான் எஸ். கே. யின் சொந்த ஊர். அவர் முதன் முதலில் ஒரு தானிய வியாபாரியாக இருந்தார்: அச்சமயம் எம். சோமசுந்தரத்துடன் அவருக்கு தொடர்பு ஏற்பட்டது. 1924-ம் வருஷம் சோமு, மொஹிதீன் இருவரும் கூட்டாகச் சேர்ந்து இந்த வியாபாரத்தைச்செய்து வந்தார்கள். அவர்கள் வியாபாரம் பெருகவே, தொழில் துறையிலும் சில புது வேலைகளை மேற்கொண்டனர் 'இரட்டையா'. 1933-ல் திருப்பூரில் இருவரும் சேர்ந்து ஒரு மாவு மில்லையும் சோடா பாக்டரியையும் ஆரம்பித்தார்கள். இவை இரண்டும் இன்றுமகூட திருப்பூரில் நடைபெற்று வருகின்றன. தவிர எலக்ட்ரிக் சாமான்களையும் அவர்கள் விற்பனை செய்து வந்தனர். இதனால் நவாப் கம்பெனியுடன் இவர்கள் உறவு கொள்ள முடிந்தது. 1934-ம் வருஷம் கோவை பரமேஸ்வர் சவுண்ட் பிக்சர்ஸ் படமொன்றைத் தயாரிக்க விரும்பியபோது, இரட்டையர் பெருமளவில் அவர்களுக்கு உதவி செய்தார்கள். அப்போதே இருவருக்கும் படத் தொழிலின் மீது நாட்டம் ஏற்பட்டது.

ஆகவே சிலரைக் கூட்டாகச் சேர்த்துக்கொண்டு 'ஸ்ரீ ஷண்முகானந்தா பிலிம் கம்பெனி' என்ற படஸ்தாபனத்தை இருவரும் ஆரம்பித்தார்கள். 'மேனகா' என்ற படத்தை முதன் முதலாக அவர்கள் தயாரித்து வெளியிட்டார்கள்.

மேனகா மகத்தான வெற்றி கண்டது. படத்தயாரிப்பாளர்களுக்கு நிறைய பணத்தை அள்ளிக்கொடுத்தது. அதன் பின்னர் இருவரும் இக்கம்பெனியிலிருந்து விலகி வேறு சிலரை பாகஸ்தர்களாகக் கொண்டு 1936-ம் வருஷம் 'ஜூபிடர் பிக்சர்ஸ் லிமிடெட்' என்ற ஸ்தாபனத்தை நிறுவினர். 'சந்திர காந்தா' என்ற படத்தை இவர்கள் முதன் முதலாகத் தயாரித்து வெளியிட்டார்கள். வெற்

றிப் படமாக அமைந்தது அது. அதே சமயம் பாகஸ்தர்களுக்குள் அபிப்பிராயபேதம் ஏற்படவே அதிலிருந்து இருவரும் விலகி 'ஒலிம்பிக் பிக்சர்'ஸை எல் ஆர். ஜி. நாயுடுவின் கூட்டுறவுடன் ஆரம்பித்தனர். அந்த ஸ்தாபனத்தின் 'மைனர் ராஜாமணி' என்ற முதல் படமே தோல்விப் படமாக அமைந்து விட்டது.

இதற்கிடையே 'ஜூபிடர் பிக்சர்ஸ் லிமிட்டெட்'டின் இதர பாகஸ்தர்களின் அழைப்புக்கிணங்க மீண்டும் இரட்டையர் அதில் போய்ச் சேர்ந்தனர். 'அனாதைப் பெண்' என்ற படத்தை அவர்கள் கம்பெனிக்காகத் தயாரித்தார்கள். படம் தோல்விப் பாதையிலேயே சென்று விடவே பாகஸ்தர்களுக்குள் மீண்டும் மனஸ்தாபம் ஏற்பட்டது. சோமுவும், எஸ். கே.யும் அதிலிருந்து விலகி விட்டனர்.

படத்துறையிலிருந்து சிறிது காலம் ஓய்வு பெற விரும்பிய எஸ். கே., 'தேவி டீ பிராடக்ட்ஸ்' என்ற ஒரு தேயிலைக் கம்பெனியை ஆரம்பித்தார்.

1941-ம் ஆண்டு படவுலகுக்கு மட்டுமின்றி, இரட்டையர்களின் வாழ்க்கையிலும் ஒரு பொன்னாண்டாகத் திகழ்ந்தது அந்த வருஷத்தில்தான் எஸ். கே. மொஹிதீன்–எம். சோமசுந்தரம் இருவரை மட்டுமே கூட்டாகக் கொண்ட 'ஜூபிடர் பிக்சர்ஸ்' உருவாகியது.

ஜூபிடரின் குதிரைச் சின்னம் பதித்த முத்திரையோடு முதன் முதலாக வெளிவந்தது 'கண்ணகி'. ரசிகர்களின் நினைவிலே இன்றும் நாளையும் 'கண்ணகி' நினைவிலிருந்து வருகிறது என்பது மிகவும் உண்மை! மறுக்க முடியாத உண்மைதான்! அடுத்து குபேர குசேலாவும், மகாமாயாவும் வெளிவந்தன.

1944-ல் சென்டிரல் ஸ்டுடியோவை குத்தகைக்கு இரட்டையர்கள் எடுத்துக் கொண்டார்கள். சென்டிரலில் தயாரான பல படங்கள் வெற்றி கண்டன. 1951-ல் சென்னை நெப்டியூனில் 'ஜூபிடர் பிக்சர்ஸ்' படங்கள் தயாராக ஆரம்பித்தன. 1952-ல் ஸ்டுடியோ அவர்களது நிர்வாகத்திற்கு வந்தது.

நெப்டியூன் ஒரு லிமிட்டெட் ஸ்தாபனமானாலும், அதில் பெரும்பங்கு ஜூபிடருக்குத்தான் சொந்தம். சென்ற வருஷம் அதிக எண்ணிக்கையில் படங்களைத் தயாரித்து வெளியிட்ட படக்கம்பெனி ஜூபிடர்தான்.

படவுலகின் வளர்ச்சிக்குப் பல வருடமாகப் பாடுபட்டுக் கலைத்தொண்டாற்றிய எஸ். கே.யை இழந்ததன் மூலம், படவுலகம் ஒரு சிறந்த செயலாளரையும், கலைஞரையும் இழந்து விட்டது.

அவரது மறைவு படவுலகுக்கு ஈடு செய்ய முடியாத ஒரு நஷ்டம். குறிப்பாக எம். சோமசுந்தரத்திற்கு அவரது மறைவு பெரிய நஷ்டம். எஸ்.கே.யின் குடும்பத்தினருக்கு நமது மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கூண்டுக்கிளி'யில் சிவாஜி கணேசன் மயக்கமுற்றுக் கிடப்பதைப் பற்றி,
'நண்ப'னில் வரும் இந்த அன்பர்கள் நிச்சயமாகக் கவலைபபடமாட்டார்கள்.

ஏ. எம். ராஜா

படங்களில் பின்னணி சங்கீதம் அறிமுகப் படுத்தப்பட்ட நேரம், நல்ல நேரம் என்றுதான் சொல்ல வேண்டும். ஆரம்பித்த அன்றுமுதல் இன்றுவரை அது பட உலகின் ஜீவநாடியாகவே கருதப்பட்டு வந்திருக்கிறது. சாரீர வசதியுள்ளவர்களுக்கு வருமானத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தது; நக்ஷத்திரங்களில் பலருக்கும், சொந்தக் குரலில் பாடும் சிரமத்தையும் குறைத்து வைத்திருக்கிறது!

பின்னணிப் பாடலுக்கு இருந்த மவுசைக் கண்டு, சங்கீதக் கலைஞர்களும் கல்லூரிப் படிப்பு படித்தவர்களும் சாரீர வசதி பெற்றவர்களும் பின்னணியில் பாடிப் புகழ் பெற விரும்பி வந்தார்கள். இவ்வகையைச் சேர்ந்தவர்களில் குறிப்பிடத் தக்கவர் ஏ. எம். ராஜா. மிகக் குறுகிய காலத்தில் பின்னணி பாடக, பாடகியரில் முன்னணியில் நிற்கிறார் அவர்!

பிரச்சினையிலிருந்து வரும் சித்தூர் ஜில்லாவில் ராமாபுரம் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே மன்மத ராஜு என்பவர் இருந்து வந்தார். அவருக்கும் லக்ஷ்மம்மாவுக்கும் குமாரனாக 1929-ம் வருஷம் ஜூலை மாதம் 1-ம் தேதி பிறந்தார் ராஜா. அவர் பிறந்து மூன்று மாதங்களுக்கெல்லாம் துரதிருஷ்டவசமாகத் தன் தகப்பனாரை இழந்தார். அன்று முதல் அவருக்கும் அவரது சகோதரி நாகம்மாவுக்கும் அம்மையும் அப்பனுமாய் இருந்து வளர்த்து வரலானார் லக்ஷ்மம்மா. கணவனை இழந்ததும் தன் பூர்வீக கிராமமான ரேணுகாபுரத்திற்குக் குழந்தைகளுடன் லக்ஷ்மம்மா வந்துவிட்டார்.

தகப்பனார் இல்லாத குறையைக் காட்டாமல் மிகவும் அன்போடும் ஆதரவோடும் வளர்த்த தாயிடம், நாகம்மாவுக்கும் ராஜாவுக்கும் ரொம்பவும் அன்பும் பக்தியும் உண்டு. ரேணுகாபுரத்தில் ராஜா பள்ளியில் சேர்ந்து இரண்டாம் பாரம்வரை படித்தார். பிறகு மேல் படிப்பை உத்தேசித்து வேலூருக்குச் சென்றார், அங்கே ஊரிஸ் கல்லூரியில் இன்டர்மீடியட் வகுப்புவரை படித்தார். பின்னர் பட்டதாரியாக விளங்க வேண்டுமென்ற ஆசையோடு, சென்னைக்கு வந்து பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்து பி. ஏ. வகுப்புவரை படித்தார்.

ராஜாவுக்கு இளம் வயதிலிருந்தே நல்ல சாரீர வசதிகள் உண்டு. வேலூரில் படிக்கும்போதே தமிழிசைக் கழகத்தில் சாஸ்திரிய சங்கீதம் பயின்றார் அவர். வெறும் சாரீர வசதிகளிலிருந்து ஞானமில்லா விட்டால் என்ன பிரயோஜனம்? ஆந்திரத்தைத் தாய் மொழியாகக் கொண்ட ராஜா, தமிழிசைச் சங்கத்தில் இரண்டரை வருஷகாலம் சங்கீதம் பயின்றார். ஆனால் தமிழ்க்கலைஞர்களும் பட முதலாளிகளும் ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் அபார மோகம் கொண்டிருக்கிறார்கள். இது விசித்திரம் தானே!

ராஜாவுக்கு சினிமா உலகில் எப்படியும் நுழைந்துவிட வேண்டும் என்ற ஆசை ரொம்பவும் அதிகமாயிருந்தது. அவர் சென்னையில் படிக்க வந்ததன் முக்கிய காரணமும் அதுதான். சென்னை கல்லூரியில் படிக்கும்போது இன்டர் காலேஜ் சங்கீதப் போட்டியில் முதற் பரிசு பெற்றார். இது நடந்தது 1950-ம் வருஷமாகும். அதைப்பற்றி அறிந்த எச். எம். வி. கிராமபோன் கம்பெனியார் அவரைத் தங்கள் கம்பெனி இசைத் தட்டில் பாடச் செய்தார்கள். 'எந்த தூரமு' என்ற அந்த பாடலைத் தவிர 1951-ல்

மீண்டும் 'ஓ ஹிருதய ராணி' என்ற பாடலை இசைத் தட்டில் பாடினார். அதன்மூலம்தான் அவரது இன்றைய வாழ்வுக்கு வழி பிறந்தது என்றே சொல்ல வேண்டும்.

1951-ம் ஆண்டில் ராஜா முதன் முதலில் 'குமாரி' படத்தில் பாடுவதற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டார். ஆனால் அவர் பாடி முதலில் வெளிவந்த படம் அருணாவின் 'ராஜாம்பாள்' தான். ஆனால் இவைகளின் மூலம் ராஜாவுக்குத் தகுந்த புகழ் கிடைக்கவில்லை. சென்னை படக் கம்பெனிகளிலெல்லாம் புகுந்து பார்த்து அலுத்துப்போய் விட்டார் ராஜா. ஜெமினியில் அவரை முதலில் உள்ளேயே அனுமதிக்கவில்லை. 'சாதாரண கம்பெனிகளே நமக்குச் சந்தர்ப்பம் தராதபோது, ஜெமினி எங்கே தரப்போகிறது? என்று நினைத்து வாசலிலேயே சுற்றி வட்ட மிட்டாராம் அவர்! ஜெமினி சங்கர சாஸ்திரியைச் சந்தித்தார் ராஜா. அவர் அதிபர் வாஸன் அவர்களிடம் கூறினார் 'ஓ ஹிருதய ராணி' என்ற பாட்டைக் கேட்டு ஓரளவு விருப்பம் கொண்டிருந்த வாஸன் நேரிலும் பாடச்சொல்லிக் கேட்டார். மறுதினம் 'சம்சாரம்' படத்தில் முழுதும்பாட ராஜாவுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கப் பட்டிருப்பதாகச் செய்தி கிடைத்தது. சம்சாரம் படம் முழுவதிலும் ராஜா பாடினார். அவருக்கு அந்த முதல் படமே மகத்தான புகழைக் கொடுத்தது. படம் திரையிடப்பட்டது. ராஜாவுக்குப் பணம் வரவில்லை. ஒப்பந்தமும் கிடையாது. பணமே வராது போலிருக்கிறது, என்று நினைத்த ராஜா, சாஸ்திரியிடம் சென்றார். மறு தினம் காரியாலயத்தில் அவருக்கு சம்சாரம் படத்திற்காக மூவாயிரம் ரூபாய் ரொக்கமாகக் கொடுக்கப் பட்டபோது அவருக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை! வாஸனை மனமார வாழ்த்திக்கொண்டு நேரே கடைத்தெருவுக்குச் சென்று ஒரு கைக்கெடியாரம் வாங்கிக்கொண்டு மிகுதிபணத்தில் இரண்டாயிரம் ரூபாயை அப்படியே பாங்கியில் கட்டினார். முதல் சம்பாத்தியம் மூவாயிரம் ரூபாய் என்றால் மகிழ்ச்சியாயிராதா? அந்தக் கெடியாரத்தைத்தான் அவர் எவ்வளவு ஜாக்கிரதையாக வைத்துக் காப்பாற்றுகிறார் தெரியுமா? 'வாஸன் அவர்களின் அன்பளிப்பு இது என்றே கருதுகிறேன்' என்று பெருமையோடு கூறுகிறார் ராஜா.

சம்சாரம் படத்தில் கிடைத்த தொகையும் புகழும் அவரது எதிர்காலத்தைப் பிரகாசிக்கச் செய்து விட்டன. தாயாரை உடனே ஊரிலிருந்து வரவழைத்துச் சென்னையிலேயே நிரந்தரமாக வசிக்கலானார்.

அதிருஷ்டதேவி ஆசையோடு அணைத்துக் கொண்டார் அவரை. அவ்வளவுதான். படங்களில் பாடும் சந்தர்ப்பங்கள் ஏராளமாகி ஓய்வு ஒழிவே இல்லாமல் போய்விட்டது. தினசரி இருபத்திநான்கு மணிநேரம் மட்டும்தான் வேலை செய்ய அவரால் முடிந்தது! இன்று சென்னையில் மூன்று படங்கள்; நாலை சேலத்தில்; மறுநாள் கோவையில். அதற்கு

மறு நாள் பம்பாயில்; அதற்கு மறு நாள் மைசூரில் என்று புரோகிராம சரியாக இருக்கிறது.

பதினெட்டு மாதங்களில் ஐம்பது படங்களில் பாடினார் ராஜா. அவர் குரல் கொடுக்காத கதாநாயகர்களே இல்லை என்று சொல்லலாம். தமிழ், மலையாளம், ஹிந்தி, தெலுங்கு, கன்னடம், சிங்களம் ஆகிய பாஷைகளில் மட்டும்தான் ராஜா பாடியிருக்கிறார்! போதுமா? அவன், மருமகள், சம்சாரம் போன்ற பல படங்களில் ராஜாவின் குரல் பிரமாத கவர்ச்சியோடு ஒலித்திருக்கிறது.

அவரை நடிக்கச்செய்ய வேண்டும் என்ற ஆசை ஈஸ்ட் இந்தியா பிக்சர் ஸாருக்கு உண்டாயிற்று. அவர்கள் தயாரித்த 'பக்க இண்டி அம்மாயி' என்ற தெலுங்குப்படத்தில் அவரை ஒரு பின்னணிபாடகராகவே நடிக்கச் செய்துவிட்டனர். அஞ்சலி, ரேலங்கி முதலியோர் நடித்த அப்படத்தில் ராஜாவின் பாடல்கள் கணீரென்று ஒலித்தன. சமீபமாக வெளியிடப்பட்ட கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி உள்படச் சுமார் எழுபது படங்களில் பாடியிருக்கிறார் ராஜா. அவருக்கு அவ்வளவு மவுசு. பின்னணி வீரரான ராஜா நன்கு ஆதிக்கம் செலுத்துகிறார்!

ராஜா தற்போது காவேரி, அசோகாவின் புரொடக்ஷன் நெ 2, எதிர்பாராதது, சாஹினி, மிஸ் அம்மா, நடசேகரா, அவன் வருன்னு, கிடப்பாடம், புள்ளிமான், பில்ம்கோவின் படம், கந்தர்வ கன்யா, அகங்கார ஸ்திரீ, சதாசுலங், மாடர்ன் தியேட்டர்ஸின் அடுத்த படம், மேலுகெலுபு, மறுமலர்ச்சி, பள்ளி படசு, ஏழையின் ஆஸ்தி முதலிய இன்னும் பல படங்களில் பின்னணியில் பாடி வருகிறார். தமிழ், தெலுங்கு, கன்னடம், சிங்களம், மலையாளம் ஆகிய பாஷைப் படங்கள் இதில் அடங்கியுள்ளன. தவிர ராஜ்கபூரின் 'அஜந்தா' தமிழ்ப் படத்திலும் அனேகமாக ராஜா பாடுவார். அவர் தனது வயதிற்கு மும்மடங்கு அதிகமான படங்களில் பாடியிருக்கிறார். விரைவில் நூறாவது படத்தில் பாடப் போகிறார்.

ராஜா தற்போது சென்னையில் தாயார் லக்ஷ்மம்மாவோடு வசித்து வருகிறார். அவரது சகோதரி நாகம்மா ரேணுகாபுரத்தில் தங்கியிருக்கிறார். சமீபத்தில் அங்கே தனக்கென ஒரு அழகிய பங்களாவைக் கட்டிக் கொண்டிருக்கிறார் ராஜா. 'இனி என்னால் உனக்குச் சமைத்துப் போட முடியாது. பேசாமெ கல்யாணம் பண்ணிக்கோ' என்று லக்ஷ்மம்மா சொன்னதாலோ என்னவோ, ராஜா விரைவில் திருமணம் செய்து கொள்ளப் போகிறார்!

ராஜாவுக்கு சிறந்த பொழுது போக்குகள் இரண்டு உண்டு. காரில ஜாலியாகச் சுற்றி வருவது; நேயர்களின் கடிதங்களுக்குத் தானே பதில் கடிதம் எழுதுவது.

பட உலகில் சில கலைஞர்கள் தொட்டதற்கெல்லாம், செக்ரட்டரியைச் கேடகச் சொல்லும்போது, ராஜா போன்றவர்கள் ரஸிகர்களிடம் நேரிலும் கடிதமூலமும் தொடர்பு கொள்வது பாராட்டத் தக்கதாகும். கார் விடுவது, நீச்சலடிப்பது, சைக்கிள் விடுவது எல்லாவற்றிலும் நன்கு பரிச்சயம கொண்டவர் ராஜா. அவர் தானே காரை ஓட்டி வருகிறார். மலேயா, பர்மா, சிலோன், இந்தியா ஆகிய இடங்களில் எல்லாம் ராஜாவின் விசிறிகள் நிறைந்திருக்கிறார்கள்.

புகை பிடிப்பது, புகையிலை போடுவது போன்ற பழக்கங்கள் ராஜாவிடம் இல்லை. புத்தகங்கள் படிப்பதில் ஆர்வமிருக்கிறது அவருக்கு. தானே சாஹித்தியங்கள் கவனம் செய்யவும் இசையமைக்கவும் அவரால் முடியும், ஆனால் அவர் பல படங்களில் பாடவேண்டியிருப்பதால் இசையமைக்கும் பொறுப்பை ஏற்க முடிவதில்லை.

தங்கமான குணம் படைத்தவர் ராஜா. கல்லூரிப் படிப்பும் பொருளும் அவரது நற்குணங்களை மாற்றி விடவில்லை. யாரிடமும் ரொம்பவும பணிவாகவும் அடக்கத்தோடும் நடந்து கொள்வார் அவர். யாருடனும் சரளமாகப்பேசிப் பழகுவார்.

ராஜா 1953-ம் வருஷத்திய சிறந்த பின்னணி பாடகர் என்ற பெருமைக்கும் உள்ளாகிறார். பிரம்மச்சாரி ராஜா, விரைவில் மாஜி பிரம்மச்சாரி ராஜாவாகிக் கலையுலகிற்குத் தொண்டாற்றி வரவேண்டும் என்பதே என் மனமார்ந்த ஆசை.

வி. கே. ஸ்ரீநிவாஸன்,
பாபநாசம்

நமது சென்னை மாகாணத்தில் மொத்தம் எத்தனை ஸ்டுடியோக்கள் இருக்கின்றன? அவற்றில் முன்னணியில் நிற்பது எது?

மொத்தம் இருபது ஸ்டுடியோக்கள் இருக்கின்றன. அவற்றில் முன்னணியில் நிற்பது வாஹினிதான்.

ஏ. இ. எஸ். இப்ராஹிம்,
தளையார்

ஸ்ரீ சுகுமாரின் 'விளையாட்டு பொம்மை' விளம்பரத்தில் தாடியுடன் காணப்படுபவர் நாகய்யா என்று கூறுகிறார் என்நண்பர். நான் ஸி. வி. வி. பந்துலு என்று சொன்னேன். இதில் வெற்றி யாருக்கு?

இருவருக்கும் இல்லை! உங்களை ஏமாறச் செய்த பி. ஆர். பந்துலுவுக்குத்தான் வெற்றி!

துரை. முருகேசன், காரமடை

சார்லி சாப்ளின், கக்கூ, என். எஸ். கே. இம்மூவரில் யாருடைய நடிப்பு இயற்கையாயிருக்கும்?

சார்லி சாப்ளினுக்குத் தமிழ் தெரிந்திருந்தால் இக்கேள்வியைப் படித்தவுடன் தற்கொலை செய்துகொண்டிருப்பார்!

ஆர். ராஜரத்னம், வேலங்குடி

ஒரு காலத்தில் பெயரும் புகழும் தன் இருபுறமும் அணைக்க ஒரு படத்திற்கு மட்டும் அதிகப் பணம் வாங்கிய அந்த நடிகர் யார்? அவர் இப்போது என்ன செய்கிறார்?

படத்துறையிலேயே தனி ஒருவனாக இப்பெருமையைப் பெறும் அவர், மீண்டும் அப்பொன்னான காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்!

அசோகாவின் புரொடக்ஷன் 2-ல் நடிக்கும் ரஞ்சன் வேறு படங்களில் நடிக்கிறாரா?

பிரின்ஸிபல் பிக்சர்ஸ் படத்தில் நடித்த வருகிறார். இது 'வெறும் பேச்சல்ல'!

எம். ஜெயகுமார், கடலூர்
என். டி.

எங்கள் ஊரில் பிரதி மாதமும் 'பேசும் படம்' பத்து தேதிக்கு மேல்தான் கிடைக்கிறது. இதற்குக் காரணமென்ன? இதற்கு என்ன செய்யலாம்?

உங்கள் ஊர் ஏஜெண்டிடம் பணத்தைக் குறித்தகாலத்தில் நீங்கள் கொடுத்து விடுங்கள்!

ஜி. பி. எஸ். மணியன்,
புதுச்சேரி

நீங்கள் எத்தனை பிரஞ்சு படங்களைப் பார்த்திருக்கிறீர்கள்?

இன்றைய பல படங்களே நமக்குப் பிரஞ்சுப் படங்கள்தானே!

மலையாள நடிகரை ஆந்திர நடிகை மணந்து கொண்டால் அவர்களது வாழ்க்கை எப்படியிருக்கும்?

'பட்டம்' 'பிரகாச'மாக இருக்கும்!

'உலக'த்தில் பரிதாபத்திற்குரியவர்கள் யார்?

இறக்கும் தறுவாயிலிருக்கும் சபாபதி!

'உலகம்' மோசமாகக் காரணம்?

திரையில் திணிக்கமுடியாத அளவு

பரம்பரைகள் அதிகமாகி விட்டதால் பான்.

நடிகையின் கண்ணீர் எதற்குச் சமானம்?

அவள் பொன்னதரங்களில் தெளியும் புன்னகைக்குச் சமானம்!

உங்களைப்போல் நானும் வர என்ன அம்சங்கள் எனக்கிருக்க வேண்டும்?

வற்றாத வறுமை; அதை வகை வகையாய் ஏற்றுக்கொள்ள குன்றாத பொறுமை! சலியாத உழைப்பு; அதை வளர்க்க பசியாத வயிறு! கனிந்த உள்ளம்; வாழ்க்கைப் பாரத்தால் குறுகிய உடல் இவ்வளவு அம்சங்களும உம்மிடம் இருக்கின்றனவா?

படமுதலாளிகளுக்கும் இதர முதலாளிகளுககும் என்ன வித்தியாசம?

மற்றவர்களின் கைப்பொருள் பெட்டியில் இருக்கும்! படமுதலாளியின் பொருள் 'டப்பா'விலிருக்கும்!

படக் கருத்துக்கள் சில சமயம் பகுத்தறிவுக்கு ஒவ்வாது போவது ஏன்?

பகுத்தறிவிலிருந்து அப்படக் கருத்துக்கள் உதிராததால்!

'நாரதர்' ஒரு வில்லனா?

இல்லை, ஒரு பத்திரிகை!

சுப்புலக்ஷ்மி தேவன், மலாயா

கலாவதி, மாயாவதி, மந்தாரவதி மற்றும் '...வதி' என்று முடியும் படங்களும் பாடாவதியாக இருந்ததே மானவதியையும் அந்தப் பட்டியலில் சேர்க்க வேண்டியதுதானா?

திருமதி. வாராவதிவாசியோ?

அசு. அப்துல்ஹை, அரகண்டநல்லூர்

தமிழ் நாட்டில் நடக்கும் எந்தப் போட்டியிலும் நம்பிக்கையில்லாத நீர், சொந்தமாக நாணயமான ஒரு போட்டியை ஆரம்பித்தால் என்ன?

நான பிறந்தது முதல் வாழ்க்கைப் போட்டியை நடத்தி வருகிறேனே!

இரா. இளமாறன், சென்னை

சேலம் ரத்னா ஸ்டுடியோவில் கைலாஸ் பிக்சர்ஸாரால் தயாரிக்கப்பட்டு வந்த 'தொழிலாளி' என்ற படம் என்னவாயிற்று?

வளருவதற்கு உரமில்லாமல் வேலை நிறுத்தம் செய்து விட்டான்!

எஸ். டி. மாறன், பாளையங்கோட்டை

மணப்பந்தலில் மாலையுடன் வீற்றிருக்கும் மங்கை, தன் எதிர்காலத்தைப்பற்றி என்ன நினைப்பாள்?

தன் வாழ்வு, தான் அணிந்திருக்கும் மலர் மாலையைப் போல் மென்மையாக இருக்க வேண்டும் என்றும் ஆனால் அதைப் போல் வாடி விடக் கூடாதென்றும் விரும்புவாள்.

தமிழ்ப் பித்தன், ரேணுகுண்டா

அறிஞர் அண்ணாத்துரையின் வசனத்திற்கும், கலைஞர் கருணாநிதியின் வசனத்திற்கும உள்ள வேறுபாடு என்ன?

அறிஞரின் வசனங்கள் கதிரவனின் பொன்னொளி. கலைஞரின் வசனங்கள் மலர் மீசைப் பனித் துளி!

திரையுலகில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆற்றும் பணியைப் பற்றி தங்கள் கருத்தென்ன?

கட்சி அரசியலைப்பற்றி என்னைக் கேட்காதீர்கள்.

ஏ. தனபால், யாழ்ப்பாணம்

சாவித்திரியின் கவர்ச்சியும் உதடுகளும், பி. எஸ். சரோஜாவின் கண்களும், பத்மினியின் பற்களும், குமாரி வனஜாவின் உடற்கட்டும் சேர்ந்து ஒரு நடிகைபானு. பானுமதியின் நடிப்பும் பாட்டும், குமாரி கமலாவின் நடனமும் கொண்டிருந்தால் எப்படி இருக்கும்?

குற்றாலம் நீர்வீழ்ச்சியில் நீர் ஒரு முறை குளித்துப் பாரும்!

கண்ணன், வேப்பேரி

ஹாலிவுட் படங்களுக்கும் நம் இந்தியப் படங்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

'தழுவல்' முறைதான்!

'செக்ஸ்—அப்பீல்' என்று எதைச் சொல்லுகிறீர்கள்?

தணிக்கை அதிகாரிகளை விழிக்கச் செய்யும் காட்சிகளை!

மீரான், வாணகப்பாடி

உலகத்திலேயே சந்தோஷமானவன் யார்?

கவலைகள் இல்லாதவன்!

சாவு துன்பத்தைத் தரக்கூடியதா?

மாள்பவனுக்கு அல்ல. ஆனால் அவனைச் சுற்றிலும் உள்ளவர்களுக்கு!

தருமன், பாபநாசம்

எதிர்பாராத வகையில் சில காட்சிகளைப் பார்க்கும் போது பெருமூச்சு விடுகிறீர்களே. அது எதைக் குறிக்கிறது?

உணர்ச்சியின் புகைச்சலை!

படத்திற்கு ஒரு முதலாளி எதிர்பார்ப்பது கதையையா? அல்லது நக்ஷத்திரங்களையா?

பணத்தை!

இந்தியாவின் முன்னேற்றத்திற்கு திரைப் படங்கள் உதவுமா?

ஒழுக்கத்தைப் பரப்புவதாக இருந்தால்!

'பித்தன்', திரிகோணமலை

ஏமாற்றம் என்றால் என்ன?

சமீபத்திய சில படங்களைப் பார்த்து விட்டு வெளியே வரும்போது ஏற்படும் அனுபவம்!

'கனவு' என்பதற்கு விளக்கம் தர முடியுமா?

தயாராகும் ஒரு படத்தின் பெயர்!

நீங்கள் ஏதேனும் அதிசயமான பொருள்களைப் பார்த்ததுண்டா?

ஓ! நல்ல படங்கள் சிலவற்றைப் பார்த்திருக்கிறேன்!

மரியதாஸ்,
திருத்துறைப்பூண்டி

நம் நாட்டுப் படங்களைப் பற்றிக் குறை சொல்கிறீர்களே, ஹாலிவுட் படங்களில் 'சில' மோசமாகத்தான் காணப்படுகின்றன. இதற்கென்ன சொல்கிறீர்?

சில அல்ல; பல படங்கள் என்று சொல்லும்!

நீங்கள் எப்படி எல்லாப் படங்களையும் பொறுமையுடன் பார்க்கிறீர்கள்?

வாழ்க்கை என்பது பொறுமையைத்தானே நமக்கு முதல்பாடமாகச் சொல்லித் தருகிறது!

சேரலாதன், காங்கேயம்

நான்...தேவியை மணக்க விரும்புகிறேன. நீர் என்ன சொல்கிறீர்?

இந்தச் செய்தியை அவர் கணவரிடம் தெரிவிக்கிறேன்!

விளம்பரத்திற்கும் விமர்சனத்திற்கும் என்ன வித்தியாசம்?

விளம்பரத்தை பணம் கொடுத்து போடச் செய்யலாம். ஆனால் விமர்சனத்தை விலைக்கு வாங்க முடியாது!

நான் சினிமாவில் சேரலாம் என்று தீர்மானித்திருக்கிறேன். நீங்கள் என்ன அபிப்பிராயப் படுகிறீர்கள்?

படவுலகம் சில காலமாவது பிழைத்திருக்கட்டும்!

ஸ்ரீநிவாஸ், சென்னை

தியாகராய நகரில் நான் ஒரு நடிகையைப் பார்த்தேன். அவர் தான் வளர்க்கும் நாயிடம் காட்டி வரும் அன்பை சுற்றத்தாரிடம் கூடக் காட்டுவதில்லை. ஏன் இப்படி?

நாய் நன்றியுள்ள பிராணியாதலால்!

ராம்ஜி, கோவில்பட்டி

பெண்களின் அழகை எதைக் கொண்டு மதிப்பிடலாம்?

அவர்களது புன்னகையைக் கொண்டு!

வாசம் மிகுந்த மலர்கள் நமக்கு எதை அறிவுறுத்துகின்றன?

இளமையும், அழகும் நிலைத்திரா என்ற படிப்பினையையும்!

வி. ரமணன், சிங்காநல்லூர்

அவலக்ஷணத்திற்கு விளக்கம் தர முடியுமா?

அழகுப் பொருள்களைச் சிபாரிசு செய்யும் சில பெண்களின் படங்கள்!

நம் நாட்டில் கலைக்குத் தனி மதிப்பு இருக்கிறது. இல்லையா?

ஆமாம். நீங்கள் அதைக் கொலை செய்தால்கூட. உங்களுக்குத் தண்டனை இடையாது!

செய்திக்கும் வதந்திக்கும் என்ன வித்தியாசம் ?
நாடகத்தில் நாம் நேரில் காண்பதற்கும் சினிமாவில் நிழல்மூலம் பார்ப்பதற்கும் உள்ள வித்தியாசம்தான்!

நீங்கள் கடவுளைப் பார்த்ததுண்டா ?
அவர் 'அன்புருவம்' என்பது உண்மையானால், நான் காந்தியடிகளைப் பார்த்ததே போதும்!

இப்ராஹீம், யாழ்ப்பாணம்

ஒரு ஆணோ அல்லது பெண்ணோ மணம் செய்து கொள்ளாமல் எவ்வளவு காலம் இருக்கலாம் ?
தனக்குத் துணை தேவை என்ற அவசியம் ஏற்படும் வரையில்.

படத் தொழிலின் முன்னேற்றத்தைப் பற்றிச் சிறிது கூற முடியுமா ?
மேற்கொண்டு வளர முடியாமல் பல படங்கள் பாதியில் நிற்கின்றன!

மனச்சாட்சி என்பது எது ?
சமீபகாலமாக விற்பனைப் பொருள்களின் பட்டியலில் சேர்ந்து விட்ட வஸ்து!

கனகம், திருநெல்வேலி

நக்ஷத்திரங்களுக்குச் சமைக்கத் தெரியுமா ?
நீர் இத்தொழில் பயிற்சிசாலையை ஆரம்பித்திருக்கிறீர்களா?

சுந்தரவடிவேல், சுன்னுகம்

பானுமதி தன் படங்களில் நடிக்க ராமகிருஷ்ணு என்ன தருகிறார் ?
அவர் தன்னையே அவருக்குத் தந்திருக்கிறாரே !

'காதல்'லுக்கு வரம்பு உண்டா ?
உண்டு. 14000 அடிக்குமேல் அது ஓடுவதில்லை !

பேரழகு வாய்ந்த இளம் பெண்ணைச் சந்திக்கும் போது நீர் என்ன சிந்தனை செய்வீர் ?
ஒன்றும் சிந்திக்க முடியாது. பார்க்கும் அந்த ஒரு நிமிஷம் நம் சிந்தனை சக்தி மங்கிவிடுமே!

ஆனந்தலிங்கம், கண்டி

வயதான சில நடிகர்கள் இன்னமும் நம் தமிழ்ப் படங்களில் நடித்து வருகிறார்களே, ஏன் ?
வரப்போகும் புது நடிகர்களுக்கு நடிப்பைப்பற்றி படத்தின் மூலம் சொல்லித் தருகிறார்களோ என்னவோ?

படவுலகிலே பெரிய குற்றவாளிகள் யார் ?
அதை நம்பி வாழ்பவர்கள் !

சிறந்த சினிமாப் படக் கம்பெனி எது ?
சிறந்த படங்களைத் தருவதுதான் !

துரைராஜ், சென்னை

தமிழ்ப் படங்களைவிட ஆங்கிலப் படங்களை சிலர் அதிகமாக விரும்புகிறார்களே, ஏன் ?
நம் தமிழ்ப் படங்களில் தணிக்கை செய்யப்பட்டு விடும் காட்சிகளை அவற்றில் பார்க்க முடிவதால்தான்!

நடிகை...வதியின் அழகைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?
அழகு வஞ்சித்துவிட்ட இடத்தில் திறமை பிரகாசிக்கிறது!

எம். வி. ராஜன், கும்பகோணம்

உண்மை என்பது என்ன ?
பேசுவதற்குக் கசப்பாகிவிட்ட ஒரு மருந்து !

மகிழ்ச்சி என்பது என்ன ?
தயர மேகங்களிடையே பளிச்சிடும் மின்னல் !

தியாகம் என்பது என்ன ?
பிறர்வாழ தன் வாழ்வை மடித்துக் கொள்வது !

ஏ. அரியநாயகம், சுன்னுகம்

நக்ஷத்திரங்களிடம் ஏராளமான பணம் குவிந்து கிடக்கிறது. ஆயினும் அவர்கள் ஏன் பந்தயங்களில் ஈடுபடுகிறார்கள் ?
தங்களிடம் தேவைக்கதிகமாக இருப்பதால் !

இளம் பெண்களுக்கு மட்டும் சினிமாவில் சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுகின்றன. சில வயதான ஸ்திரீகளுக்கும் படவுலகில் சந்தர்ப்பம் அளித்தால் என்ன ?

தற்போது படவுலகில் இருப்பவர்களில் பெரும்பான்மையோர் வயதானவர்கள்தானே?

மணி, கடப்பை

படவுலகில் தற்போது அதிகமாகப் பரவி வரும் வியாதி எது?

தோல்வி!

ஒரு சினிமா நடிகையை மணக்க ஆசைப்படுகிறேன். அதற்குச் சுலபமான வழி எது?

சம்பந்தப்பட்ட நடிகையின் சம்மதத்தைப் பெற்றுவிடுவதுதான்!

பெண் மங்கையாவது எப்போது?

ஆண் மகனை ஏறிட்டுப் பார்க்கக் கூசும்போது!

செல்லத்துரை, மதுரை

பெண்கள் ஏன் ரகசியங்களைக் காப்பாற்றிக் கொள்வதில்லை?

பெண்களை ஆண்டவன் படைத்ததே பரப்புவதற்குத்தான்!

ஏழைக்கும் பணக்காரனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

பணக்காரனிடம் எதிர்காலத்தைப் பற்றி திட்டம் உண்டு; ஏழையிடம் வெறும் நம்பிக்கைதான் இருக்கும்!

உலகில் யோக்கியமானவர்கள் யார்?

எண்ணிக்கையில் குறைந்தவர்கள்!

மாணிக்கம், சிதம்பரம்

ஒரு படத்தின் வெற்றிக்கு முக்கியமானது கதையா, வசனமா, டைரக்ஷனா?

பட முதலாளியின் அதிருஷ்டம் தான்!

துயர சம்பவங்கள் நிறைந்த படங்களை விட, ஹாஸ்யப் படங்களை ரஸிகர்கள் ஏன் அதிகம் விரும்புகிறார்கள்?

வாழ்க்கையே ஒரு துயர சம்பவமாக மாறிவிட்டதால் இருக்கலாம்!

கே. எம். தியாகராசன், உடுமலைப்பேட்டை

தற்போது வெளிவரும் படங்களில் படிப்பினை யூட்டக்கூடிய அம்சங்கள் அதிகமிருக்கின்றனவா அல்லது பொழுதுபோக்கு அம்சங்கள் அதிகமா?

இரண்டும் இல்லை, தோல்வி அம்சம் தான்!

சில படங்களில் ஒன்றுமே யில்லையே, இது எதைக் காட்டுகிறது?

தயாரிப்பாளரின் 'காலி'யான இடத்தைக் காட்டுகிறது!

பயம் என்பது என்ன?

புதுப்படங்களைத் திரையிடும்போது படமுதலாளிகளுக்கு ஏற்படும் அனுபவம்!

பா. ராமன், சென்னை

. நடிகை ஏன் இப்போது படங்களில் நடிப்பதில்லை?

அவர் இல்லாமலேயே பல மட்டமான படங்களை நாம் பார்த்து வருகிறோமே! போதாதா!

பந்தயங்களில் அதிக தோல்வியைத் தருவது எது?

பசியைப் போக்க நாம் உயிரைப் பிடித்துக் கொண்டு ஓடும் வாழ்க்கைப் பந்தயம்தான்!

என் நண்பர் டைரக்டர்.....ரின் திறமையைப்பற்றி பிரமாதமாகச் சொல்லுகிறாரே. நீர் என்ன சொல்லுகிறீர்?

அவர் தூக்கத்தில் உளறியிருக்கலாம்!

டி. கே. ஆர். கோவிந்தராஜன், திருச்சி

உண்மையை மறைப்பவர்கள் யாரிடம் நேசமாக இருப்பார்கள்?

அதை அறிந்து கொள்ள முயற்சி செய்பவர்களிடம்!

சிந்திக்க வைப்பது எது? சிதற அடிப்பது எது?

முறையே அறிவும் அவசரமும்!

மனிதன் படும் திண்டாட்டங்களில் எது பெரிது?

எண்சாண் உடம்பில் ஒரு சாண் வயிற்றைப் பசிக்காமலிருக்கச் செய்யும் முயற்சிதான்!

"நான் ரஸித்த காட்சி"



("சினிமா பார்க்கும் போது ஜனங்கள் ஆபாசத்தைத்தான் விரும்புகிருர்கள். மாயா ஜாலப் படங்களும், ஸ்டண்டுகளும்தான் ஓடுகின்றன. அரை நிர்வாண நடனம் இல்லாத படங்கள் தோல்வியடைகின்றன" என்றெல்லாம் கூறும் படமுதலாளிகளை இந்தப் பகுதியைக் கவனமாகப் படிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறோம். ஜனங்கள் எதை ரஸிக்கிருர்கள்; எதைப் பாராட்டுகிருர்கள் என்று தெரிந்து கொள்ள இப்பகுதி மிகவும் உபயோகமாக அமைந்திருக்கிறது-ஆசிரியர்.)

*கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி

கணபதியும் ராகினி தேவியும் 'ஹனிமூன்' போகும்போது. கார் கெட்டு விடுவதால் கணபதி ரிப்பேர் செய்யப் போகிருன். ஆனுல் அவன் ஏறுமுன் கார் கிளம்பி விடவே அவள் தவித்தவாறு காரில் போய் விடுகிருள். அவனை 'பிள்ளை பிடிப்பவன்' எனத்தீர்மானித்து சில கிராமவாசிகள் ஒரு சாவடியில் அடைத்து விடுகிருர்கள். அவர்கள் அடைத்து வைத்த சாவடியிலிருந்து தப்பி ஓடி ஒரு பானை சூளை அடுப்பில் புகுந்து கொள்ளுகிருன். சூளையின் சொந்தக்காரன் அதே அடுப்பில் விறகு வைத்து, எண்ணை ஊற்றித் தீயும் வைத்து விடுகிருன். 'ஐயோ பாவம். கணபதி குளோஸ்' என்று நாம் நினைக்கும் போது அவன் அதிலிருந்து வெளிவந்து ஓடுவது நம்மை வயிறு வெடிக்கச் சிரிக்கச் செய்கிறது!

ராஜாமணி,
கடலூர்.

*அந்த நாள்

உஷா கணவன் ராஜனுல் நாற்காலியோடு கட்டப்படுகிருள். கோபத்தாலும் துக்கத்தாலும் அவள் மனம் துடிக்கிறது. "நான் உங்களை ஒன்று கேட்கிறேன். சில காலம் இன்பமாக வாழ்ந்த இன்பத்தின் பேரில் கேட்கிறேன். நமக்குப் பிறந்து சில காலம் இருந்து, இறந்துவிட்ட குழந்தையின் பேரால் கேட்கிறேன். நாட்டைக் காட்டிக் கொடுத்து ஜப்பானுக்குப் போகும் நீங்கள், தயவு செய்து, 'தாய்நாட்டுக்குத் திரும்பமாட்டேன்', என்று சத்தியம் செய்து கொடுங்கள்"என்று ஆவேசத்தோடு கேட்கிருள். அவளது தேசபக்தியைக் கண்டு நாம் மெய் மறந்து போகிறோம். அற்புதமான காட்சி.

சகுந்தலா,
தாம்பரம்.

*இல்லற ஜோதி

கலைஞன் மனோகரன் காரில் அடிபட்டுக் கட்டிலில் கிடத்தப் பட்டிருக்கிருன். 'சித்ரா சித்ரா'என்று அவன் முணுமுணுப்பதைக் கேட்டு. டாக்டர், அவள் வந்தால்தான் மனோகரன் பிழைப்பான்என்று கூறுகிருர். சித்ராவின் காலில் விழுந்து கெஞ்சுகிருள் காவேரி.

"உன் சொத்துதான் உன்னிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டதே! நான்தான் அவரைப் பார்ப்பதேயில்லை என்று முடிவு கட்டிவிட்டேனே; இன்னும் ஏன் இப்படிச் சித்ரவதை செய்கிருய் காவேரி? நான் வரமுடியாது காவேரி! நான் வந்து பார்த்து என் மனவேதனையை அதிகரித்துக் கொள்ள விரும்பவில்லை. மேலும் மீண்டும் வந்து உன் குடும்பத்தில்

---

* இக்குறியிடப்பட்ட மூன்று கடிதங்களுக்கும் தலைக்கு ஐந்துரூபாய் வீதம் பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

குழப்பம் உண்டுபண்ண விரும்ப வில்லை காவேரி!" என்று கூவுகிறுள் சித்ரா. காவேரி கதறுகிறுள். "சித்ரா! தாயே! என் அன்னையே! தாங்கள் வராவிட்டால் ஊசலாடும் அவரது உயிர் நம்மைவிட்டுப் பிரிந்துவிடும் சகோதரி! அவரைப் பின்பற்றி மூன்று உயிர்கள் துடி துடித்து கொண்டிருக்கின்றன சகோதரி! என் கணவன் என்பதற்காக வரவேண்டாம். உன் காதலன் என்பதற்காக - ஊசலாடும் அவர் உயிருக்காக - வந்துசெல் சித்ரா! நீ வந்து அவர் உயிர் பெற்றதும் என் சொத்தை உன்னிடமே ஒப்படைக்கிறேன்" என்று கூறிக் கதறிய படி சித்ராவின் காலில் விழுகிறுள். கண்களில் நீர் தாரை தாரையாக வழிகிறது நமக்கு. ஏனே உடலும் உள்ளமும் நடுங்குகின்றன.

எஸ். குப்புசாமி,
பாளையங்கோட்டை.

கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி

ராகினி வருகிறுள். படுக்கை அறையிலே நிற்கும் கணபதி மகிழ்ச்சியோடு வரவேற்கிருன். அவள் உள்ளே சென்று பழைய சாவித்திரியாக - நாட்டுப்புறத்து தங்கையாக - வருகிறுள். 'நான் வேண்டுமா? நாகரிக நகை வேண்டுமா?' என்று கேட்கிறுள் அவள். 'நீதான்' என அணைக்கிருன் அவன். அருமையான காட்சி.

வி. பத்மகுமார்,
திருச்சி.

கிராமவாசிகளால் கட்டப்பட்டுள்ள கணபதி தவிக்கிருன். 'கங்கணம் அவிழ்க்காமல் வீட்டைவிட்டு வெளியேறக் கூடாது' என்று சொன்ன தாயின் பேச்சைத் தட்டி வந்தவன் தவிக்கிருன். 'அம்மா பேச்சைக் கேட்காதவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்க இந்தியாவில் ஒரு சட்டம் வரக்கூடாதா?' என்கிருன். அவன் நிலையைக் கண்டு வாய்விட்டுச் சிரிக்கிறேம்.

வி. ராமசாமி,
மதுரை.

அம்பலவாணனும் கணபதியும் ராகினி தேவியின் வீட்டுக்குப் போகிருர்கள். அப்போது அவள் வேலைக்காரியிடம் 'பேபி விழித்துக்கொண்டு விட்டதா?' என்று கேட்கிருள். அவன் மனக்கோட்டை சரிகிறது ஆனல் தூங்கிவிட்டு வரும் நாயைப் பார்த்ததும்தான் அவன் மனம் நிலைக்கு வருகிறது. தமாஷான கட்டம் இது.

எம். பி. எஸ். பெருமாள்,
தென்காசி.

கணபதி கடுமையாக பிரம்மசரிய விரதம் அனுஷ்டிக்கிருன். ஒரு நாடகம் பார்க்கப் போகிருன். நாடக விஸ்வாமித்திரர் மிகவும் கடுந்தவம் செய்கிருர். மேனகை வருகிறுள். நடனமாடுகிறுள். விஸ்வாமித்திரர் லக்ஷியம் செய்யவில்லை; அது கணபதிக்குப் பரம திருப்தியைக் கொடுக்கிறது! இரண்டொரு நிமிஷங்கள் தான்! விஸ்வாமித்திரர் மயங்கி அவள் பின்னே போகிருர். அவ்வளவுதான்; கணபதி ஓடிப் போய்த் தடுக்கிருன். பிரம்மச்சரியத்தைப் பற்றிப் பிரசங்கமே செய்ய ஆரம்பிக்கிருன். நாடக விஸ்வாமித்திரர் தவித்துப் போகிருர்! மேனகை திடுக்கிடுகிறுள்!! ரஸிகர்கள் ஒருஞ்சியில் அடிக்கும் வரை பேசுகிருன்! சிரிப்பு பொத்துக் கொண்டு வருகிறது நமக்கு!

ராதா ஹமீத்,
சென்னை.

கணபதி மணம் செய்து கொள்ளச் சம்மதிப்பதானல், அது யாராக இருந்தாலும், முடித்து வைக்கத் தீர்மானிக்கிருன், அம்பலவாணன். ஆனல் அவன் சம்மதம் தெரிவிக்கும் போது அம்பலவாணன் திடுக்கிடுகிருன்! ஆமாம். 'கிணறு வெட்டப் பூதம் புறப்படுவது போல' கணபதி அம்பலவாணனின் ஆசைக் காதலி பத்மினியையே மணக்க விரும்புகிருன். அம்பலவாணனிடம் நமக்கு அனுதாபமேற்படுகிறது.

எம் பி. எம்.,
தென்காசி.

சாவித்திரியை அவமானப்படுத்தி யனுப்பிய கணபதியை அவள் எதிரி

லேயே கண்டபடி திட்டுகிருள் பத்மினி. அப்போது சாவித்திரி, 'அவரை அப்படியெல்லாம் திட்டாதே பத்மினி' என்கிருள். அவளுக்கும் நாகரீகம் இன்னதென்று விளக்குகிருள் சாவித்திரி. சிறந்த காட்சி.

"தமிழ்த் தாஸன்,"
ஈரோடு.

பத்மினி வீட்டில் பெண் பார்க்க வந்த கணபதியோடு அம்பலவாணன் உட்கார்ந்திருக்கிருன். ஆரம்ப முதல் எல்லா ஏற்பாடுகளும் நடக்கும்போது சோக வடிவமாக உட்கார்ந்திருக்கிருன் அவன், கடைசியிலே, பத்மினி, தனக்கு கணபதி தகுதியற்றவன் என்று கூறியதும் தான் அம்பலவாணனுக்கு உயிர் வருகிறது! நமக்கும் அம்பலவாணனிடம் ஏற்படும் அனுதாபம் மகிழ்ச்சியாக மாறுகிறது.

வி. தண்டபாணி,
கடலூர்

அமெரிக்கா மேடம் ராகினி தேவிக்குப் பாடவும் ஆடவும் தெரியும். அவைகளில் அவளுக்குள்ள விருப்பத்தையறிந்த கணபதி, தானும் அப்படியிருக்க ஆசைப்படுகிருன், அதன்படி மறைவில் அம்பலவாணன் பாடும்போது கணபதி வாயசைக்கிருன். ராகினியும் பத்மினியும் முதலில் ரஸிக்க ஆரம்பிக்கிருர்கள். போகப்போக பாடுவது தன் காதலன் அம்பலவாணன் என்பது பத்மினிக்குத் தெரிந்து விடுகிறது ராகினியிடம் அவள் இதைக் கூறவே அவள் கோபத்தோடு கணபதி வீட்டுக்கு வருகிருள். அப்போது பிரமாதமாக நடனமாடுகிருன் கணபதி! அம்பலவாணன் அவனைக் கவலித்து விட்டுத் தவிக்கிருன். ராகினி பேச ஆரம்பித்தவுடன் இருவரும் நடுநடுங்குகிருர்கள். வயிறு வெடிக்கச் சிரிக்கும் காட்சி.

ஜி. உலகநாதன்,
திருநெல்வேலி

போலி ஸ்தாபனங்களுக்குச் சவால்!

இலவசக் கல்வி போதனை

C. குருப் வகுப்புகள் ஆரம்ப தேதி 19-5-54

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்த ஆண், பெண் யாவரும் 1. மெட்ரிகுலேஷன், 2. S. S. L. C., 3. தமிழ் வித்துவான், 4. Book - Keeping, 5. E. S. L. C-, (8-ம் வகுப்பு), 6. கிராம மணியம், 7 கைத்தறி நெசவு, 8. ஹோமியோபதி டாக்டர், 9. ஹிந்தி (54 ஆகஸ்ட்), 10. பேசிக் ஆங்கிலம் (A. B. C. D. ஆரம்ப ஆங்கில பாடம் முதல் 5-ம் பாரத்திற்குரிய பாடம் வரை) முதலிய 1954-55-ம் வருட சர்க்கார் பரீட்சைகளுக்குத் தபால் மூலம் மாதக் கட்டணம், வகுப்புக் கட்டணமின்றி இலவசமாக பயிற்சி பெறும் மாணவர்கள் தேவை. பரீட்சையின் வெற்றிக்கும் தொடர்ந்து பாடங்கள் அனுப்பி பயிற்சி அளிக்கப்படும் என்பதற்கும் Guarantee Certificate அளிக்கப்படும். மேற்கண்டவாறு எம்மால் செய்யத்தவறின் மாணவர்களின் கஷ்ட நஷ்டங்களுக்கு நாங்கள் பொறுப்பு என்பதற்கும் இப்பத்திரம் ஆதாரமானது. ஆகவே 19-5-54 முதல் ஆரம்பமாகும் C. குருப் வகுப்புகளின் முழு விவரங்கட்கு உடன் 2 ஒரு அணு ஸ்டாம்புடன் எழுதி சேர்ந்து கொள்ளவும். சொந்த அச்சகம் உண்டு.

பாரத மாதா ஹிந்தி வித்யாலயம்

ரிஷிவந்தியம் P. O. (via) திருக்கோவிலூர் S.A. DT.

கணபதி பெண்ணைப் பார்க்க வருவதற்குப் பதில், சாவித்திரியை அவனுக்குக் காட்ட வருகின்றனர் அவளது பெற்றோர். ஆனால் நாக ரீகத்தில் மோகங்கொண்ட அசட்டு கணபதி, அவள் மனம் புண்படும் படிப் பேசிவிடுகிறான். கண்கலங்கி நிற்கிறாள் பேதை சாவித்திரி. மன முருக்கும் காட்சி.

செ. வீ. ச ,
சென்னை.

பள்ளி மாணவர் சங்கத்திலே ராஜன் பேசுகிறான். அற்புதமான உபமான உபமேயங்களுடன் நாட்டின் அஹிம்சா மூர்த்தியையும் உத்தம புருஷர்களையும் பற்றி விவரமாகப் பேசுகிறான். அவன் பேச்சு யாருக்கும் உணர்ச்சி யூட்டுவதாக இருக்கிறது. அருமையான வசனம்,சிறந்த அமைப்பு. உயர்ந்த காட்சி இது.

கு. கோபால்,
கோவை.

அந்த நாள்

தேசத் துரோகியான ராஜன், அவ்வப்போது ரேடியோ மூலம் செய்தியனுப்பி வருகிறான் எதிராகளுக்கு. இதை அறிந்த அவன் மனைவி உஷா, அந்த ரேடியோவை உடைத்து விடுகிறாள். ராஜன் அத்தோடு நில்லாமல் தன் சதித் திட்டங்களையெல்லாம் அவளிடம் கூறுகிறான். தேசபக்தி மிகுந்த உஷா, தன் கணவனென்றும் பாராமல் ராஜனைச் சுட முயற்சிக்கிறாள். மனைவியின் எதிர் பாராத மன மாறுதலைக் கண்ட ராஜன், அதைத் தடுக்கிறான். அப்போது துப்பாக்கியின் குதிரை அழுத்தப்பட்டு. குண்டு ராஜனின் மார்பில் பாய்கிறது. ராஜன் மாண்டு போகிறான். உள்ளமுருக்கும் காட்சி இது.

பி. ஆர். ஜனார்த்தனம்,
திருச்சிராப்பள்ளி.

நிரபராதி தண்டனை அடைய விருப்பதைக் கண்டு போலீஸ் உத்தியோகஸ்தர்களிடம் தானே குற்றவாளி என்பதை உஷா ஒப்புக்கொண்டுவிடுகிறாள். தன் கணவன் தேசத் துரோகி என்பது வெளியாகி விடுமே, என்ற பயத்தால், முதலிலேயே குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை, என்று அவள் கூறும்போது நமக்குக் கண்களில் நீர் வழிந்தோடுகிறது. தேசபக்தியும் கணவனிடம் அன்பும் கொண்ட அந்த அபாக்கியசாலியைக் கண்டு பரிதாபப் படுகிறோம் நாம்.

எஸ். ஆர். லக்ஷ்மி,
மைலாப்பூர், சென்னை.

ராஜன் கொலை செய்யப்பட்டது யாரால், என்பது புரியாத ஒரு மர்மமாக இருக்கிறது. சின்னய்யா, பட்டாபி, அம்புஜம், ஹேமா முதலிய யாவர்மீதும் இன்ஸ்பெக்டருக்குச் சந்தேகம். ஆனால் துப்பறியும் புலி சிவானந்தம், விவரங்களை ஜருராகவும் திறமையுடனும் சேகரிக்கிறார். உஷாவிடம் சந்தேகம்கொண்ட அவர்,அவள் கை விரல் ரேகையைப் பதிவு செய்ய தந்திரமாக மை ஒழுகும் பேனவைக் கொடுப்பதும் காகிதத்தில் துடைக்கச் செய்து அந்த ரேகை பதியும்படிச் செய்வதும் பிரமாதம். அருமையான—சிந்தனையைத் தூண்டும்—காட்சி இது.

ராஜு,
மதுரை.

உஷா கடைத்தெருவுக்குச் சேலை வாங்கப் போயிருக்கும்போது வீட்டுக்கு சாப்பிட வருகிறான் ராஜன். அப்போது அவனது சகோதரனின் மனைவி ஹேமா அவனுக்குக் காப்பி கொடுத்துவிட்டுத் தங்களுக்குப் பணம் கொடுக்காமல் அவனே 'சாப்பிடுவதாகச் சண்டை போடவே, கோபமாக எழுந்து போய் விடுகிறான். அப்போது அவன் சகோதரன் வந்து ஹேமாவைக் கண்டிக்கும் போது, அவள் கோபத்தால் கண்ணாடி பால் டம்ளரை உடைக்கிறாள். அவன் மனைவியின் செய்கை கண்டு, "ராக்ஷஸியாக எனக்கென்று எங்கிருந்து வாய்த்தாயோ?" என்று கூறி வருந்தும்போது, நமக்கு ஹேமாவின் மீது தாங்க முடியாத கோபம் ஏற்படுகிறது. சகோதர பாசம், இக்கால நாரீமணிகளின் அகம்பாவம் இவைகளை விளக்கும் அரிய காட்சி.

டி. கே. ஆர். கோவிந்தன்,
திருச்சி.

இல்லற ஜோதி

மனோகரன் ஒரு கலைஞன். தான் எழுதிய முற்றுப் பெறாத கவிதைக்கு முடிவு எழுதும். அவனிடம் காதல் கொள்ளுகிறாள் சித்ரா. கலையுணர்ச்சியற்ற கட்டுப்பெட்டியான காவேரியை மனைவியாகப் பெற்ற மனோகரனும் சித்ராவைக் காதலிக்கிறான்.

படுக்கையிலிருக்கும்போது, தன் தவறை உணர்ந்து கொண்ட மனோகரன் "ஏ பெண் தெய்வமே! கலைஞன் உள்ளத்தில் களங்கமிருக்கக் கூடாது. ஆனால் கலைஞனாகிய நான், கட்டிய மனைவியிருக்க வேறொருத்தியைக் காதலித்தேன். நீ பெண் தெய்வம். உன் பாதம் பட்ட இடத்தைக் கண்ணீரால் கழுவினால் தான் என் மனம் சாந்தியடையும்" என்கிறான். அவன் தன் மனைவி காவேரியின் காலைப் பிடித்துக் கொண்டு கதறும் காட்சியில் நாம் நம்மை அறியாமலேயே கண்ணீர் சிந்துகிறோம்.

எஸ். குப்புராஜ்,
திண்டுக்கல்.

சித்ராவின் திருமணத்தைத் தள்ளிப் போடும்படி நேரிட்டதைக் கண்டு, புரொபஸர் கோபத்தில் பொன் நகைகளையெல்லாம் உடைக்கிறார். அப்போது அங்கு வந்த மோகன் மாமனிடம் பொன் நகைகளை உடைப்பதில் பிரயோஜனமில்லையென்றும் புன்னகை செய்த வேலை அது என்றும் விளக்கி, மனோகரனை சித்ரா காதலிப்பதைப் பற்றிக் கூறுகிறான். கோபமடைந்த புரொபஸர் மனோகரன் வீட்டுக்கு ஓடுகிறார். பறவை தலைக்கு மேல் வட்டமிடும்போதே அதைத் துரத்தாமல் தலையில் கூடு கட்டி முட்டையிட்டுக் குஞ்சு பொரித்த பிறகு வருந்துவதில் அர்த்தமில்லை, என்றெல்லாம் கூறி, மனோகரனுக்கு சித்ராவை மணமுடித்து வைக்கும்படிக் கூறிக் கதறுகிறாள் காவேரி. உணர்ச்சி வசப்படுத்தி விடும் சீரிய காட்சி அது.

இ. வி. வேலு,
சென்னை.

தன் கணவனின் அன்பைத் திரும்பப் பெறவேண்டி, சித்ராவிடம் செல்கிறாள் உத்தமி காவேரி. இருவருக்குள்ளும் நீண்ட நேரம் விவாதம் நடைபெற்ற பின், தனக்குச் சாட்சியாக தாலியைக் காட்டுகிறாள் காவேரி. ஆனாலும் சித்ராவின் மனம் இரங்கவில்லை. தன் கணவன் தனக்கென்று இல்லாதபோது தனக்கு அவன் கட்டிய தாலி தேவையில்லை, என்று கூறி சித்ராவை அணியும்படிக் கேட்கிறாள் காவேரி. மனம் மாறிய சித்ரா தான் இனி மனோகரனைச் சந்திப்பதில்லை என உறுதி கூறுகிறாள்.

டி. எஸ். பி. மணி,
பாளையங்கோட்டை.

காவேரி தன் கணவன் மனோகரனைத் திருத்த முயற்சிக்கிறாள். சித்ராவிடம் அவன் கண்ட திறமையைத் தானும் அடைந்து அவன் அன்பைப் பெறத் துடிக்கிறாள் அவள் 'கூண்டுக்கிளியான எனக்குப் பேசக் கற்றுக் கொடுங்கள்; உங்களுக்குக் கலையின்பம் அளிக்கிறேன்; எனக்குப் படிக்கக் கற்றுத் தாருங்கள்; உங்கள் கவிதைகளைப் படித்து விளக்கம் கூறுகிறேன்" என்றெல்லாம் அவள் வேண்டும்போது, 'காவேரி உத்தமி' என்று நம் மனம் வாழ்த்துகிறது. அவள் ஆசைகள் நமக்கு வேடிக்கையையும் வேதனையையும் தருகின்றன.

"அறிவின்பம்,"
கரூர்.

பணம் படுத்தும் பாடு

வறுமையில் தன் தந்தை உழலுவதைக் காணச் சகிக்காத ரோகிணி, கவிஞன் ராமுவிடம் உதவி பெற வருகிறாள். சூழ்நிலையும் சந்தர்ப்பமும் காரணமாக ராமு அவளிடம் சிடுசிடுத்துப் பேசி விடுகிறான். அவள் நொந்த மனத்தோடு நேரே ரேடியோ ஸ்டேஷனுக்குப் போகிறாள். அன்று அவளது நிகழ்ச்சி இருக்கிறது. தன் மனத்துயரைச் சோக கீதமாக வடிக்கிறாள் அவள். ரேடியோவின் மூலம் அவள் மனோநிலையையறிந்த ராமுவின் கண்களில் நீர் வழிந்தோடுகிறது. கவிஞனின் உள்ளம் உருகுவது போல் நம்

உள்ளமும் உருகுகிறது. இக்காட்சியிலே.

எஸ். சுப்பிரமணியம்,
மதுரை.

சேகரும் ராமுவும் ஹோட்டல்காரனுக்கும் வீட்டுக் குடிக்கூலிக்கும் நிறைய தொகை பாக்கி கொடுக்க வேண்டியிருந்தது. அதற்காக சேகர் ராமு இருவரது உடமைகளையும் எடுத்துக் கொண்டு போய்விடநினைக்கும் அவர்களுக்குள் பெரிய தகராறு ஏற்பட்டு விடுகிறது. அப்போது சேகரும் ராமுவும் லக்ஷ. ரூபாய் பணத்துடன் வருகிறார்கள். அவர்கள் கையில் இருக்கும் நோட்டுக் கத்தைகளைப் பார்த்து விட்டு உபசாரம் செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். வீட்டுக்குச் சொந்தக்கார மாது அத்தை உறவு கொண்டாடுகிறாள்! ஹோட்டல்காரன் காபி டிபன் கொண்டு வரும்படிக் கட்டளையிடுகிறான்! செல்வத்துக்கும் ஏழ்மைக்குமுள்ள வரவேற்பு விரட்டுதல்களை இக்கட்டம் அழகாகச் சித்தரிக்கிறது.

டி. ஆர். ராதாகிருஷ்ணன்,
மதுரை.

சம்பந்த முதலியார் செலவு செய்யும்படிக் கொடுத்த லக்ஷ. ரூபாயைச் செலவழித்துவிடப் பல வழிகளிலும் முயற்சி செய்தும் சேகராலும் ராமுவாலும் முடியவில்லை. குதிரைப் பந்தயத்தில் பணம் கரைந்து வருகிறது. மிகவும் சந்தோஷப்படுகிறார்கள். ஆனால் கடைசி ஐயாயிர ரூபாயைக் கட்டும்போது, அது மூன்றரை லக்ஷமாகத் திரும்பக் கிடைக்கிறது சந்தோஷிப்பதற்குப் பதில் இருவரும் வருந்தும் காட்சி நமக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது.

எஸ். கே. சுவாமி,
பாளையங்கோட்டை.

ஒரு லக்ஷ. ரூபாயைச் செலவழிக்க முடியாமல் சேகர் தவித்து உடல் நலிவுற்று விடுகிறான். டாக்டர் அவனிடம் விவரமறிந்து தர்மம் செய்யும்படிக் கூறுகிறார் 'அப்படி நிபந்தனையிருந்தால் உங்களுக்கே கொடுத்திருப்பேனே'என்னும்போது டாக்டரே மயக்கமாகி விழுவது ரஸிக்கத்தக்கது!

இ. பி. மணி,
திண்டுக்கல்.

பேசும் படம், சினிமா சித்திரம், பால பாரதி

இலங்கை முழுவதுக்கும் எமது சோல் ஏஜண்டுகள்:—

மோகன் அண்' கம்பெனி லிமிட்டெட்.,

151, செட்டியார் தெரு, கொழும்பு
661/4, 1-ம் குறுக்குத் தெரு, கொழும்பு
கோட்டைமுனை, மட்டக்களப்பு
424, K. K. S. ரோடு, யாழ்ப்பாணம்

ஜெனரல் ஆபீஸ்: 74 டேம் வீதி, கொழும்பு.
மற்றும் நூற்றுக்கு மேற்பட்ட
மோகன் சப் ஏஜண்டுகளிடமும் பெறலாம்.

தபால் பெட்டி

பாராட்ட வேண்டும்!

மார்ச் மாதம் 21-ம் தேதி பம்பாய் மெட்ரோ தியேட்டரில் 'பிலிம்பேர்' பத்திரிகை பரிசளிப்பு விழாவை அமோகமாக நடத்தியது. சிறந்த நடிகரென திலீப் குமாருக்கும், சிறந்த படம் என்று 'தோ பிகா ஜமீ'னுக்கும் சிறந்த டைரக்டர் தயாரிப்பாளர் என்பதற்காக பிமல்ராய் அவர்களுக்கும் சிறந்த சங்கீத டைரக்டர் எனபதற்காக நௌஷத் அலிக்கும் சிறந்த நடிகை என்பதற்காக மீனா குமாரிக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

'பிலிம்பேர்' பத்திரிகை ஆரம்பமாகி சில வருஷங்களே ஆகின்றன. அதற்குள் இப்படிப் பட்டதொரு மகத்தான விழாவைக் கொண்டாடிப் பெரும் புகழும் பெற்றுவிட்டது அது. இந்தியாவிலிருக்கும் அமெரிக்காவின் ராஜதூதர் ஜார்ஜ் ஆலன் அவர்கள் இவ்விழாவுக்குத் தலைமை வகித்தார். ஏராளமான பட உலகப் பிரமுகர்களும் பத்திரிகாசிரியர்களும நடிக, நடிகையரும் விழாவில கலந்து கொண்டனர்.

நடிகை நளினி ஜெய்வந்தின் தேசிய கீதத்துடன் விழா ஆரம்பமாகியது அடுத்து காமினி கௌஷல் கிராமிய நடனமாடினார். கீதா (ராய்) டட், தல்லத் முகமது நௌஷத் அலி ஆகியோரின் கானவர்ஷம் அமர்க்களமாக இருந்தது. தென்னிந்தியாவின் பிரதிநிதியான வைஜயந்தி மாலாவின் தில்லானா நடனம் விழாவிலேயே சிறப்பாக இருந்தது. தென்னிந்தியாவின் பெருமையும் கௌரவமும் பலமடங்கு அவரது நடனத்தால் உயர்ந்தன என்றே கூறவேண்டும். அதற்காக மாலா பாராட்டத் தக்கவர். விழாவை நடத்திய 'பிலிம்பேர்' பத்திரிகையின் தொண்டும் பாராட்டுதலுக்குரியதாகும்.

சசாங்கன்,
சென்னை.

வழிசெய்க!

நான் ரஸித்த காட்சி பகுதியில், இந்திய சகோதர, சகோதரிகள், புதுப் படங்கள் வெளியானவுடனே, படங்களில் அவர்கள் ரஸித்த காட்சிகளை எழுதி யனுப்பிவிடுகிறார்கள். ஆனால் இலங்கை நேயர்களால் அப்படிச் செய்ய முடிவதில்லை. இந்தியாவில் திரையிடப்பட்டு பல மாதங்கள் கழிந்தே இங்கு பல படங்கள் வெளியாகின்றன. அவைகளிலிருந்து காட்சிகளை எழுதியனுப்ப தாமதமாகின்றது. அவை ''பேசும் படத்''தில் வெளியிடப் படுவதில்லை. எங்களுக்குப் பரிசு முக்கியமில்லை. கடிதங்களைப் பிரசுரிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

அம்பிகை ரங்கநாதன்,
மதுல்கல்வி, இலங்கை.

[இலங்கை நேயர்கள் அங்கே அவ்வப்போது வெளியாகும் சிங்களப் படங்களிலிருந்து அவர்கள் ரஸித்த காட்சிகளை எழுதி யனுப்பலாம். கடிதங்கள், எழுதப்படும திறமையைப் பொறுத்து வெளியிடப்படும். கூடியவரை வெளிநாட்டு நேயர்கள் அனுப்பும் கடிதங்களை—பழைய படங்களிலிருந்து எழுதப்பட்டாலும் — பிரசுரிக்க முயற்சிக்கிறோம்—ஆ-ர்.]

●

நல்ல நியாயம்!

இந்தியச் செய்திப்படம் நெ. 277-ல் இந்தியாவில் டெல்லி, பம்பாய், பங்களூர் ஆகிய இடங்களில் குடியரசுதின விழா எவ்வளவு குதூகலமாகக் கொண்டாடப் படுகிறது என்பதைக் காண்பிக்கின்றனர். சென்னை நகரைப்பற்றி அதில் காட்டப் படாதது வருந்தத்தக்கது. நல்ல நியாயம் இது என்று கேட்கத் தோன்றுகிறது.

இ. ஷண்முகரத்னம்,
சென்னை.

பண்பாட்டுக்கு இழுக்கு!

கற்கோட்டை படத்தில் இந்தியப் பண்பாடு அழிக்கப்பட்டிருக்கிறது. சுந்தரி பிரதாபனைக் காதலிக்கிறாள். இருவரும் ஒருவரை யொருவர் பிரிவதில்லை என்ற அளவில் உள்ளத்தோடு உள்ளம்பதியக் காதலித்தவர்கள். பிரதாபன் சிறைப்பட்ட பிறகு ஆனந்தனை மணக்கிறாள் சுந்தரி. இதுவே நமது பண்பாட்டுக்கு ஒவ்வாதது. அப்படியிருக்க, சுமார் பதினான்கு வயதில் ஒரு மகன் இருக்கும்போது, கணவனை இழந்த சுந்தரி, மீண்டும் பிரதாபனுடன் வாழமுற்படுவது மன்னிக்க முடியாத அபத்தமாகும். பிரஞ்சுக் கதையைத் தழுவி எடுத்தாலும் கூட. அதை நம் நாட்டுக்கு ஏற்ற வகையில் அமைக்க வேண்டும். அப்படியின்றி நம் பண்பாட்டைக் கொன்றுவிட்டார்கள் தயாரிப்பாளர்கள்.

சுந்தரகணபதி,
காரைக்கால்.

●

திருந்த வேண்டும்

தமிழ்ப்படங்களில் வசனங்கள் ஒரு குறிப்பிட்ட சாராரைத் தாக்குவதாகவும் கட்சிப்பிரசாரம் செய்வதாகவும் தெய்வநிந்தனை புரிவதாகவும் இருப்பதாகப் பலர் அங்கலாய்க்கிறார்கள். சீர்திருத்த நோக்கமுள்ள, திராவிட முன்னேற்ற கழகத்தினர் வசனம் எழுதுவதுதான் இதற்கெல்லாம் காரணம். கதைக்குப் பொருத்தமாக வசனம் அமைக்கப் படுகிறதா? சூழ் நிலையும் சந்தர்ப்பமும் காரணமாக அந்த இடத்தில் அது சோபிதமாக இருக்கிறதா? அந்தக் குறிப்பிட்ட படத்தில் சம்பவத்தில் அத்தகைய பிரசாரம் அவசியம்தானா? என்பதையெல்லாம் கவனியாமல், ஒரு கட்சியினர் எழுதிய வசனம் என்பதற்காகத் தாக்குவதும் அங்கலாய்ப்பதும் ஏன்? எப்படியும் தமிழ்நாட்டுக்குச் சீர்திருத்தக் கருத்துக்கள் அவசியம் தேவை என்பது மறுக்க முடியாத விஷயமாகும்.

கே. இருளப்பா,
மலாக்கா, மலாயா.

கேரளத்தின் கீர்த்தி

இந்தத் தலைப்பின் கீழ், இந்திய திரைப்படச் செய்தி இலாகா, ஒரு படத்தை வெளியிட்டிருக்கிறது. இயற்கையன்னையின் களிநடனப் பிரதேசமான கேரளம், சேரர் பரம்பரையினரின் செல்வம் கொழிக்கும் பூமி. உழைக்கும் மக்களுக்கு இன்பம் கொடுக்கும் எழில் பூமி. ஆனந்தத் திருவிழாக்கள் ஆயிரமாயிரம் உண்டு அங்கே. பசுமை நிறைந்த இந்தக் கேரளத்தின் பிரபல நடனம் கதகளி. கேரள மாதாவின் பெருமையை அகில இந்தியாவும் அறியச் செய்யும் பட இலாகா பாராட்டுதற்குரியது.

"பாலைராஜன்,"
பாளையங்கோட்டை.

●

ஞாபகச் சின்னம் எழுப்புக!

வெள்ளித்திரை வேந்தன் பி. யு. சின்னப்பாவுக்கு ஞாபகச் சின்னம் எழுப்ப வேண்டும். நடிப்புக்கு உயிர் தந்தான்; வசனத்திற்கு ஜீவனளித்தான்; பாடலுக்குத் தனி மவுசை ஏற்படுத்தினான். அப்படிப்பட்ட கலைஞனுக்கு ஞாபகச் சின்னமெழுப்ப நிதி திரட்ட முன்வரக் கூடாதா இன்றைய கலைஞர்கள்?

தமிழ்ப் பித்தன்,
ரேணிகுண்டா.

●

நாமே பொறுப்பாளிகள்

அறிவு போதிக்கும் படங்களைத் தடாரிடபதில்லை' என்று பட உலகினரைப் பற்றி ஒரு அர்த்தமற்ற புகார் இருந்து வருகிறது. ரஸிகர்களில் பலரும இப்படிப் பேசுகிறார்களே ஒழிய, கல்வி போதிக்கும் படங்களை யார் போய்ப் பார்க்கிறார்கள்? படத்தில் 'கவர்ச்சிகரமான' அம்சங்களையே இந்த 'அறிவாளி(!)'களும் நாடுகிறார்கள்! ஆக. நம் விருப்பப்படிப் படம் தயாரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் முதலாளிகளுக்கு ஏற்படுகிறது. இதையறியாது குறை கூறுவது அபத்தமானது.

கயல் விழியாள்,
பாளையங்கோட்டை.

மேலே : 'நல்லகால'த்தில் என். எஸ். கிருஷ்ணன்.

கீழே : சிங்கள 'அகங்கார ஸ்த்ரீ'யில் நடனக் காட்சி.

கிருஷ்ண குமாரி, நாராயணசாமி, கே. ஆர். ராமசாமி,
எஸ். டி. சுப்புலக்ஷ்மி, அந்தக் குழந்தை எல்லாரும்......

.....நரசுவின் ‘துளி ஷம’ சம்பந்தபபட்டவர் ள்.




ஸ்ரீ சுகுமாரின்
விளையாட்டு
பொம்மை

புதுமையான கதைப் போக்கும் இனிமை
யான பாடல்களும் அருமையான நடனங்
களும் கொண்ட சிறந்த பொழுதுபோக்
குச் சித்திரம் ஒன்றைத் தயாரித்திருக்கிருர்
டி. ஆர். மகாலிங்கம்.
SRI SUKUMAR PRODUCTIONS
SSP



'நம் குழந்தை'யின் பந்துக்கள்.

லலிதா 'கனவு' காண்கிருர்.

'மாமோக மாகிய மயிலாள்'!

'ரத்தபாச'த்தில் வித்யாவதி.

கல்யாணம் பண்ணியும்

பிரம்மச்சாரி

(தொடர்ச்சி)

காட்சி 3

ஆனந்தரங்கம் வீட்டில் அவர் மகள் பத்மினி உல்லாசமாக உலா விக்கொண்டிருக்கிருள். அப்போது பத்மினியின் சிநேகிதிகள் அவளைக் காண அங்கு வருகிருர்கள்.

தனம் : ஹலோ, பப்பி! என்னடியம்மா காலையிலே வந்தவ எட்டிக் கூடப் பார்க்கலியே!

ஒருத்தி : நம்மைப் பார்க்கத் தாண்டி இப்ப புறபபட்டிருக்கா.

மற்ற : ஐ.. ஸி!

பத் : எஸ்! உங்களைப் பார்க்கத் தான் இப்ப புறப்பட்டேன்

மற் : வெரிகுட், புறப்படு!

பத் : எங்கே?

ஒரு : இன்னைக்கு நம்ப பழைய மாணவர் சங்க நிதிக்காக மேனகா-விஸ்வாமித்திரா நாட்டிய நாடகம்....

மற் : மேனகையா ஆடப்போறது யார் தெரியுமில்லே!

பத் : அந்த ஒரிஜினல் மேனகையே வந்து ஆடிளுலும்சரி, நான் வரமுடியாதம்மா. எனக்கு அவசர வேலை இருக்கு.

ஒரு : என்னடி இது! எங்களைப் பாக்கத்தான் இப்ப புறப்படறேன்னு சொன்னே?

பத் : ஆமா. . .ஆ. . .வந்து நான் முதல்லே "சுவாமி தரிசனத்துக்குப் போகனும்!

தன : ஏண்டி சாக்லட்! நாமும் அப்படியே ஜாலியா சுவாமி தரிசனத்துக்கே போனு என்ன?

பத் : நீங்க ஒண்ணும் அப்படி ஜாலியா சுவாமி தரிசனத்துக்கு வர வேண்டாம். டிக்கட்டை வேஸ்ட் பண்ணுமே நாட்டியத்துக்கே போங்க.

எல்லோரும் சிரிக்கிருர்கள். அவர்களுடன் மாடியிலிருந்து பத்மினி கீழே இறங்கி வருகிருள். அங்கே அவள் தந்தை தாலாட்டுப் பாட்டு பாடிக் கொண்டிருக்கிருர்.

பத் : என்னப்பாது, தாலாட்ட ஆரம்பிச்சிட்டீங்க!

ஆன : ஆமாம்மா.... நாளைக்கு உனக்கு ஒரு குழந்தை பொறந்தா உங்க அமமாவா இருக்கா? நான் தானே தாலாட்டணும். உலு...... ஆயீன்னு...

தன : அப்படின்னு இப்பவே ஒரு பொம்மையை வாங்கிவச்சு, பாலூத்தி பழக்கிக்குங்க.

ஆன : சரி, ஆமா எங்கே போயிட்டான் இந்தப்பய... டேய் சிவக் கொழுந்து!

சிவக்கொழுந்து ரேடியோ அறையில் பாட்டுக் கேட்டுக் கொண்டிருக்கிருன்.

ஆன : எங்கே தொலைஞ்சு போனுன்?

சிவக்கொழுந்து திடுக்கிட்டு வந்து அவர் பின்னே நிற்கிருன்.

சிவ : உம்...இங்கே எஜமான்.

ஆன : என்னடா பண்ணிக்கிட்டிருந்தே?

சிவ : ரேடியோ கேட்டுக்கிட்டிருந்தேன் உம் .உம் இல்லே...இல்லே ரேடியோ துடைச்சிக்கிட்டிருந்தேன்.

ஆன : உள்ளே போயி பஸ்ட் கிளாஸ் காபியா..

அங்குள்ளவர்களை எண்ணுகிருர்.

சிவ : மொத்தம் ஆறுங்க!

தன : ஐயையோ வேண்டாங்க.

சிவ : ஐயையோ சாப்பிடணுங்க.

பத் : அப்பா நான் சுவாமி தரிசனத்துக்குப் போயிட்டு வரேன்.

ஆன : அப்படியா? நானும் வரேன். இந்தக் காலத்திலே படிச்ச புள்ளைங்களுக்கு கோயில் குளம்னுலே குமட்டுது.

சிவ : எட்டிக்காய் எஸன்ஸ் மாதிரி!...

ஆன : நம்ம பத்மினியைப் பார்த்தி யாடா...

சிவ : டரிட்சை எழுதியிருக்காங் களே...பகவானே கொஞ்சம் அட் வான்ஸ்லே பாத்துவச்சுக்கலா மூன்னுதான்...

எல்லோரும் சிரிக்கிருர்கள். அப் போது அங்கே ஆண்டு விழா வைப வத்திற்கு வரும்படி அழைக்க வரு கிருர் செக்ரட்டரி.

செக் : குட் ஈவினிங் ஸார்!

ஆன : வாங்க...வாங்க! என்ன அங்கே ஆண்டுவிழாவை விட்டுட்டு இங்கே வந்துட்டீங்க?

செக் : விழா இன்னைக்கு ஒழுங்கா நடக்கணும்னு உங்க உதவி தேவை.

ஆன : என்? தலைமை வகிக்க ணுமா? சரி!

சிவ : மாலையை நாங்களே வாங் கிட்டு வந்திடறோம். பிரசங்கத்தை மட்டும் நீங்க எழுதிக்கொடுத் திடுங்க. ஐயா வெளுத்து கட்டிடு வாரு.

செக் : அதில்லே.. இன்னிக்கு மேனகாவாக நடிக்கவிருந்த சுகுணு வுக்குக் கடுமையான ஜுரம்..

சிவ : சரிதான்... ஸ்டேஜைப் பார்க்கிறதுக்கு முந்தியே ஜுரம் வந்தி டுச்சா!

செக் : இன்னிக்கு பத்மினிதான் ஆக்ட் பண்ணணும்..நீங்களும் பத் மினியும் தயவு பண்ணலேன்னு...

ஆன : பண்ணிட்டாப் போச்சு...

பத் : என்னப்பாது ... எனக்கு ட்ரெயின்லே வந்ததிலே...ஆகா.. காலு சுளுக்கிட்டிருக்கா...

செக் : ஆடவே வேண்டாம். பத்மினி! நீ மேனகா டிரஸ்லே அப் படி ஸ்டேஜிலே வந்து நின்னு...

சிவ : ஆகா.. ஜனங்களுக்கு இது இந்த லோகமா இந்திரலோக மான்னு சந்தேகம் வந்திடாது...!

ஆன : ஆமா ஆமாம்! மூணும் வருஷம் நாடகத்திலே பத்மினி கண் ணகியா வந்து அந்தப் பாண்டியன் தர்பாரிலே, "என் பதியைப் பார்த் திரா? என் சுவாமியைப் பார்த்தீரா? அவருடைய களங்கமற்ற முகத்தைக் கண்ணுல் கண்ட பிறகுமா கள்வன் என்று கூறுகிறீர்? ஐயோ தெய்வமே! என் கணவனு கள்வன்? கட்டின மனைவியாகிய என் காற்சிலம்பு விற்க வந்தவனு கள்வன்? வேந்தே! எங்கே உன் நியாயம்? எங்கே உன் நேர்மை? எங்கே தீர்ப்பு? நீ ஒரு நீதிமானு? இது ஒரு நீதி மன்றமா...?"

ஆனந்தரங்கம் தன்னை மறந்து நடிக்க ஆரம்பித்து விடவே நாட கத்துக்கு நேரமாகிவிட்டதை செக்ரட்டரி நினைவு படுத்துகிருர்.

செக் : நேரமாச்சுங்களே...

ஆன : ஆமா ஆமாம்-நேரமாச்சு... அவசரம் தெரியாத பய டிரஸ்லை எடுத்து வைடான்னு...

ஆனந்தரங்கம்-செக்ரட்டரி இவர் களின் நிர்பந்தத்தினுல் பத்மினி நாடகத்தில் மேனகாவாக நடிக்கச் சம்மதிக்கிருள். அவள் வருகைக் காக பார்க்கில் ஆவலுடன் காத் திருக்கும் அம்பலவாணன். அவள் வராததைக் கண்டு ஏமாற்ற மடை கிருன். காரணத்தைத் தெரிந்து கொள்ள பத்மினியின் வீட்டுக்கு டெலிபோன் செய்கிருன். ஆனந்த ரங்கம் போனை எடுக்கிருர்.

அம் : ஹலோ... பத்மினி வீடு தானே?

ஆனந் : ஆமா, நீங்க யாரு?

அம்ப : (குரலை மாற்றிக்கொண்டு) நான் பத்மினியோட பிரண்டு... பப்பி இருக்காளா?

ஆனந் : உம். கொஞ்சம் இருங்க. அம்மா பத்மினி!...

பத் : என்னப்பா ..?

ஆனந் : இந்தாம்மா...

பத் : ஹலோ, பத்மினி பேசறேன்.

ஆனந் : யாரம்மாது?

பத் : ஜஸ்ட் எ மினிட் ப்ளீஸ்... உம்... வந்து என் பிரண்டப்பா... அம்புஜம்.

ஆனந் : ஆமா குரல் என்னமோ மாதிரி இருந்துதே?

பத் : ஆமாம்ப்பா, எப்பவுமே அவ சாரீரம் கொஞ்சம் கரகரப்பிரியா... ஹலோ!

அம் : அம்மா தாயே! நேத்து பார்க்கிலே காத்துக் காத்து...

பத் : எக்ஸ்யூஸ்க் பண்ணிக்கடி. எதிர்பாராம ஒரு டான்சுக்குப் போக வேண்டியதாயிடுத்து. இப்ப வரேன்.

அம் : எங்கே?

பத் : அங்கதாண்டி.

அம் : பார்க்குக்குத்தானே?

பத் : உம். ஆல்ரைட்.

பத்மினி போனைக் கீழே வைத்து விட்டு ஆனந்தரங்கத்துடன் பேசுகிறாள்.

பத் : அப்பா! என் காலேஜ் பிரண்டு அம்புஜம்...

ஆன : உம்...

பத் : இங்கே சொந்தக்காரங்க வீட்டுக்கு வந்திருக்கா... அவளைப் போயி பார்த்திட்டு...

ஆன் : ஏம்மா, அவளை இங்கே வரச்சொல்லேன்!

பத் : உம் நானே போய் அழைச்சிட்டு வறேன்.

ஆன : டிரைவர் இல்லையேம்மா...

பத் : வேண்டாம்பா, நானே காரை எடுத்துக்கிட்டுப் போறேன்.

ஆன : அம்மா... ஜாக்கிரதையா போயிட்டு வாம்மா!

பத்மினி காரை ஓட்டிக் கொண்டு கிளம்புகிறாள். வழியில் போய்க் கொண்டிருந்த பாலசுந்தரம் பழத்தோல் சறுக்கிவிழவும் கார் அவர் அருகே வந்து நிற்கவும் சரியாக இருக்கிறது. அங்கு பெயின்ட் அடித்துக் கொண்டிருந்த பெயிண்டர் அருகில் பாலசுந்தரம் விழுந்துவிடவே, அதிர்ச்சியில் அவன் சிவப்பு பெயின்ட் நிறைந்த டப்பாவை நழுவவிட்டு விடுகிறான். பெயின்ட் பாலசுந்தரத்தின் உடைகளை நாசமாக்கி அவரை விபத்துக்குள்ளானவர் போலாக்கி விடுகிறது. அங்கு கணபதியும் முத்தழகும் எதிர்பாராதபடி வருகின்றனர்.

கணபதி : அப்பா! அப்பா!

முத்தழகு : எஜமான், எஜமான்!

கண : ரத்தமெல்லாம் போய்ட்டதேப்பா!

பால : எனக்கு ஒண்ணுமில்லேடா.

கண : எலும்பெல்லாம் ஒடிஞ்சிருக்கும் போலிருக்கே. யாரது காரு? (ஒருவர்பத்மினியைச் சுட்டிக் காட்டி) இந்தம்மாதானுங்க (என்கிறார்)

கண : (கோபமாக) யாரு உனக்கு லைசென்ஸ் குடுத்தது? கண்ணை மூடிக்கிட்டு கார் ஓட்டறதுக்கு இதென்ன வீதியா, வெட்ட வெளியா?

பத் : ஸார்! என்ன நடந்ததுனு கேட்டுக்கிட்டு...

கண : ஒண்ணும் விளக்கம் வேண்டாம். இனிமே பெண்களெல்லாம் கார் ஓட்டக்கூடாதுனு இந்தியாவிலே ஒரு சட்டம் வரணும்.

பால : அட சும்மா இரேண்டா! ஏண்டா கலாட்டாபண்றே!

கண : நீங்க சும்மா இருங்கப்பா. உங்களுக்கு ஒண்ணும் தெரியாது. காரு அங்கே அடிச்சு, ஆளை இங்கே தூக்கிப் போட்டிருக்கே.

முத் : தூக்குங்க எஜமான்.

பால : அடடே, அட கணபதி!

பெயிண்டர் : ஸார்! ஸார்! ஸார்!

கண : சரிதான் போமேன்.

பெயிண் : ஸார் வந்து...

கண : இந்தாம்மா நீ போயிடாதே பின்னாலே வா...

காட்சி 4

பாலசுந்தரம் வீட்டுக்கு யாவரும் செல்கின்றனர்.

கண : டேய்! எங்கப்பா உயிர் போய்ட்டா நான் என்னடா செய்

வேன்? டேய் நீ போய் 'பான்' கொண்டா 'பான்'.

பார்வதி: டேய்... என்னடா இது..?

முத்: அம்மா! எஜமான் மேலே கார் ஏறிட்டதம்மா.

பால: அடடே... (பார்வதியைப் பார்த்து) இந்தா நீ வேற பாட ஆரம்பிச்சுடாதே. ஒன் மகன் ஆடறதே போதும். எனக்கு ஒண்ணுமில்லே, நல்ல கண்ருவியப்பா இது.

நிறைய தலைகாணிகளுடன் வந்து அவரைப் படுக்கையில் படுக்க வைக்கிருன் கணபதி.

கண: ஒதுங்கம்மா... தள்ளு... தள்ளு.

பால: அட, வேண்டாண்டா கணபதி!

கண: அப்பா நீ சும்மா இரப்பா வேண்டான்னு நீ சொல்லாதே. பேசாம இரப்பா...

பால: அட இதேதடா 'பான்'? குளிருது. 'ஆப்' பண்ணடா டேய்.

கண: என்ன குளுருதா...! காச்ச வந்துடிச்சிரா! இல்லே இல்லே. ஜன்னியே வந்திடுச்சு. டாக்டரைக் கூப்பிடுறு... டாக்டரை கூப்பிடுறு...

பால: டாக்டர் வேண்டாண்டா கணபதி.

கண: சும்மா இருப்பா...

பால: அப்படியே என்னைப் போட்டு புதைக்கிறதுக்கு ஒரு குழியும் வெட்டச் சொல்லு.

கண: சரிதாம்பா...என்ன?

பால: (பத்மினியைச் சுட்டிக் காட்டி) அட நீ ஏம்மா நிக்கிறே? போம்மா.

கண: ஏய்... ஏய். நில்லு! வா இங்கே. ஏய் இந்தாம்மா, இதிலே உன் விலாசத்தை எழுதிக் கொடுத்துட்டுப் போ.

பால: விலாசமெல்லாம் எதுக்குடா, டேய்?

கண: சும்மா இருங்கப்பா... உங்களுக்கு ஒண்ணும் தெரியாது.

பால: எப்படியாவது போடா.

பத்: ஸார்!

கண: உம்...

பத்: கொஞ்சம் பேனு...

கண: பேனுகூடக்கிடையாதா? உம். (பேனவைக் கொடுக்கிருன்)

பத்: ஸார், நான் அஞ்சு வருஷமா கார் ஓட்டறேன். ஆக்ஸிடெண்ட் நடந்ததில்லே.

கண: ஹூஉ ஹூஉம்! எங்கப்பாவும் அம்பது வருஷமா நடந்துதான் போருரு. ஒரு ஆக்ஸிடெண்டுக்குக் கூட ஆளானதில்லே. என்னம்மா முழிக்கிறே...சிக்கிரம் எழுது...

பத்மினி போய் விலாசத்தை எழுதிக்கொடுத்துவிடுகிருள். அதை வாங்கிக் கொண்டு அவளை அனுப்பி விடுகிருன் கணபதி. பாலசுந்தரத்தைப் பரிசோதிக்க டாக்டர் வருகிருர். அவர், பெயிண்டைக்கண்டு கலாட்டாசெய்துவிட்ட கணபதியைக் கேலி செய்கிருர்.

டாக்: என்ன சார் இது, பிளட்டுக்கும் பெயிண்டுக்கும் வித்தியாசம் தெரியலையா.. உங்களுக்கு?

கண: உம்...இல்லே.

டாக்: ஏம்பா, பெயிண்டர்! நீயாவது சொல்லக்கூடாது, இது பெயிண்டுன்னு?

பெயி: என்னைச் சொல்லவிட்டால்தானுங்களே...

பால: நல்லவேளை, நீங்களும் பெயிண்டரும் வரலேன்னு பிள்ளையாண்டான் என்னை உயிரோட புதைச்சிருப்பான்.

டாக்: ஆல்ரைட். நான் வரட்டுமா?

பெயி: வரேனுங்க.

பால: இது ஏதடா.. பையி...?

கண: அட...

கண: பார்த்திங்களாப்பா. பையை வச்சுட்டு பேனவைக் கொண்டு போயிட்டா அந்தப் பொண்ணு.

பால : அடே ..

கண : சேச்சே! என்ன ஞாபக சக்தி? ஞாபகசக்தி இல்லாதவங்களுக்கெல்லாம் ஆறு மாதம் கடுங்காவல்னு இந்தியாவிலேயே ஒரு சட்டம் வரணும்.

பால : அட சரிதாண்டா...பார்லிமெண்டு.

கண : ஆமா...

பால : அந்தப் பொண்ணு அட்ரஸ் வாங்கினியே...எங்கே?

கண : ஆ...ஆமா... வாங்கினேன் எங்கே அது?

பால : ஊக்கும்! சட்டம் வந்தா முதல்லே உன்னைத்தாண்டா உள்ளே தள்ளுவாங்க...

கண : இதோ இருக்கேப்பா.

பால : சரி . சரி. கொண்டுபோய் கொடுத்துட்டுவா.

கண : சரிதாம்பா!

காட்சி 5

பாலசுந்தரம் வீட்டிலிருந்து கிளம்பிய பத்மினி ஆவலுடன் பார்க்குக்கு விரைகிருள். அங்கே அவள் வரவுக்காகக் காத்திருக்கிருன் அம்பலவாணன். அவனிடம் கொஞ்சிய பிறகு விஷயத்தைக் கூறுகிருள்.

அம் : உம் .. அப்புறம்?

பத் : அப்புறம் என்ன? போய் அட்ரஸ் குடுத்துட்டு வந்துட்டேன்...

அம் : உம .. இப்படி ஒரு இடைஞ்சலா நமக்கு ..ஆமா...யார் அந்தச் சதிகாரன்?

பத் : அது ஒரு அரைப் பைத்தியம்.

நந்தவனத்திலுள்ள மரத்தில் உட்கார்ந்திருக்கும் ஜோடிப் புருக்களைக் காண்பிக்கிருன் அம்பலம்.

அம் : அந்தப் புருக்கள் என்ன பேசுகிறது தெரியுமா?

பத் : தெரியுமே!

அம் : என்ன?

பத் : அதுவா? இந்த ஜனங்களுக்கு எப்பதான் புத்திவரப்போகுதோன்னு பேசிக்கிதுங்க!

அம் : என்னது?

பத் : ஆமா, புருக்களுடைய வாழ்க்கையிலே ஏழை இல்லே, பணக்காரன் இல்லே. போட்டியில்லே, பொருமை இல்லே. வெறும் சுயநலம், உயர்ந்தவன், தாழ்ந்தவன் எதுவுமே இல்லே. நம்மைப் பார்த்தாவது ஜனங்கள் திருந்தி வாழக்கூடாதான்னு ஏங்குதுங்க.

அம் : உம் ஏங்கும் ஏங்கும்.... ...பப்பி! இந்தக் கொடி எவ்வளவு அழகா இந்த மரத்தைத் தழுவிக்கிட்டிருக்கு பாத்தியா?

பத் : ஆமா! ஆதரவில்லாதவங்களை யெல்லாம் காப்பாற்ற கருணை உள்ளம் படைத்த கடவுள் மாதிரியில்லே?

அம் : உம் ஆமா! வள்ளல் மாதிரி! பப்பி. சூரியனைக்கண்டதும் இந்த தாமரை ஏன் மலருது தெரியுமா?

பத் : தெரியுமே! அதாவது சூரியனுடைய ஒளிக்கிரணங்கள் படும்போது....

அம் : உம்?

பத் : பனித்துளிகள் மறைகின்றன. ஒளிக்கிரணங்கள் அதிகமாகும் போத மலரின் இதழ்கள் உலர்கின்றன. உலர்ந்த இதழ்கள் விரிவடைகின்றன.

அம் : உம்!

பத் : இதைத்தான் மலர்ச்சியென்கிருேம். ஆகவே, சூரியனுடைய...

அம் : அம்மா .. அம்மா! வாத்தியாரம்மா! போதும் நிறுத்து.

பத் : போதுமா ? சரி, மிஸ்டர் அம்பலம்? அந்த செவ்வானம் என்ன சொல்லுகிறது தெரியுமா?

அம் : ஓ! தெரியுமே! அடேயப்பா. அம்பலம்! இந்தப் பொண்ணு மகா வாயாடி. பேசாம காவியக் கட்டிக்கிட்டு, சந்நியாசியாய்ப் போய் தொலைடாங்குது.

இருவரும் மகிழ்ந்திருந்து விட்டுப் பிரிந்து செல்கிறார்கள்.

காட்சி 6

பையை மறந்து விட்டதோடு, கணபதியின் பேனாவையும் எடுத்துச் சென்றுவிட்ட பத்மினியைக் காண அவள் கொடுத்திருக்கும் விலாசத்தைத்தேடிக் கிளம்புகிறான் கணபதி.

கண : ஏன் ஸார், திருச்சி ரோடு இதுதானே?

வழிப்போக்கன் : திருச்சி போற வரைக்கும் இதே ரோடுதான்!

கண : உம்.

வழி : ஆமா!

அவள் குறித்துக் கொடுத்தபடி 60-ம் நெம்பர் வீட்டுக் கதவைத் தட்டுகிறான் கணபதி.

கண : ஸார்..ஸார்!..ஸார் நளினி வீடு இதுதானே ?

அந்த வீட்டிலிருக்கும் பைத்தியத்திடம் கணபதி விசாரிக்கிறான். அந்தப் பைத்தியம் உளறுகிறது. அவன் தொடர்ந்து பேசவும் பைத்தியம் அவனைத் துரத்த ஆரம்பிக்கிறது. அவன் பயந்து கொண்டு பால்கனி வழியாய் ஓடுகிறான்.

பெரியம்மா : ஏய், சத்குணு!

பைத்தியம் கணபதியைத் துரத்துகிறது. ஓடிக்கொண்டேயிருந்தவன் பால்கனி சுவற்றிலிருந்து கீழே குதித்து விடுகிறான். அப்போது அந்த வழியாகப் பத்மினியின் கார் வருகிறது. மேலிருந்து குதித்தவன் அவள் ஓட்டிச் சென்ற காரின் பின் ஸீட்டில் வந்து விழுகிறான். பத்மினி திகைப்புடன் திரும்பிப்பார்க்கிறாள். கணபதியும் அவளைக் கண்டதும் திடுக்கிடுகிறான்.

கண : ஓஹோ.. நீதானா? பொய் அட்ரஸ் குடுத்திட்டு தப்பிச்சுக்கிட்டா வந்துட்டே. ஓட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு!

பத் : வந்து...

கண : வந்தாவது, போயாவது? ஓட்டு காரை...ஓஹோன்னும்!

காரை ஓட்டிக் கொண்டு போகும்போது வழியில் கார் டயர் பஞ்சராகி விடுகிறது. பத்மினி திகைப்படைகிறாள். ஏற்கனவே மப்பும் மந்தாரமுமாக இருந்ததால் திடீரென்று மழை வந்து விடுகிறது. கணபதியும் பத்மினியும் மழைக்காக ஒரு வீட்டில் ஒதுங்குகிறார்கள்.

பெரியவர் : யாரு?

கண : உம்.... ஒண்ணுமில்லே . இங்கே காரு ரிப்பேரு.

பெரி : ரொம்ப நனைஞ்சுட்டிங்க போலிருக்கே! இப்படி உள்ளே வாங்க!

மனைவி : இது உங்க வீடுமாதிரி தான். சும்மா உள்ளே வாங்க.

பெரி : உக்காருங்க, உக்காருங்க.

மனை : மீனாட்சி மீனாட்சி! பார்த்தா பெரிய இடத்துப் பிள்ளைங்க மாதிரி இருக்கு. அவுங்களுக்கும் கொஞ்சம் காப்பி கொடு.

கண : இந்தா (பையை பத்மினியிடம் திருப்பிக் கொடுக்கிறான்)

பத் : தாங்ஸ்—மறந்துட்டேன்.

கண: ஹூஹூம்! அதுமட்டுமா...? பேனாவைத் திருப்பித்தரக்கூட மறந்துட்டே.

பத் : ஐ ஆம் வெரி ஸாரி!

வீட்டுக்காரர் மனைவி பத்மினிக்கு காப்பி கொடுக்கிறாள்.

மனை : இந்தாம்மா!

பத் : ஐயையோ, இதெல்லாம் ஏதுக்கம்மா?

மனை: இல்லே, சும்மா சாப்பிடுங்க!

பத் : உம்.

கண : உம்.

மனை : என்னுங்க...!

பெரி : உம்?

மனை: புதுசா கல்யாணமானவங்க போலிருக்கு. சந்தோஷமா அப்படி புறப்பட்டிருக்காங்க.

பெரி: ஆமா ஆமா! இதுதானே அனுபவிக்கவேண்டிய பருவம்?

மணி: பொண்ணு எப்படியிருக்கா பார்த்தீங்களா, தங்க விக்ரகம் மாதிரி?

பெரி: ஆமா, என்ன அடக்கம், என்ன ஒடுக்கம்! ஆயிர வருஷம் தவம் பண்ணினாலும் இந்த மாதிரி பொண்ணு கிடைக்குமா?

மணி: நம்ப பிள்ளைக்கும் வந்து வாச்சாளே ஒருத்தி!

பெரி: அதுக்கென்ன பண்றது? இந்தமாதிரிப் பொருத்தம் லக்ஷத்திலே ஒண்ணுதான் அமையும்.

இதைக் கேட்டு கணபதி யோசனையில் ஆழ்ந்து விடுகிறான். அவனைக் கண்டு கேலியாகச் சிரிக்கிறாள் பத்மினி.

கண: உம்..

பத்: ஓ... மழைவிட்டுப் போச்சே.

கண: ஆமா விட்டுப்போச்சே.

பத்: அம்மா நாங்க வர்றோம்.

கண: ஆமா... வர்றோம்.

பெரி: ஏம்மா, காரு?

பத்: டாக்ஸிலே போறேன். வீட்டுக்குப்போய் டிரைவரை அனுப்பறேன்.

வெளியில் வந்ததும் கணபதிக்கு கும்பிடு போடுகிறாள் பப்பி.

பத்: குட் பை!

பத்மினி போய்விடுகிறாள். கணபதி அவள் செல்வதைப் பார்த்துக் கொண்டே நிற்கிறான்.

'ஆமா ஆமா! ஆயிரம் வருஷம் தவம் பண்ணினாலும் இந்த மாதிரி பொண்ணு கிடைக்குமா? இந்த மாதிரி பொருத்தம் லக்ஷத்திலே ஒண்ணுதான்' என்று வீட்டுக்காரர் கூறியதையே நினைத்துக் கொண்டு வீட்டுக்குச் செல்கிறான் கணபதி கனவில் பத்மினி அவனைத் தொடுவதுபோல் காண்கிறான்.

கனவு கலைந்து எழுந்த கணபதி மானஸீகமாக அவள் நடனங்களையும் அழகையும் ரஸிக்கிறான்.

கண: பியூட்டிபுல் மார்வலஸ்!

எதிரேயுள்ள கண்ணாடியில் பத்மினியின் முகம் தெரிவது போல் அவன் கண்களுக்குத் தோன்றுகிறது.

கண: அன்பே! அருகே வா. கண்ணின் மணியே, கட்டிக்கரும்பே, டார்லிங்! மை டார்லிங்!

அம்பலம், கணபதியைக் காண வருகிறான். அவன் நிலையைக் கண்டு ஆச்சர்யமடைகிறான்.

அம்: தண்மதியே! தங்கச்சிலையே! வண்ணமயிலே! வான் நிலவே! இதோ வந்துவிட்டேன்.

இப்படிச் சொல்லிக் கொண்டே பால்கனி சுவரிலிருந்து தன்னையும் மறந்து கீழே குதிக்கவிருந்த கணபதியைத் தடுத்து நிறுத்துகிறான் அம்பலம்.

அம்: டேய்...டேய்...டேய்...

கணபதி அம்பலவாணனைக்கண்டு திகைப்படைகிறான்.

கண: என் தங்கமே! என்னைத் தவிக்கவிட்டு எங்கே செல்கிறாய்?

அம்: யாரவன்?

கண: என் இருதயக் கோட்டையைப் பிளந்து அதனுள் செல்லும் சக்தி உன் ஒருத்திக்குத்தான் இருந்தது. இந்த உலகத்திலே. உன் மோகனப் புன்னகை. முத்துப் பற்கள்...

அம்: உம்?

கண: மயக்கும் விழிகள்...

அம்: உம்...

கண: மாந்தளிர் மேனி!

அம்: அடிரா சக்கை!

கண: ஆஹா...ஐ லவ் யூ... டார்லிங்! ஐ லவ் யூ...

அம்: எலே, என்னையாடா லவ் பண்றே? கண்ருவி!

கண : ஆஹா! பேசு! இன்னும் பேசு! உலகத்திலேயே உயர்ந்த சங்கீதம் உன்னுடைய பேச்சுதான், அதிலே தேன் பாய்கிறது...

அம் : உம்...

கண : தென்றல் வீசுகிறது ..

அம் : உம்...ஐயோ...

கண : ஓ, மைடியர்! ஐ ஆம் ஹியர்..கம் நியர்! இன்னும் ஏன் தயக்கம் என் தங்கமே?...காதலிக தம்பதிகளுக்கு நாணமிருக்கக் கூடாதே, வா!

அம் : அடேடே! என்னடா டேஞ்சர் பண்றே? ஹூம் (கணபதியைத் தழுவிக் கொண்டே) பிராணபதே.. என் மனமோகன மந்திரியே! உங்கள் திருவாயால் என்னை 'காதலி' என்று அழைக்க நான் என்ன புண்ணியம் செஞ்சிருக்கேனோ! ... இந்த ஆனந்தத்தை நான் யார் கிட்ட போயி சொல்லி அழுவேன்.

கண : கல்யாணமே வேண்டாமென்றிருந்தேன். கண்டேன் உன்னை...கொண்டேன் காதல்...

அம் : அடேய்...

கண : ஹா...அம்பலம்!

அம் : ஆமடா அம்பலம். ஒன் விஷயமெல்லாம் அம்பலம் ... டேய் கணபதி! ஒன்னை சரியா மோகினி புடிச்சிருச்சுடா...

கண : மோகினி!...

அம் : ஹூஹூம்.

கண : அம்பலம்...நீ நெனைக்கிறபடி இல்லே ஏதோ ஒரு விநாடி உறுதி தளர்ந்து போனது உண்மை... உடனே என் மனோதைரியத்தினுலே .. லட்சியத்தினுடைய உறுதியினுலே.

அம் : விளக்கமாத்துக் கட்டையினுலே ....டேய் ... . லட்சியமாவது உறுதியாவது? நான் சொல்றதைக் கேளு...நீ இமீடியட்டா கல்யாணம் செய்துகிட்டே யாகணும் ... இல்லே இன்னும் கொஞ்சம் நாளிலே பைத்தியம் பிடிக்கும்.

கண : உம்.

அம் : காகிதத்தை தின்னுவே.

கண : உம்.

அம் : வேட்டியைக் கிழிப்பே. வீதியிலே ஓடுவே. காலிப் பசங்களெல்லாம் ஒன்னைக் கல்லாலே அடிப்பாங்க. உடம்பெல்லாம் காயம்பட்டு ரத்தமாக கொட்டும். எல்லோரும் உன்னைப் பைத்தியக்காரன்னு காரித் துப்புவாங்க.

கண : உம்.

அம் : இந்த அவமானம் தாங்க மாட்டாமே ஒங்க அம்மாவும் அப்பாவும் தூக்கு மாட்டிக்கிட்டுத் தொங்குவாங்க. இது ஒனக்கு இஷ்டமா?

கண : இல்லேடா அம்பலம்... ராமகிருஷ்ணர், விவேகானந்தர் எல்லாம் பிரம்மச்சாரிதானே?

அம் : டேய்!.. மாணிக்கமும் மண்ணாங்கட்டியும் ஒன்ருகுமாடா? ராமகிருஷ்ணரும் விவேகானந்தரும் உலக பந்தத்தை வெறுத்தார்கள். இன்ப துன்பம், விருப்பு வெறுப்பு எதுவுமே இல்லாதவர்கள். நீயோ உலக பந்தத்தில் உழலும் ஒரு சாதாரணப் பிரகிருதி எந்த விருப்பை வெறுத்தாய்? எந்த பந்தத்தைத் துறந்தாய்? ஏதோ அரையணு புத்தகத்தைப் படித்து இயற்கைக்கு மாருக பிரம்மச்சரியம் என்று உளறுகிருய். இதைக் கேளடா முட்டாள்! காதல் இல்லாத மனிதன் களிமண்ணுக்கு சமானம் 'சாவதற்கு முன் ஒரு முறையாவது காதல் செய்' என்று சொன்னுன் ஒரு மேல் நாட்டு அறிஞன். 'காதலினுல் சாகாமல் இருத்தல் கூடும். ஆகையால் காதல் செய்வீர் உலகத்திரே' என்று கூறியுள்ளார் அமரகவி பாரதி. அது மட்டுமல்ல 'காதல் இன்றேல் சாதல்' என்ருர்.

கண : அம்பலம், நீ சொல்றதெல்லாம் உண்மைதான். ஆனுல்..

அம் : ஷட் அப்! என்ன சொல்லுருய்? மணமா அல்லது மரணமா?

கண : ஆ...

அம் : உம் கல்யாணம்...

கண : பண்ணிக்கிறேன்.

அம் : குட்! ஸ்ளாட்! ஹாப்பி !

இவர்களின் அரட்டைசப்தத்தைக் கேட்ட பாலசுந்தரம் விழித்துக் கொள்கிருர்.

பால : என்னடாது... அர்த்த ராத்திரியிலே கலாட்டா.

அம் : மாமா... மாமா...

பால : உம் உம்...

அம் : இந்தா இந்தா...

பால : என்னடா?

அம் : கணபதி கல்யாணத்துக்கு.

பால : சொல்லேண்டா.

அம் : சம்மதிச்சுட்டான்.

பால : சம்மதிச்சுட்டாஞ? உம் சபாஷ்டா! அம்பலம்! நீதாண்டா ஆம்பளே சிங்கம். பார்வதி! பார்வதி!

முத் : எஜமான் எஜமான்! என்ன எஜமான் எரைச்சல்?

பால : அட போடா, ஒண்ணுமில்லேடா...கணபதி கணபதி..

பார்வதி அவர் குரல் கேட்டு வருகிருள்.

பார் : என்ன, என்ன ?

பால : கணபதி! பார்வதிக்கு கல்யாணம்.

பார் : என்ன இது?

பால : கணபதி! பார்வதிக்கு கல்யாணம்ஞ.

பார் : என்ன உளறுறீங்க ?

பால : அடேடே ஆமாமா, கணபதிக்கு கல்யாணம், நம்ப கணபதி கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிச்சுட்டாண்டி.

பார் : அப்படியா! சம்மதிச்சுட்டாஞ? செஜமாவா! பிள்ளையாரப்பா, உனக்கு நூறு தேங்கா ஒடைச்சுடறேண்டாப்பா.

முத் : காளியாத்தா காளியாத்தா!

மு. மனைவி : என்னங்கறேன் சத்தம்?

முத் : நம்ப ஐயா கல்யாணம் பண்ணிக்கப் போருரடி.

மு. மனைவி : அப்ப நம்ம அம்மா நிலைமை?

முத் : அடிபோடி முனு! சின்ன எஜமானுக்கு கல்யாணம்ஞ.

மு. மனைவி : அப்படியா!

முத் : இனிமே நாமும் பிரம்மச் சரியததை விட்டுடலாம்.

மு. மனைவி : ஆமாம் பிரம்மச் சரியம்ஞ என்னுனு கேட்டேனே.

முத் : ஹும்.

பாலசுந்தரமும், பார்வதியும் சுவாமிபடத்தை வணங்குகிருர்கள்.

பால : பார்வதி! இத பாரு, ஒம் பிள்ளை ஸ்திரபுத்தி இலலாத பய. வேதாளம் மறுபடியும் முருங்க மரத்தில ஏர்றதுக்குள்ளே கல்யாணத்தை முடிச்சுப்பிடணும்.

பார் : ஆமா ஆமா. உடனே சாவித்திரியை அழைச்சிக்கிட்டு வரச் சொல்லி எங்க அணணனுக்கு தபால் எழுதிப்போடுங்க.

காட்சி 7

கிராமத்தில் சாவித்திரி தன் வீட்டுத் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருக்கிருள். அவளுடன் அவள் சிநேகிதிகளும் இருக்கிருர்கள்.

ஒருத்தி : ஏண்டி சாவித்திரி எப்படி உனக்கு கல்யாணம் ?

சாவி : போடி.

மற்ருெருத்தி : அவளுக்கு மாப்பிள்ளை மதுரையிலே காத்துக்கிட்டிருக்காரடி.

ஒருத்தி ஏண்டி காவேரி, சாவித்திரி பட்டணத்து மாப்பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதும் இந்த பட்டிக்காட்டையே மறந்திடுவாளல்ல?

காவேரி : ஆமா ஆமா.

சாவித்திரியும் விளையாட்டுக்காக ஆமா ஆமா என்கிருள்.

ஒருத்தி : ஏண்டி சாவித்திரி! ஒங்க அத்தான் எப்படி இருப்பாரு?

மற்றொருத்தி : மக்காட்டம் இருப் பாரு.

சாவி : இல்லேடி. ஜோரா இங்கி லீஷ் எல்லாம் பேசிக்கிட்டு தொரை மாதிரி இருப்பாரு.

மற்றவள் : ஹூ...ம் ஆப்டுக் கிட்டியா! மனசில இருக்கிற ஆசை அவளை அறியாமே வெளி வந்திருச் சுடி.

எல்லோரும் சிரிக்கிறார்கள். சாவித் திரி தோட்டத்திலிருந்து கையில் சில பழங்களுடன் வீட்டுக்குள் செல் கிறாள். அவள் தந்தை கோதண்டம் அப்போது ஒரு கவரைப் பிரித்துப் படித்துக் கொண்டிருக்கிறார்.

கோதண்டம் : "அருமை மைத்து னர் திரு கோதண்டம் அவர்களுக்கு பாலசுந்தரம் எழுதிக் கொண்டது. இப்பவும் எனது குமாரன் கணபதி கல்யாணம் செய்து கொள்ளச் சம்ம தித்துவிட்டான்". ஹூம் கேட்டியா விசாலம்?

கோதண் : இறைவனருளால் அவன் கல்யாணம் செய்துகொள்ளச் சம்மதித்துவிட்டான்.

விசா : என்னுங்க, அதையே திருப் பித் திருப்பி படிக்கிறீங்களே.

கோத : நானுடி படிக்கிறேன். அந்த மடப்பய மவன் அப்படி எழுதி யிருக்கான்.

விசா : அப்ப ஒரு பத்து வரியெ தள்ளித்தான் படியுங்களேன்.

கோத : அதுவும் சரிதான். இப்ப வும் என் மகன் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதித்து விட்டான். சம்மதிச்சுட்டானுமில்லே. பீஷ்மருக் குப் பொறந்த பய!

விசா : சரி. நீங்களே படிச்சுட்டு விஷயத்தைச் சொல்லிடுங்க.

கோத : ஹூம் கேளேண்டி கதையே! என்ன திமிரு அந்தப் பய லுக்கு?

விசா : என்னுங்க?

கோத : இவன் மகன் கல்யாணம் செய்துகொள்ள சம்மதிச்சுட்டானும். அதுக்காக நம்ப பொண்ணை அழைச் சுக்கிட்டு அவுங்க வீட்டுக்குப் போகணுமாம். எப்படி போக்கத்த போக்கடா பசங்க.

விசா : அடேயப்பா இதுக்கா இப்படி குதிக்கிறீங்க?

கோத : என்னடி இது?

விசா : பின்னே என்னவாம்? ஒண்ணுக்குள்ளே ஒண்ணு. நாம அங்கே போனா என்ன, இல்லே அவுங்க இங்கே வந்தா என்ன?

கோத : உம்.

விசா : ஆமா. அதுக்குத்தானே நம்ம சாவித்திரியை நிச்சயம் பண்ணி வச்சிருக்கோம். வெறும் சம்பிரதாய மெல்லாம் பார்க்காமே...

கோ : உம்.

விசா : காலாகாலத்திலே காரி யம் முடியறதைப் பாருங்க.

கோத : அப்ப சரி. விட்டு தேவதை சொன்னா மாட்டேன்னு சொல்ல முடியுமா? உம் கட்டு மூட் டையை.

சாவித்திரி ஹாலில் இருப்பதைப் பார்க்கிறார் கோதண்டம்.

கோத : என்னம்மாது?

சாவி : ஒண்ணுமில்லேப்பா.

கோத : விசாலம் விசாலம்!

விசா : என்னுங்க?

கோத : இந்த சாத்துக்குடி பழத் துலே நல்லதாப் பாத்து ஒரு ஐம்பது எடுத்து வை. நம்ப தோட்டத்துப் பழம்னு, பாலசுந்தரம் முழுசாவே முழுங்கிடுவான்.

விசா : ஓ இந்நேரம் இங்கியே தான் இருந்தியாம்மா?

சாவி : ஆமாம்மா.

விசா : சரி, உன் துணிமணியெல் லாம் எடுத்து வையம்மா.

சாவி : ஆமாம்மா. அம்மா! அப் படியே பத்மினியை நான் பார்க்க ணும்மா, ரொம்ப நாளாச்சு.

விசா : மதுரையிலேதான் இருக்கப் போறே, பாத்துக்கிட்டே இரேன்.

காட்சி 8

பாலசுந்தரம், ஊரிலிருந்து வந்திருக்கும் கோதண்டம், சாவித்திரி, விசாலம் மூவரையும் வரவேற்கிறார்.

பால : கோதண்டம், இந்த வருஷம் சாத்துக்குடி ரொம்ப பிரமாதம். தேனாட்டம் இருக்குது போ.

கோதண்டம் சிரித்துக் கொள்கிறார்.

பால : அப்ப இந்த தை மாதத்திலே முகூர்த்தத்தை வச்சுக்குவோமா?

கோத : சரி.

பார் : அண்ணா, மேலே போவோமா?

கோத : ஏன் தொரை கீழே இறங்கி வரமாட்டாங்களோ?

பால : அட சரிதான் வாப்பா, நீ ஒரு விதண்டா வாதக்காரன்!

எல்லோரும் மாடிக்குப் போகின்றனர்

மாடியில் அம்பலம், கணபதி இருவரும் இருக்கிறார்கள். பாலசுந்தரம் கோதண்டத்துக்கு அம்பலவாணனை அறிமுகப்படுத்துகிறார். பின்பு கல்யாணப் பேச்சு ஆரம்பமாகிறது. பார்வதி கணபதியிடம் பெண் வீட்டுக்காரர் வந்திருக்கும் விவரத்தைச் சொன்னதும் அவன் சீறி விழுகிறான்.

கண : என்னைக் கேக்காமெ யார் அம்மா உன்னை இந்த ஏற்பாடெல்லாம் செய்யச் சொன்னது?

பார் : பொறுமையா பேசுடா. ஏற்பாடு பண்ணினதிலே என்ன தப்பு?

கண : ஹூஹூம்!

பார் : நீதான் கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொன்னியே?

கண : ஆமா சொன்னேன் இந்த சொருப ராணியை பண்ணிக்கிறேன்னு.

பார் : பொண்ணை சரியாப் பார்க்காமெ ஏண்டா இப்படிக் கெடந்து ஆடறே? அவ அழகுக்கு என்னடா குறைச்சல்?

கண : ஒண்ணும் குறைச்சலில்லே. ஒரு வீசை மஞ்சளும, அரைப்படி குங்குமமும் வாங்கிக் கொடு, அப்பிக் கட்டும் அழகாயிருக்க. அம்மா இனிமே பெண்கள்ளாம் மஞ்சளே பூசிக்கக் கூடாதுன்னு ஒரு சட்டமே வரணும்.

பால : ஏண்டா அம்பலம்.

அம் : ம்.

பால : இதெல்லாம் நல்லா இருக்கா?

அம் : இல்லே!

பால : கிராமத்திலே வளர்ந்த பொண்ணு அப்படித்தான் இருக்கும். வேணுமின்னா இவனுக்கு வேண்டியதெல்லாம் சொல்லிக்குடுத்து நாகரீகப் படுத்திக்கிட்டுமே. வயிரத்தைக் கூட பட்டை தீட்டினாதாம்பா பளபளன்னு மின்னும்.

கண: ஹூஹூம் இதை நாகரீகப் படுத்தறது, நாய் வாலை நிமித்திர மாதிரிதான். என் படிப்பென்ன, அந்தஸ்தென்ன, இவளைக் கூட்டிக்கிட்டு வெளியிலே போனா பார்க்கிறவங்க என் வீட்டுக்காரினு சொல்வாங்களா? நாலு பிரண்ட்ஸகளுக்கு அறிமுகப் படுத்தினா ரெண்டு வார்த்தை இங்கிலீஷிலே பேசத் தெரியுமா? ஒரு கலெக்டர் வீட்டுக்கு, மினிஸ்டர் வீட்டுக்கு என்கூட வர யோக்யதை உண்டா, இவளுக்கு?

பால : ஆமா, இவரு கவர்னர் வீட்டுப் பிள்ளை. தினம் கலக்டரையும் மினிஸ்டரையும் மீட் பண்ணிக்கிட்டே இருப்பாரு. அட ஏண்டா வெறும்பயமவனே!

கண : அம்மா! அவமானம் அவமானம். ஒன் பிள்ளையினுடைய மதிப்பைக் குறைச்சு எடை போட்டிருக்கே நீ. இந்தியாவிலேயே ஏன் ஆசியாவிலேயே ஒன் பிள்ளை பெரிய அறிவாளின்னு பேர் வாங்கப் போறான். அம்மாயார் என்ன சொன்னாலும் சரி இந்த அவலட்சணம்

புடிச்ச அநாகரீகத்தை நான் திரும்பிக்கூட பார்க்க மாட்டேன்.

கோத: (கோபமாக) டேய் டேய்! நாகரீகத்திலே பொறந்து வளர்ந்த இந்த நாய் விட்டுக்குப் போகக் கூடாதுன்னுனே கேட்டியா நீ?

கண: இங்கே யாரும் நாயுமில்லே பூனையுமில்லே.

கோத: பேசினு பல்லே உடைச்சிடுவேன். நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். கடுதாசி எழுதி வரவழைச்சிட்டு இண்டலா பண்றீங்க?—சுண்டக்கா பசங்களா! என் பொண்ணைப் பார்த்து இப்படியெல்லாம் பேச ஒனக்கு என்ன தைரியம்டா.

கண: என்ன, இதெல்லாம் மரியாதை இல்லாமே?

கோத: மரியாதை பண்ணத் தாண்டா போறேன். ஒன் கையைக் காலே முறிச்சு, ஒனக்கு மரியாதை பண்ணலேன்னு, என் பேரே மாத்தி வச்சுக்கறேன்

பால: அட இரப்பா கோதண்டம்! என்ன நீ கூட சின்னப் பிள்ளையா? (தடுக்கிருர்)

கோத: அடச்சி! போங்காணும். பொல்லாத பிள்ளையைப் பெத்துட்டான். நேத்துப் பொறந்த பய என்ன திமிரு இவனுக்கு? ஏண்டா டேய்!

அம்: என்னுங்க நீங்க பெரியவங்க...

கோத: ஏன், இவ்வளவு நேரம் உங்களுக்கு சின்னவங்களாகத் தெரிஞ்சுதா?

அம்: ஐயையோ மன்னிச்சுக்குங்க!

கோத: உதை விழும்னு தெரிஞ்சா மன்னிப்பா கேக்கறீங்க.

கண: ஆமா?

சாவி: அப்பா, நாகரீகம் தெரிஞ்சவங்க நடந்துக்கிற முறை இது தாப்பா. நமக்கு அந்த நாகரீகம் தெரியாது. வாங்க போகலாம்.

கோதண்டம் தன் மனைவி மகளுடன் கோபமாகச் சென்று விடுகிருர். அவர் சென்று கொண்டிருந்த டாக்ஸி பெட்ரோல் பங்குக்குச் செல்கிறது. அங்கு எதிர்பாராத விதமாக ஆனந்தரங்கம் பத்மினியுடன் தன் காரில் வருகிருர். கோதண்டத்தைக் கண்டதும் வற்புறுத்தி அவரைத் தம் வீட்டிற்கு அழைத்துச் செல்கிருர். கோதண்டமும் சாவித்திரியுடன் அவர் வீட்டுக்குச் செல்கிருர்.

காட்சி 9

பாலசுந்தரம் வீட்டில், யாவரும் மனங் குழம்பி யிருக்கின்றனர். கணபதி கோதண்டத்தின் மனம் புண்ணாகும்படிப் பேசிவிட்டதை அம்பலவாணனிடம் கூறிக் கொண்டிருக்கிருர் பாலசுந்தரம்.

பால: சொல்லேம்பா அம்பலம். நிக்கிறியே மரம்மாதிரி! பொண்ணைப் புடிக்கலேன்னு அதைச் சொல்ற முறை இதுதானு? ஒனக்கு புத்தி இத்தி இருக்கா? இதுதான் படிச்ச லக்ஷணமா? இல்லே, இதுதான் நாகரீகமானு கேக்கறேன்? உம், ஏம்பா நான்தான் கேக்கறேன். நாகரீகம் நாகரீகம்னு என்ன அர்த்தம்? கரைச்சா குடிக்கப் போருன்? பொண்ணு ஏதோ குடித்தனத்துக்குப் பொறுத்தமா இருக்கணும், வாய்க்கு ருசியா சமைக்கணும். அவ்வளவு தானே?

அம்: அவ்வளவுதான்.

பால: அப்படித்தான் என்ன அவ பாக்கறதுக்கு விகாரமாவா இருக்கா?

கண: இல்லே, அழகு அப்படியே சொட்டுது!

பால: அட பேசாம இருடா, கபோதிப் பய மவனே.

அம்: ஆமடா.

பால: மகா அழகைக் கண்டுட்டவன் மாதிரி பேசுருன். ஏம்பா! இவன் அந்தப் பொண்ணைப் பார்த்து இப்படிப் பேசுருனே, இவன் அம்மாளை நான் கல்யாணம் பண்ணிக்

இட்டு வர்றபோது இவன் பார்த்திருந் தான்னு என்ன சொல்லிபிருப்பான்?

கண : வேண்டாம்னு சொல்லியி ருப்பேன். அம்மாளா இருந்தா என்ன யாரா இருந்தா என்ன?

பால : டேய், இங்க பாரு! ஏதா வது பேசிக்கிட்டிருந்தே, அப்புறம் பொல்லாத கோபம் வந்திடும் எனக்கு.

பார் : இதுவே எங்க அண்ணுவா இல்லாமே முணுவது மனுஷாளா யிருந்தா என்ன ஆகியிருக்கும்?

கண : என்ன ஆயிருக்கும்?

அம் : எலும்பை ஒடிச்சு கையிலே குடுத்திருப்பான்.

கண : உம்.

அம் : அந்த மனுஷன் புடிச்ச புடி யிலே சர்வநாடியும் ததிங்கிணத்தோம் போடுது.

கண : நெஜமாகவா?

அம் : டேய்!

பார் : கொஞ்ச நேரத்திலே என் னென்ன பேசிப்புட்டான். பாவம், அந்தப் பொண்ணு மனசு என்ன பாடுபடும்?

ஆனந்தரங்கம் வீட்டுக்குச் சென்ற சாவித்திரி பத்மினியிடம் மதுரைக்கு வந்த விவரத்தையும், நடந்த விவரங்கள் எல்லாவற்றை யும் சொல்லி வருத்தப்படுகிருள்.

சாவி : என் மனசு என்ன பாடு பட்டது தெரியுமா?

பத் : அழாதே சாவித்திரி! அழாதே, உக்காரம்மா. உம். பேச் சிலே நாகரீகம், நடத்தையிலே அநாக ரிகம், என்னமோ இங்கிலண்ட்லே பொறந்து, அமெரிக்காவிலே படிச்சு, பாரிஸிலே வளர்ந்ததாகத் தான் நெனேச்சிக்கிறது. காட்டுமிராண்டி!

சாவி: சேச்சே...அவரை அப்படி யெல்லாம் சொல்லாதே பத்மினி!

பத் : உண்மையைச் சொல்! அந் தக் கணபதியையே கல்யாணம் பண் ணிக்கணும்னு விரும்பறியா? அந்த அகம்பாவியையா? ஏன்?

சாவி : எனக்கு அறிவு தெரிஞ்ச நாளிலேருந்து அவர்தான் என்னு டைய புருஷன்னு எங்கம்மா சொல்லி வந்தாங்க.

பத் : உம்...அதிலேருந்து அவ ரையே மணவாளனுக மனசிலே தீர் மானம் பண்ணிட்டியாக்கும். ஹூம் கவலேப்படாதே! சாவித்திரி! எப்படி யும் அந்த சத்தியவானேயே உனக்குக கல்யாணம் பண்ணி வைக்கிறேன்.

ஹாலில் ஆனந்தரங்கமும் கோதண்டமும் பேசிக்கொண்டிருக் கிருர்கள்

கோ : ஆனந்தம், சொல்றதைக் கேளு, அங்கே போட்டது போட்ட படியே வந்திருக்கோம். நாங்க இன் னேக்கு அவசியம் ஊருக்குப் போயா கணும்.

பத் : அப்பா, சாவித்திரி கொஞ்ச நாளேக்கு நம்மோட இருக்கட்டு மேப்பா.

ஆன : ரொம்ப சரி,

கோத : உம். இப்ப வேண் டாம்பா. இன்னெரு சமயம் வந்தா பத்து நாளேக்கு தங்கி விட்டுப் போகட்டும்!

ஆன : போடா முட்டாள்! மகா பொண்ணேப் பெத்தட்டார் இவர். இப்ப அவளே அனுப்ப முடியாது. அவளே நானே கட்டிக்கப் போறேன்.

சிவக் : (சிரித்துக் கொண்டு) மணியான யோசனே. எஜமான் இப்ப அறுபதுக்கு மேலே தானே வாலி பமே பொறக்குதாம்,

பத் : அப்படியே செய்யுங்கப்பா. அந்த நாகரிகப் பைத்தியத்தையும் பறிவாங்கறதுக்கு இதுதான் சரியான ஏற்பாடு. என்ன சின்னம்மா?

கோதண்டத்தின் மனேவி விசால மும் பத்மினிக்குச் சாதகமாகவே பேசுவதால் கோதண்டம் சாவித் திரியை ஆனந்தரங்கம் வீட்டில் விட்டுச் செல்கிருர்.

காட்சி 10

பாலசுந்தரத்தின் வீட்டில் கணபதி பத்மினியை மனதில் நினைத்து அவளைப் பற்றியே சதா தனக்குத்தானே பேசிக் கொண்டிருப்பதைக் கண்ட அம்பலம் அவனை விசாரிக்கிறான்.

அம் : டேய்ங்கப்பா! மாஜி பிரம்மச்சாரி! நீ ரொம்ப அட்வான்ஸ்லே போயிட்டேடா. ஒன் காதல் படலத்தைத்தான் கொஞ்சம் சொல்லேன்.

கண : சொல்லட்டுமா?

அம் : சொல்லு.

கண : ஆ. அவள் என்னைப் பார்த்தாள். என் உடலிலே மின்சாரம் பாய்ந்ததடா! சிரித்தாள்; என் சித்தையைப் பறிகொடுத்து விட்டேன், பேசினாள்; பேரின்ப வெள்ளத்தில் மூழ்கி விட்டேன். முழுமதியைப் பார்க்க வேண்டாம்; அவள் முகத்தைப் பாத்தாலே போதும். செந்தாமரையைப் பார்க்க வேண்டாம்; அவள் வேல் விழிகளைப் பார்த்தாலே போதும் முத்தொளியைப் பார்க்க வேண்டாமடா முட்டாள்..

அம் : ஹூம்

கண : அவள் முறுவலைப் பார்த்தாலே போதும்.

அம் : டேய். நீ அம்பிகாபதி தம்பீடா! அயோக்யப்பயலே! நீ இவ்வளவு தூரத்துக்கு வந்தட்டியா? மாமா மாமா (பாலசுந்தரத்தைக் கூப்பிடுகிறான். கணபதி தடுக்கிறான்.)

பாலசுந்தரம் வந்ததும் கணபதியின் காதல் விஷயத்தை அவரிடம் சொல்லவும், அவர் அம்பலவாணனையே கணபதியிடம் விவரங்களைக் கேட்கும்படிச் சொல்கிறார்.

அம் : சொல்லி அழுடா. உன் உள்ளத்தை உடைத்தெறிந்த அந்தக் கள்ளி யார் அப்பனே?

கண : இந்த ஊர் தாண்டா.

அம் : அட, ஊர் முக்கியமில்லேடா! அட்ரஸை சொல்லித் தொலே.

கண : கண்ணப்ப நாயினர் தெரு, நெ. 20.

இதைக் கேட்டதும், அது பத்மினியின் விலாசம் என்று அம்பலவாணனுக்குத் தெரிந்து விடுகிறது. மேலும் அவன் விசாரிக்க ஆரம்பித்ததும், பெண் பெயர் பத்மினி என்றும் கணபதி சொல்லவே அம்பலத்தின் சந்தேகம் ஊர்ஜிதமாகி விடுகிறது. அவனுக்கு மூளை குழம்புகிறது. கணபதியின் கல்யாணத்தை முடித்து வைக்க வந்த தனக்கு, தன் கல்யாணத்திற்கே ஆபத்து வந்து விடும் போல் தோன்றவே அவன் நிலைதடுமாறுகிறான். அவனுடைய விசித்திரப் போக்கு புரியாமல் திகைக்கிறார் பாலசுந்தரம்.

கண : (அம்பலவாணனிடம்) பாரஸ்ட்ஆபீஸராயிருந்தாரே ஆனந்தரங்கம் பிள்ளை, அவருடைய டாட்டர்னு சொல்லப்பா.

பால : ஓஹோ ஆனந்தரங்கம் பொண்ணு? சரியப்பா அம்பலம்! இத பாரு! அட நீ என்னடா திருதிருன்னு ...எல்லாம் கண்ருவியா இருக்கப்பா. இதபாரு! இதுவாவது உறுதியா இருக்குமான்னு கேளப்பா, ஏன்னு, பெரிய எடத்து விஷயம். கோதண்டமாவது பல்லை ஒடைச்சிடுவேன்னு சொன்னான். இந்த மனுஷர்....

கண : அதெல்லாம் ஒண்ணுமில்லேன்னு சொல்லப்பா.

பால , ஆஆ! அப்ப சரி நாளைக்கு காலையிலே பொண்ணு பாக்க வரதாகச் சொல்லி அனுப்பிச்சிடலாமா? சொல்லேண்டா?

கண : சரிதான்னு சொல்லேண்டா.

பால : சரி. நாளைக்கு காலையிலே எல்லோரும் பொண்ணு பார்க்கப் போறோம். என்ன பார்வதி! சரி தானே?

பார் : சரிதான்.

பத்மினி பரிசையில் பாஸாகி விட்ட செய்தி எல்லோருக்கும் மகிழ்ச்சியை அளிக்கிறது. அத்துடனின்றி அவளைப் பெண் பார்க்க கணபதி வரப் போவதாக ஆனந்தரங்கம் தெரியப்படுத்தவே, சாவித்திரியைப் புறக்கணித்த கணபதியை மட்டம் தட்டி புத்தி கற்பிக்

கத் தீர்மானிக்கிருள் பத்மினி. பால சுந்தரம், தன் மனைவியையும் கணபதி, அம்பலவாணன் இருவரையும் அழைத்துக் கொண்டு வருகிருர். ஆனந்தரங்கம் அவர்களை வரவேற்கிருர்.

ஆன : டேய் சிவக்கொழுந்து! சிக்கிரம் காபி குடுடா.

சிவக்கொழுந்து எல்லோருக்கும் காபி கொடுக்கிருன். பெண்ணை வரச் சொல்லவும் அவர்கள் முன் பத்மினி வந்து வணங்குகிருள். பால சுந்தரம் அவளைக் கண்டதும் அன்றொரு நாள் தன் மீது காரை மோதியவள் அவள்தான் என்பதை யறிகிருர்.

பால : ஏம்மா நீதானே...?

பத் : ஆமா, நானேதான். உங்களுக்கு உடம்புக்கு ஒண்ணுமில்லையே?

பால : எனக்கு அன்னைக்கே ஒண்ணுமில்லேம்மா. இந்தப்பய சும்மா பெரளி பண்ணிவிட்டான்.

ஆன : ஓஹோ... காரு ஆக்ஸிடெண்டுன்னு சொன்னியே...

பால : ஆமா... ஆக்ஸிடெண்டு காருக்குமில்லே, எனக்குமில்லே.

பாலசுந்தரம் கணபதியை ஆனந்தரங்கத்திற்கு அறிமுகப் படுத்துகிருர்.

பால : பிள்ளைவாள்! இவன்தான் நம்ப பையன் கணபதி.

ஆன : அப்படியா?

கண : எஸ்!

பத் : அவர் யாரு?

அம் : உம் என்னையா..?

கண : டேய் சும்மாயிருடா! ஹூம் இவன் எங்க அத்தை மகன்.

பத் : ஓஹோ அப்படியா! நமஸ்காரம்.

அம் : நமஸ்காரம்.

கண : பாட்டு கேக்கலாமா...

சிவ : ஓ, தைரியமாக் கேளுங்க. கிராமபோன் வைக்கட்டுமா, இல்லே ரேடியோவைத் திருப்பட்டுமா?

ஆன : அடப்போடா! புதுமடையா நம்ப குழந்தையைப் பாடச் சொல்ருருடா...

சிவ : அப்படியா... ஐயாம் ஸாரி!

கண : இங்லீஸ்லேல்ல வருத்தப்படருரு! உங்களுக்கு டான்ஸ் தெரியுமா?

சிவ : ஏன்? நாட்டியக் கழகம் ஆரம்பிச்சிருக்கீங்களா?

முத் : ஆமா, உங்களைத்தான் கூப்பிடலாம்னு இருக்கோம் தாளம் போட. உம் சும்மா இருப்பாயா... மெதந்துகிட்டே இருக்கியே மோர்லே போட்ட மொளகா மாதிரி.

பத் : எனக்கு ஆடத் தெரியும், பாடத்தெரியும்.

கண : போறும்! வேற என்ன வேணும்?

பத் : ஒரு பெண்ணுக்கு ஆடறதும் பாடறதும் தெரிஞ்சாலே போதும்னு நெனைக்கிறீங்களா?

கண : எக்ஸாக்ட்லி!

சிவ : கரெக்ட்... அடுப்பங்கரையிலே ஒரு ஆட்டம், படுக்கை அறையிலே ஒரு பாட்டு.

முத் : அப்பா உன் வாயைக் கொஞ்சம் பூட்டு.

பத் : எனக்கு ஒரு சந்தேகம்.

கண : என்ன...?

பத் : பெண் பார்க்க வர்ற எல்லாருமே மொதல் கேள்வி பெண்ணுக்கு பாடத் தெரியுமான்னுதான் கேக்கருங்க. ஆனு கல்யாணத்துக்கு அப்புறம் எந்தப் புருஷனுவது தன்னுடைய மனைவியைப் பாடச் சொல்லி கேட்டதுண்டா?

கண : கேக்கணும், கேக்கணும்! பாடத்தெரிந்தவளைக்கல்யாணம் பண்ணிக்கிட்டவன் தினம் ஒரு மணி நேரமாவது அவ பாட்டைக் கேட்டு ரசிச்சாகணம்னு ஒரு சட்டமே வரணும். எப்படி?

பால : (தன் மனைவியைப் பார்த்து) ஆரம்பிச்சுட்டாண்டி. அப்புறம் என்ன பிள்ளைவாள்?

ஆன: என்ன பொண்ணைப் பிடிச்சிருக்கா?

பால: ஏண்டாப்பா என்ன?

கண: ஓ, ரொம்ப பிடிச்சிருக்கு. எனக்கு மனைவியாக யிருக்கக்கூடிய எல்லாத் தகுதியும் இருக்கப்பா!

பத்: கொஞ்சம் இருங்கப்பா நானும் சில கேள்விகள்...

கண: கேக்கவே வேண்டாம். நான நாகரீகத்தின் எவரெஸ்ட்! சீர் திருத்த சிகரம்!

பத்: உட்காருங்க.

கண: உம்..

பத்: உக்காருங்க.

கண: தாங்ஸ். நான் பழமைக்கு அடிபணியும் பத்தாம் பசலியல்ல. பெண்ணுக்கு சம உரிமை கொடுப்பேன்.

பத்: ரொம்ப சந்தோஷம். நான் கேக்கவந்த கேள்வி அதல்ல.

கண: பின்னே?

பத்: உம் உங்களுக்குப் பாடத் தெரியுமோ?

கண: பாட்டா! நாம்! என்ன சங்கீதப் போட்டியா நடத்தப்போறேம்?

பத்: இல்லே! நான்பாடி உங்களை மகிழ்விக்கிறமாதிரி நீங்களும் பாடி என்னை மகிழ்விக்க வேண்டும்.

கண: பாடத் தெரியாது.

பத்: போகட்டும் நாட்டியமாவது?

கண: நான்ஸென்ஸ்! இதென்ன கேள்வி?

பத்: ஆத்திரம் வேண்டாம்! நான் உங்களுக்குப் பொருத்தமான மனைவியான்னு பரிக்ஷை செய்து பார்க்கிறீங்களே! அதைப்போல நீங்க எனக்குப் பொருத்தமான கணவன்தானான்னு பரிக்ஷை செய்து பார்க்க வேண்டாமா?

கண: உம்... அப்புறம் இன்னும் என்ன கேக்கனும்?

பத்: உங்களுக்கு என்ன உத்தியோகம்?

கண: நான் உத்தியோகம் பார்க்க வேண்டிய அவசியமேயில்லை. ஆயுள் பூராவும் ஆனந்தமா சாப்பிட்டுக்கிட்டு இருக்கலாம்.

பத்: அப்பா சம்பாரிச்சு வச்ச பணத்திலே. அப்படித்தானே? உழைப்பை அலட்சியப் படுத்தறது தான் நாகரீகமா?

கண: அலட்சியப்படுத்தலே; அவசியமில்லை.

பத்: நப்ப நாட்டிலே யாராயிருந்தாலும் சக்திக்குத் தகுந்தாப்போல உழைக்காமல் சாப்பிடுறது மன்னிக்க முடியாத குற்றம்!

கண: இது மேடையிலே பேச வேண்டிய பேச்சு; நான் பிரசங்கம் கேட்கவரவில்லை.

பத்: போகட்டும். உங்களுக்குச் சமைக்கத் தெரியுமா?

கண: ஏன், நீங்க உத்தியோகம் பாக்கப் போறீங்களா?

பத்: மனைவிக்கு சமத்துவம் கொடுக்கிறது உண்மையானல் நீங்களும் சில நாளைக்குச் சமைக்கனுமில்லையா?

பத்மினி கேட்கும் கேள்விகளுக்குச் சரிவரப் பதில் சொல்லத் தெரியாமல் விழிக்கிருன் கணபதி.

முத்: என்னங்க எஜமான் விவாதம் முடிஞ்சதோ?

பால: தலைவிதி!. நானும் கேட்டுக்கிட்டுத்தான் இருக்கேன். என்ன பிள்ளைவாள்?

ஆன: ஆ. இதோ வந்துட்டேன். ஏம்மா உனக்கு மாப்பிள்ளை பிடிக்குதா?

பத்: இல்லையப்பா.

பத்மினி துணிச்சலாகப் பதில் சொல்லிவிடவே கணபதி விரக்தியோடு திரும்புகிருன்.

கண: அப்பா! இந்த சம்பந்தமே நமக்கு வேண்டாம் புறப்படுங்க.

அம் : கரெக்ட்.

பால : இதைத் தெரிஞ்சுக்க இவ்வளவு நேரம் ஆச்சாடா, மடப்பய மவனே. எல்லாம் உன் வாயாலே வந்த வெனைதாண்டா போ...அப்ப நாங்க வரோம் பிள்ளைவாள்.

(விடைபெற்றுச் செல்கிறார்கள். வீட்டினுள் உரக்கச் சிரிப்புச் சப்தம் கேட்கிறது)

ஆன : ஏம்மா. அவுங்க பொண்ணு பார்க்க வரலாமான்னு கேட்டனுப்பிச்சதுக்கு, வரச்சொல்லுங்கப்பான்னு சொன்னியே, இந்த நாடகம் ஆடறதுக்குத்தானா? எனக்கு அப்பவே சந்தேகம்.

பத் : ஆமாமப்பா ...எப்படி பழிக்குப்பழி!

ஆன : உம் ..உம்...

பத் : சாவித்திரி....சாவித்திரி! என்னடியம்மா இவ்வளவு சோகம்?

ஆன : என்ன இருந்தாலும் புருஷன்பாரு...ஆனாலும் பப்பி இத பாரு...நீ இப்படியெல்லாம் பேசியிருக்கக்கூடாது.. என்ன சொல்றே?

பத்மினியின் முடிவான தீர்மானத்தைத் தெரிந்து கொண்டபின், ஆனந்தரங்கம் வீட்டிலிருந்து பாலசுந்தரம், பார்வதி, கணபதி, அம்பலவாணன் ஆகியோர் கிளம்புகிறார்கள். பாலசுந்தரமும் பார்வதியும் ஒரு காரிலும் அம்பலவாணனும் கணபதியும் மற்றொரு காரிலும் செல்லுகிறார்கள்.

அம் : கணபதி !

கண : அம்பலம்

அம் : அந்தக் குட்டி என்னென்ன கேள்விடா கேட்டுப்புட்டா! நாக்கைப் புடுங்கிக்கிட்டு சாகலாம் போல இல்லே?

கண : டேய், அவ ஒண்ணே ஒண்ணுதாண்டா கேக்க மறந்துட்டா?

அம் : என்ன ?

கண : ஒனக்கு புடவை துவைக்கத் தெரியுமான்னு...

அம் : டிரைவர், காரை நிறுத்தப்பா!

கண : ஏண்டா! இப்ப அதையும் கேக்கச் சொல்லப் போறியா...?

அம் : அந்த அகம்பாவக் காரியெப் பாத்து பழிக்குப் பழி வாங்கப்போறேன.

வண்டி நிற்கிறது

கண : டேய், யார்ரா இவன்? கும்பகோணத்திலே அடிபட்டு, குத்தாலத்திலே மீசை துடிக்கிறது. அப்ப மழை பேஞ்சிது: இடி இடிச்சுது. பேசாம குத்துக்கல்லு மாதிரி உட்கார்ந்திருந்தியே...

அம் : இல்லேடா ... அப்ப நான் இந்த இது...ஐடியா பண்ணிக்கிட்டிருந்தேண்டா...இப்பதான் ஸ்டிரைக் காச்சு.

கண : ஆனது போதும், பேசாம வா...

அம் : இல்லெடா ... என் மனசு கேக்கலே .. அவளைப்பார்த்து ஆயிரக் கணக்கான கேள்விகளை அள்ளிவீசி அவளைத் திணற அடிச்சு ஒன் கால்லே வந்து விழுந்து மன்னிப்புக் கேக்கும் படியாச் சொல்லப் போறேன.

கண : நெஜமாவா? அப்ப சரிவா.

அம் : ஆ நீ எங்கேவர? அந்த வேலே வச்சுக்காதே. உனக்கு உடம்பு சரியில்லே. உடம்பை அலட்டிக்காதே அதெல்லாம்எங்கிட்ட விட்டிடு. நான் பார்த்துக்கிறேன். என்ன.... வரட்டுமா? விஷ்யூ ஸக்ஸஸ்.

கணபதியிடம் விடை பெற்றுக் கொண்டு மீண்டும் ஆனந்தரங்கம் வீட்டுக்கு பத்மினியைக் கண்டு பேசுக அம்பலவாணன் வருகிறான். வீட்டினுள் வந்து சுற்றும் முற்றும் பார்க்கிறான் ஆனந்தரங்கம் பேசுவது காதில் விழுகிறது. அவர் தன் டிரைவரைத் தேடிக்கொண்டு வரும்போது வெளியில் அம்பலவாணன் நிற்பதைப் பார்க்கிறார்.

ஆன : யார்ராது... ... வர் இல்லே... அந்த கல்யாண கோலத்திலே வந்த பயலா ?

M211,N42P N54.13.9
89680

அம்ப : உம்...பயலோ?

ஆன : பின்னே என்ன கிழவனா? ஆமா என்னது திருட்டுமுழி முழிச்சிக் கிட்டு நிக்கிறயே ?

அம் : ஆமா, எனக்குத் திருட்டு முழி. இவருக்கு ராஜமுழி. உம் ஆளைப்பாரு.

ஆன : அடே, கல்லாப் பேசறானே இந்தப் பய. ஆமா மறுபடியும் இங்கே எங்கே வந்தே?

அம் : எங்கேயும் வரல்லே. போய் கிட்டுத்தானிருக்கோம்.

அம்பலம் வெளியேறுகிறான் வெளியே வரும்போது அவன் தலை மேல் ஒரு கல் விழுகிறது. அவன் திகைத்து மேலே பார்க்கவும் பத்மினியும் சாவித்திரியும் மாடியில் நிற்கிறார்கள். பத்மினி கல்லுடன் சேர்த்து அனுப்பிய காதல் கடிதம் காற்றில் பறந்து செல்லுவதைக் காண்பிக்கிறாள். அம்பலவாணன் ஓடிச் சென்று அந்தக் காகிதத்தை எடுப்பதற்குள் அது ஒரு குப்பை வண்டியில் விழுந்து விடுகிறது. தேடி எடுத்து அதைப் படிக்கிறான். அன்று மாலை பார்க்கில் தன்னைச் சந்திக்கும்படி பத்மினி எழுதிய காதல் கடிதம் அது. அம்பலவாணன் மகிழ்ச்சியுடன் திரும்புகிறான்.

பத்மினியின் செய்கையைக் கண்டு சாவித்திரி அவளை விசாரிக்கவும் அவள் தன் அந்தரங்கத்தை அவளிடம் சொல்லி விடுகிறாள்.

சாவி : என்னடி இது?

பத் : இரு இரு. அப்புறம் சொல்றேன்.

சாவி : ஆஹா உள்ளேதாண்டி இருக்கே! காலேஜ்லே ஆரம்பிச்சு கல்லு வழியே அனுப்பற அளவுக்கு வந்துட்டதாக்கும் உங்க காதல், கள்ளி!

பத் : போடி!

சாவி : ஆமாம், அப்பா கிட்டே சொல்லிட்டியா?

பத் : எப்படி சொல்றது?

சாவி : எப்படி காதல் பண்ணினே?

பத் : ஹூஹூம். கல்யாண விஷயத்தைப் பற்றி அப்பா பேச்செடுத்தா தானே சொல்றதுக்கு?நானா போயி... ஹூஹூம்.

அம்பலவாணன் முள் மேல் தவம் இருப்பவன் போல், பத்மினியின் வருகைக்குக் காத்திருக்கிறான். பத்மினி வருகிறாள்.

அம் : பப்பி!

பத் : உம் என்ன?உங்க நாகரீகப் பைத்தியத்துக்கு இப்பவாவது புத்தி வந்திருக்குமா?

அம் : அவனுக்குப்புத்திவந்ததோ இல்லையோ எனக்கு உயிர் வந்தது!

பத் : அப்படீன்னா?

அம் : நீ அவனைப் பிடிக்கலேன்னு சொல்ற வரைக்கும் என் உயிர் எங்கிட்டே இல்லை, தெரியுமா உனக்கு?

பத் : அப்போ அந்த ஆளை கல்யாணம் பண்ணிக்குவேன்னு நெனைச்சீங்களா?

அம் : உம்?

பத் : என்ன உம்? என் பேர்லே அவ்வளவு அவநம்பிக்கை உங்களுக்கு (அழத் தொடங்குகிறாள்)

அம் : அடடே! நீ ஸ்டார்ட் பண்ணாதே! நான் சொன்னது தப்பு மன்னிச்சுடு.

பத் : உம் சொன்னது தப்பு தானே?

அம் : ஆமா!

பத் : போடுங்க தோப்புக்கரணம்!

அம் : யாரவ! தோப்புக்கரணம் என்னது?

அம்பலம் தோப்புக்கரணம் போடுகிறான்.

பத் : பக்தா! மன்னித்தேன்.

அம் : பப்பி.

பத் : உம்.

அம் : நம்ப கல்யாணத்தைப்பத்தி உங்கப்பா கிட்டே கேட்டியா?

பத் : அப்பா கிட்டே கேட்க வெட்கமாயிருக்கே!

அம் : அப்ப ஒரு காரியம் செய்ய றேன்.

பத் : என்ன?

அம் : நானே வந்து ஓங்க அப்பாவை நேர்லே கேக்கறேன்.

பத் : எப்படி?

அம் : இந்தாய்யா ஒன் பொண்ணை எனக்கு கல்யாணம் பண்ணிக் குடுக்கிறியா இல்லையானு.

பத் : சரிதான். பொண்ணு கேக்கற லக்ஷணமா இது? கொலை பண்ணிடுவேன்னு பயமுறுத்தர மாதிரியில்லே இருக்கு! எப்படியாவது அந்த கணபதிக்கு சாவித்திரியை கல்யாணம் பண்ணிவைக்கணும்

அம் : எப்படி முடியும்?

பத் : பஸ்ட் கிளாஸா ஒரு பிளான் போட்டிருக்கேன்.

பத்மினி தான் நிர்மாணித்திருக்கும் ஒரு திட்டத்தை அம்பலவாணனிடம் சொல்லி, அதன்படி அவனை நடிக்கச் சொல்கிருள். அவனும் சம்மதிக்கிருன்.

அம் : ஓ எஸ்! உன்னுடைய ஆக்ஞை எதுவானாலும் அரை நொடியில் நிறைவேற்றக் காத்திருக்கிறேன். இதோ பத்மினிதாசன் ரெடி

பத் : மிக்க மகிழ்ச்சி!

இருவரும் பிரிந்துசெல்கிருர்கள்.

காட்சி 11

சாவித்திரி, பத்மினியின் அந்தரங்கத்தை நாசூக்காக ஆனந்தரங்கத்திடம் எடுத்துச் சொல்லி, வந்திருந்த அம்பலவாணனே அவரது மாப்பிள்ளையாக வரவிருக்கிருன் என்பதைச் சொல்லிவிடுகிருள் அவரும் அவள் சொல்வதற்கு மறுப்புக் கூருமல் பத்மினி தன் கணவனைத் தானே தேடிக் கொண்டதை எண்ணி மகிழ்ச்சியடைகிருர்.

சாவித்திரியை கணபதிக்கே மணம் செய்து வைக்க திட்டமிட்டு

ராகினி என்ற பெயரில் அவளை ஓர் மேல் நாட்டுப் பெண்மணி போல் சிங்காரித்து கணபதியின் வீட்டுக்கு எதிர் வீட்டில் குடியிருக்கச் செய்கிருள் பத்மினி. அவளுக்கு பத்மினி வேலையாளாக இருந்து வருகிறுள். காரில் அவர்கள் போய்க் கொண்டிருக்கும்போது கணபதியும் அம்பலமும் வந்துகொண்டிருக்கிருர்கள். காரை நிறுத்துகிருள் ராகினி.

ராகி: தயவு செய்து ஓரமா நடந்து போங்க!

அம்: டேய் வாடா.

ராகி: போய் சாமான்களெல்லாம் எடுத்துவை. உம். ரொம்ப உஷ்ணமால்லே இருக்கு. டாப் ஆப் அமெரிக்காவிலே இருந்திட்டு இந்த ஊர்லே எப்படி இருக்கிறது?

பத்: ஆமா. உங்களுக்குத்தான் ஸ்வீட்ஸ்ர்லாந்தே பிடிக்கலையே.

ராகி: எஸ். என்ன இருந்தாலும் அமெரிக்கா மாதிரி வராது.

பத்: வராது .. வராது...

கணபதியின் வீட்டுக்கு எதிரிலுள்ள வீட்டினுள் ராகினி நுழைகிருள். பத்மினியும் வேலைக்காரனும் பின் தொடருகிருர்கள். அவர்கள் செல்வதையே குறிப்பாகக் கவனிக்கிருன் கணபதி. ராகினியின் உருவம் அவன் மனதில் பதிந்துவிடுகிறது.

கண: அமெரிக்கா...அமெரிக்கா ...அமெரி...

அம்: டே...என்னடாது?

கண: அமெரிக்கா!

அம்: போடா உள்ளே!

கண: உம்...

அம்: போடான்னு...

கண: அமெரிக்கா!

அம்: போடாங்கறேன்!

கண: அமெரிக்கா!

கணபதி உளறிக்கொண்டே தன் வீட்டினுள் நுழைகிருன். அம்பலமும் அவனுடன் செல்கிருன்

கண: பியூடிபுல், ஒண்டர்புல்! அமெரிக்கா அமெரிக்கா!

பால: என்னடாது?

அம்: மாமா இந்தப்பய...

கண: டேய்!

அம்: வேண்டாமா, சரி ஒண்ணுமில்லே மாமா. ரோட்லே பேரிக்கா வித்துக்கிட்டு போனு அதைப் பார்த்திட்டு இவன்...

பால: ஏண்டா. கண்டதெல்லாம் வாங்கித்தின்னு உடம்பு என்னத்துக்காகும்?

அம்: ஹூ ஹூம்!

பால: போங்கடா!

அம்: அதானே நானும் இவன் இட்டே சொல்றேன்.

கணபதி அம்பலம் இருவரும் மாடிக்குச் செல்கிருர்கள்.

கண: அமெரிக்கா .அமெரிக்கா

அம்: என்னடா?

கண: அவ இந்த லோகத்துப் பெண்ணே அல்லடா!

அம்: வேற யாருடா அவ?

கண: ஊர்வசியோ, ரம்பையோ தானே, ரதிதானே, பிரம்மன் உலகை வெல்லப்படைத்தானே? அம்பலம்!

அம்: நாய்னு!

கண: இவள் ஊர் தாரணி து பேர்தானிது யார்தான் அறிவார் இதை? உன்னதமாகவே வந்தாள். எந்தன் உள்ளத்தையே கொள்ளை கொண்டாள்.

அம்: தநிங்கிணத்தோம் தநிங்கிணத்தோம். சீ கழுதை, பாட்டா பாடறே? எவனுவது கேட்டு சிரிக்கப் போறுண்டா.

கண: அவளுடைய அருமை உனக்கு என்னடா தெரியும்? ஆகா என்ன அழகு!

அம்: உம்

கண: என்ன ஸ்டைல்!

அம்: ஐயோ!

கண : அமெரிக்காவிலிருந்து வந்தவடா, அமெரிக்கா அமெரிக்கா!

அம் : டேய்! சும்மாயிருக்க மாட்டே? அமெரிக்கா ஆப்ரிக்கான்னு உலதப்பேன்!

கண : உனக்கென்னடா? நான் ஆயிரந்தடவை சொல்லுவேன் அமெரிக்கா அமெரிக்கா அமெரிக்கா!

ராகினி பாடுவதைக் கேட்டு கணபதி தூக்கங்கலைந்து எழுந்து விடுகிறுன். அவன் அம்பலவாணனையும் எழுப்பி அவளது பாட்டைப்பற்றி பிரமாதமாகப் பேசுகிறுன்.

அம் : டேய்.., டேய்....கணபதி டேய்! டேய்! ஐயையோ!

கண : டேய்!

அம் : என்னடாது?

கண : அம்பலம், அந்த கோகிலம் எப்படியோ என் இருதயத்துக் குள்ளே புகுந்துட்டாடா!

அம் : எக்ஸ்ரே எடுத்துப் பார்ப்போமா?

கண : உம், சரி அம்பலம்! இது விளையாடறதுக்கு சமயமில்லே. எப்படியாவது நான் அவளைக் கல்யாணம் பண்ணிக்கனும்டா.

அம் : உம் கல்யாணமா?

கண : ஆமா!

அம் : அவ வீட்டு'பட்லரா'க்கூட ஒன்னை வச்சுக்கமாட்டா.

கண : ஏண்டா?

அம் : உம், ஒன் பர்ஸனலைட்டியைப் பார்த்துத்தான்.

கண : அம்பலம், நீதான் எப்படியாவது ஏற்பாடு செய்யணும்டா. இப்பேர்ப்பட்ட அழகி எனக்குக் கிடைக்கலேன்னு, நான் பிரம்மச்சரியத்தை விட்டுத்தான் என்ன பயன்?

அம் : அடே கணபதி! கவலைப்படாதே. இதுக்கு ஒரு பஸ்ட்கிளாஸ் ஐடியா பண்றேன்.

கண : உம் பண்ணு .. பண்ணு! அம்பலம் இதுக்காக நான் உனக்கு ஒரு லட்சம் தாங்ஸ் போட்றேன்...

அம் : அப்படியா? நான் உனக்கு ஒரு 'கோ மென்ஷன்' கூடப் போட மாட்டேன்! பேசாம படுத்துத் தூங்கு

கண : தூக்கமா, எனக்கா எங்கேருந்து வரப்போகுது?

அம் : அமெரிக்காவிலிருந்து உனக்காகஸ்பெஷலா வரப்போகுது. போய் படுத்துத் தூங்கு! அட சீ போ கழுதை.

கணபதி அம்பலவாணனை வற்புறுத்தி அழைத்துக் கொண்டு எதிர்வீட்டுக்குச் செல்கிறான்.

தர்வான் : கோன் ஹை!

அம் : இவன் ஒருத்தண்டா எங்கே போனாலும் நமக்கு. ஏண்டா ஒருவேளை அவளுக்கு கல்யாணம் ஆகியிருந்தா? (தர்வானிடம் விசிட்டிங் கார்டைக் கொடுக்கிறான்)

கண : ஆ சும்மா இரேண்டா, வாய மூடிக்கிட்டு.

தர் : ஜாவ்.

அம் : டேய் உள்ளே போடா. இவன் ஒருத்தன்! ஹிந்தியும் தெரியாது, தமிழும் தெரியாது.

கணபதியும் அம்பலமும் உள்ளே செல்கின்றனர்.

பத் : யாரது?

கண : ம். வந்து...

அம் : அம்மாளைப் பார்க்கணும்.

கண : ஆமா. பாக்கணும்..-

பத் : உக்காருங்க...வருவாங்க.

கண : அப்படி ...

பத் : ஒண்ணுமில்லே... அம்மா வராங்க.

கண : ஓ. பேஷா வரட்டுமே! உம் (ராகினி வருவதைக் கண்டு) ஓஹோ! வாங்க வாங்க. நமஸ்காரம்! உம், குட்மானிங்!

ராகி : குட்மார்னிங்.

அம் : வணக்கம்.

ராகி : வணக்கம்! (கணபதியைப் பார்த்து) டேக் யுவர் ஸீட்.

கண : தாங்க்யூ. நீங்க வந்தவுடன் இந்த வீட்டுக்கே ஒரு தனிகளை ஏற்பட்டுப் போச்சே. (சிரித்தபடியே) வீட்டு அலங்காரமெல்லாம் ரொமப நாகரீகமா இருக்கே.

ராகி : உம். இதென்ன பிரமாதம்! உம் நீங்க அமெரிக்கா வீட்டைபார்த்திருக்கணும். நாங்க நடக்கிறதேயில்லே.

கண : பின்னே?

பத் : பறந்துகிட்டே போவோம்.

கணபதி அவள் சொல்வது புரியாமல் விழிக்கிறான்.

பத் : என்ன முழிக்கிறீங்க? லிப்ட் ஸார் லிப்ட்.

கண : ஓ! ஐ. ஸீ!!

ராகி : ஆமா. என்ன விஷயமா வந்திங்க?

கண : உம். உம்.

அம் : உங்களுக்கு ஒரு கார் தேவைன்னு கேள்விப்பட்டு.

கண : ஆமா ஆமா. காரு தேவைன்னு கேள்விப்பட்டோம்.

ராகி : என்ன கார்?

கண : உம்.

அம் : கிரிஸ்லர்! கிரிஸ்லர்!

கண : கிரிஸ்லர். அது ரெடியா இருக்கு! நீங்க எப்ப வேணும்னாலும் வந்தா பார்க்கலாம். நான் இந்த எதித்த வீட்லேதான் இருக்கிறோம்.

ராகி : ஓ! ஆப்போஸிட் ஹவுஸ்! அங்கேகூட ஒரு வயசான அம்மா....

கண : ஆமா இருக்குது. வயசான அம்மா. அது நம்ப வீட்லே இருக்குது.

அம் : அடேடே, எவ்வளவு பெரிய...

கண : உம்.

ராகி : நான் அன்னைக்கொரு நாள் இங்கே வந்திருந்தபோது. .

கண : உம்.

ராகி : எதிர்த்தவீட்டு அம்மாவைப் பார்த்தேன்.

கண : உம்; அது சுத்த கர்நாடகம்!

ராகி : இருந்தாலும் தங்கமான வங்க!

கண : உம்.

ராகி : ஐ லைக் ஹர் வெரி மச்.

கண : அடடே, அப்படியா? அவுங்க என்னுடைய மதர்தான்.

ராகி : ஈஸ் இட்?

கண : உம்.

ராகி : வெரிகுட்! (திரும்பி) என்னம்மா பேபி தூங்கி முழிச்சுடுச்சா?

கண : ஆ! பேபியா?

பத்மினி மாடி வழியில் ஒரு நாய் வருவதைப் பார்க்கிறாள்.

பத் : அம்மா, இதோ வருதே பேபி.

கண : அட நாயா?

பத் : நாயா சார் இது?

கண : பின்னே?

பத் : நாய்க்குட்டி சார்.

ராகி : இது ரஷ்யாவிலே வாங்கினது.

கண : அட, நீங்க ரஷ்யாவுக்குகூட போயிருக்கிங்களா?

பத் : உலகம் பூரா சுத்திப் பாத்திருக்கோம் ஸார், சுத்திப் பாத்திருக்கோம்.

அம் : மாடம், இவனுக்கு மேல் நாட்டுநாகரீகத்திலே அபார மோகம்.

கண : எஸ். எஸ்.

அம் : இந்தியாவிலே எல்லோரும் காதல் கல்யாணம் பண்ணிக்கணுங்கிறது இவனுடைய நம்பர் ஒன் அபிப்பிராயம்.

கண : கரெக்ட்டு, நான் லவ் மேரேஜ் பண்ணிக்கறதுக்காகவே இன்னும் பிரம்மச்சாரியாகவே இருக்கேன்!

ராகி : குட் ஐடியா! கண்ணம்மா ரேடியோ ஆன் பண்ணு.

டிபன் கொண்டு வந்து வைக்கப்படுகிறது கணபதி சாப்பிட ஆரம்பிக்கிறான்.

"Murphy Radio"

மர்பி ரேடியோ - மற்றெதையும்விடச் சிறந்தது



ரொக்கம் அல்லது தவணைகளில் பணம் செலுத்தலாம். ஏ. ஸி. அல்லது ஏ. ஸி. / டி ஸி. அல்லது பாட்டரி மூலம் இயங்கக் கூடியது. ரு. 215 முதல் எல்லா மாடல்களும் கிடைக்கும். பழைய செட்டுகளையும் மாற்றிக் கொள்ளலாம்.

JAY-O-PHONE CO.,

No. 13, Mint Street (Near Central Station), Madras-3.

ராகி : ஆ, தொடாதிங்க.

கண : ஆ.

ராகி : ஸ்பூன்!

அம்பலம் அடிக்கடி பத்மினியைப் பார்த்துச் சிரிப்பதை ராகினியான சாவித்திரி கவனிக்கிருள்.

கண : ஆஹா ஒண்டர்புல் காபி.

அம் : தண்ணி! தண்ணீ!

கண : ஓ!

ராகி : உங்களுக்குச் சங்கீதம் நல்லா புடிக்கும் போலிருக்கே!

கண : ஆமா ஆமா! உலகத்திலேயே உயர்ந்தது மேல் நாட்டுச் சங்கீதம் தான்,

ராகி : நோ...நோ... உலகத்திலேயே உயர்ந்தது கர்நாடக சங்கீதம் தான்...

கண : எஸ். கரெக்ட்! உலகத்திலே உயர்ந்தது கா்நாடக சங்கீதம் தான்!

ராகி : உங்களுக்குப் பாடத் தெரியுமா?

கண : ஓ தெரியுமே.

அம்பலம் வீட்டுக்குப் போகலாமென்று கணபதியைத் தூண்டவே அவன் கிளம்புகிருன்.

கண : போகலாமா? ஹூம் நாங்க வர்ரேம்.

ராகி : உங்க பேரு?

கண : கணபதி.

ராகி : ரொம்ப பழைய பேரு... பேர்லே ஒரு நாகரீகம் இல்லையே

கண : ஆ, நான் மாத்திவச்சிக்கறேன. உங்க பேரு?

ராகி : ராகினிதேவி!

கண : ஆ, ராகினிதேவீ! வாட் எ ஒண்டர்புல் நேம்!

அம் : டேய்! வந்த வேலையை மறந்துட்டியே?

கண : ஆ ஆமாம்! மிஸ் ராகினி தேவி! உண்மையைச் சொல்றேன். உங்களைப் பார்த்ததிலே யிருந்து என்னுடைய ...

அம் : காரு....

கண : காரு காரு! ஆமா. நீங்க அதை எப்ப பார்க்க வர்றீங்க?

ராகி : அமெரிக்காவிலே இருக்கிற காரு வருதானு தெருஞ்சுகிட்டு அப்புறம் சொல்றேன்.

கண : தாங்ஸ்!

கணபதி வாயசைக்க பின்னுல் அம்பலம் பாடுகிருன். குரல் மூலம் சந்தேகப்பட்ட பத்மினி, சாவித்திரியை கூட்டிக்கொண்டு அவர்கள் வீட்டுக்கு வருகிருள். சாவித்திரி பின்னுல் நிற்பதை அம்பலம் பார்த்துவிடுகிருன். கணபதி இதை அறியவில்லை.

கண : பாடித் தொலையேண்டா! அடே பாடேண்டா...

அம் : ஓ...

ராகி : ஆஹா..ஹா.... என்ன ஞானம்? என்ன சாரீரம்? என்ன இனிமை? உங்க நடிப்பு ரொம்ப பிரமாதம்! ஏன் நிறுத்திட்டீங்க?பாடுங்க!

அம் : உம், இந்தப் பயம்...

கண : உம்...

ராகி : போதும்! விளக்கம் வேண்டாம். உங்க வாழ்க்கையே இப்படித்தான் போர்ஜரியா இருக்கும்போலிருக்கே! உங்க உண்மை சொருபம் தெரியாம எவ்வளவு பெரிய தவறு பண்ண இருந்தேன். உங்களைப் பார்த்ததும் நல்லவர்னு நெனைச்சேன் காதல் கொண்டேன..

அம் : ஐயையோ...

ராகி : கல்யாணம் பண்ணிக்கலாமுனு தீர்மானிச்சேன்.

அம் : அதுக்கென்ன?

ராகி : கடவுளே! இவ்வளவு பெரிய விபத்திலிருந்து என்னைக் காப்பாத்தினியே! நான் உனக்கு எப்படி நன்றி செலுத்தப்போறேன? ஹூம்.

கண : இல்லே.. நான்.

ராகி : உம்...

ராகினி பத்மினி இருவரும் போகிருர்கள். அவர்கள் சென்றதும் அம்

பலமும் கணபதியும் பேசிக்கொள்ளுகிறார்கள்.

கண : டேய்! அம்பலம், நீ நாசமாய்ப்போக! ஐயோ, என் பேர்லே காதல் கொண்டாளாமே. என்னைக் கல்யாணம் வேற பண்ணிக்கலாமுன்னு இருந்தாளேமே. ஐயோ ஒன் அபததமான ஐடியாவினாலே எல்லாமே குட்டிச்சுவராப் போச்சேடா.

அம் : டேய், சும்மாருடா.

கண : ஏண்டா!

அம் : நீதானே பாட்டுப்பாடணும்னு சொன்னே?

கண : ஆமா.

அம்: அதுக்காக ஒரு ஐடியா பண்ணினேன்.

கண : ஐயோ, ஐடியாவாம், மண்ணாங்கட்டி ஐடியா.

அம் : அப்படீன்னா நீயே உன் கழுதைக் குரல்லே கத்தித் தொலைச்சிருக்கலாமேடா.

கண : அப்படிச் செஞ்சிருந்தாலும் நல்லாத்தாண்டா இருந்திருக்கும். இப்ப உள்ளதே போச்சேடா. ஆஹா! அகில உலகம் பூராவும் தேடினாலும் இப்பேர்ப்பட்ட அழகி கிடைப்பாளா? ஆஹா என்ன அழகு, என்ன படிப்பு, என்ன அந்தஸ்து! ஐயோ! அமெரிக்காவிலிருந்து வந்தவடா. நீ என் அதிர்ஷ்டத்துக்கு எமனா வந்தவன்! இனையோட நம் சிநேகிதத்துக்கு சீட்டுக் கிழிச்சுட்டேன்.

ஆத்திரத்தில் கணபதி அம்பலவாணனைக் கடிந்து பேசிவிடுகிறான். அதன் பின் மன்னிப்பு கேட்டு அம்பலவாணன் சொன்ன யோசனைப்படிச் செய்யச் சம்மதிக்கிறான்.

கண : **(பார்வதியிடம் ஓடுகிறான்)** மதர் மதர்! மை டியர் மதர். ப்ளீஸ் ஹெல்ப் மீ!

பார் : என்னடாது? என்னென்னமோ சொல்றியே. ஐயோ கடவுளே.

கண : ஒண்ணுமில்லேம்மா. டோன்ட் வொரி. நம்ப வீட்டுக்கு, எதிர்த்த வீட்லேருந்துஒரு பெண் வந்திருந்தாளே மிஸ். ராகினி தேவி....

பார் : மெதுவாய் பேசுடா... அவுங்க காதிலே விழுந்தா வம்பு.

மர்மம் நிறைந்த இந்தத் துப்பறியும் பயங்கரக் கதையைப் படித்துப் பாருங்கள். கையில் எடுத்தால் முடிக்கும் வரை கீழே வைக்க மனம் வராது.

144 பக்கங்கள்

விலை ஒரு ரூபாய்

எல்லா 'பேசும் படம்' ஏஜெண்டுகளிடமும் ஹிக்கின் பாதம்ஸ் ரயில்வே புக் ஸ்டால்களிலும் கிடைக்கும்.

ராமநாத் பப்ளிகேஷன்ஸ்
சென்னை 14

கண: அவளை நான் கல்யாணம் பண்ணிக்கணும்மா.

பார்: கேட்டியா அம்பலம்..?

கண: அவன் ஒண்ணும் கேக்க வேண்டாம்மா. நீயே கேளுன்னு!

பார்: பிச்சைக்காரன் மகாராஜா வீட்டுப் பொண்ணுக்கு ஆசைப்பட்ட கதையா இருக்குதே.

கண: அவளை நான் எப்படியாவது கல்யாணம் பண்ணிக்கணும்மா.

பார்: நம்மாலே எப்படிடா முடியும்?

கண: முடியாது! நிச்சயமா முடியாதில்லே? இதோ இப்பவே என் பின்னாலே வந்து உன பிள்ளையினுடைய பொணத்தை இணத்துக்குள்ளே பாரு.

அம்: டே...டே. வாடா. ரொம்ப உடம்பை அலட்டிக்கிடறியே.

கண: ரைட்!

அம்: அத்தை நீங்க முயற்சி பண்ணினு ஒருவேளை நடந்தாலும் நடக்கலாம்...

பார்: சரியப்பா, பேசிப் பாக்கறேன்.

கண: எஸ்.. ரொம்ப தாங்ஸ் அம்மா. தாங்ஸ்!

கணபதி ராகினி திருமணம் விமரிசையாக நடைபெறுகிறது. வீட்டில் ராகினியைத் தேடி அலையும் கணபதியை அம்பலவாணன் கேலி செய்கிறான்.

அம்: டேய்...

கண: உம்...

அம்: என்ன. குட்டி போட்ட பூனை மாதிரி அங்கேயும் இங்கேயும் காததுகிட்டிருக்கே...

கண: என்னத்தைச் சொல்றது போ. ராகினிகிட்டே ஒரு 'பைவ் மினிட்ஸ்' அப்படி ஜாலியா பேசணும்னு முயற்சி பண்றேன்.

அம்: ரொம்ப பரிதாபம்தாண்டா.

கண: என்னடா...... ...... என்னமோ கல்யாணமாச்சு, தம்பதிகளை அப்படி தனியா விட்டோம்கிறது வேண்டாம்! சேச்சே! இனிமே தாலிகட்டி முடிஞ்சவுடனே விருந்தாளிகள்ளாம் வீட்டைக் காலி பண்ணணும்னு ஒரு சட்டம் வரணும்!

அம்: ஆமாண்டா... உன்னை மாதிரி மூளையில்லாமே பேசற பசங்களை யெல்லாம் ஜெயில்லே புடிச்சு போடணும்னு ஒரு சட்டம் வரணும்.

கண: கரெக்ட்.

அம்: போடா... ராகினி மூணாவது அறையிலே இருப்பா. போய்ப்பாரு.

கண: தாங்க்யூ!

கணபதி ராகினியைச் சந்திக்க பல அறைகளிலும் அவளைத்தேடி அலைகிறான். முடிவில் அவள் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து விடுகிறான். பின்பு அவளைக்கூட்டிக் கொண்டு 'ஹனிமூன்' போகக் காரில்கிளம்புகிறான். கல்யாணக் கங்கணத்தையும் கழட்டாமல் கிளம்பி விடுகிறான்.

பார்: என்னுங்க, என்னுங்க உங்களைத்தானே?

பால: ஹூ.ம்..!

பார்: ராகினியை இழுத்துக்கிட்டு. எங்கேயோ போறான், உங்க பிள்ளை!

பால: அவ்வளவுதானே, இதுக்காகவா இப்படி அலர்றே? அடிபோடி பைத்தியம்! சின்னஞ் சிறுசுக அப்படித்தானே சந்தோஷமா இருக்கணும்.

கோதண்டம் ஆனந்தரங்கத்திடம் தன் மகளின் கல்யாணம் நடந்துவிட்டதைக் குறித்து மகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டிருக்கிறார். கல்யாண வீட்டிலிருந்து எல்லோரும் பிரிந்து செல்கின்றனர்.

காட்சி 12

கணபதி ராகினியுடன் உல்லாசமாகக் காரில் போய்க் கொண்டிருக்கிறான்.

கண: ஆமாம். உன் வேலைக்காரி எங்கே?

ராகி : ஹூம்! வேலைக்காரியா? நான் அவளுக்கு அப்பவே லீவு கொடுத்து அனுப்பிட்டேனே.

கண : ஆமாம், அவளும் சந்தோஷமா இருக்கட்டும்.

ராகி : ஆமா.

ஓடிக்கொண்டிருந்த கார் திடீரென்று நின்று விடுகிறது. அங்கே இருந்த சிறுவர்கள் நின்றுவிட்ட காரையும், கணபதியையும் பார்த்து கேலி செய்யவே அவன் அவர்களை மிரட்டுகிறான்.

பையன் : டேய் காரு மக்கர் பண்ணுது டோய்!

கண : என்னடா, கேலியா பண்றீங்க? பேசாமப் போறீங்களா இல்லை உங்களையும் புடிச்சு சாக்குப் பைக்குள்ளே போட்டுடவா? காருக்குள்ளே எத்தனை பசங்க இருக்காங்க தெரியுமில்லே.

பைய : டேய்! பிள்ளை புடிக்கிற ஆளுடா இவன். வாங்கடா போகலாம்.

கணபதி ராகினியை ஆக்ஸிலேடரை மிதிக்கும்படிச் சொல்லுகிறான். அவன் 'ஹாண்டில்' போட்டு முடிந்ததும், அதன்படி ராகினி ஆக்ஸிலேடரை பலமாக அழுத்தியதால் கார் கிளம்பிவிடுகிறது. கணபதி கீழே நின்றபடி 'ராகினி ராகினி' என்று கூச்சலிடுகிறான். கார் நிற்காமல் போய்க்கொண்டே இருக்கிறது.

கண : ஹூம்... அமெரிக்காவிலே கார் ஓட்டினவளுக்கு இதென்ன பிரமாதம்? ஜாலியா அப்படிப் போயிட்டுத்தான் திரும்பி வரட்டும் வரட்டும்...

பைய : அய்யாவை வுட்டுட்டுட்டு அம்மா ஓடிட்டாங்கடோய்!

ம. பைய : ஆமடோய்!

ஒருவன் : என்னடா, என்னடா.

பைய : மாமா, இந்த ஆளு எங்களை யெல்லாம் புடிச்சு சாக்குப் பையிலே போட்டுக்குவேன்னு சொல்றாரு . மாமா!

கி. வாசி : ஆ...

பைய : காருக்குள்ளே கூட அஞ்சாறு பசங்கள் சாக்கு மூட்டைக்குள்ளே இருக்காங்களாம்.

கி வாசி : காரு எங்கேடா போச்சு?

பைய : அதுதான் பசங்களோட போயிடுச்சே...

கிராமஜனங்கள் கோபங்கொண்டு பிள்ளைபிடித்துச் செல்பவன்தான் கணபதி, என்று தீர்மானித்து, அவனைப் பிடித்து இழுத்துக் கொண்டு கிராமச் சாவடிக்குச் செல்கின்றனர். அங்கு அவனை அடித்து மிரட்டி, கடத்திச் சென்ற குழந்தைகளைப் பற்றிய விவரம் கேட்கின்றனர். நிரபராதியான கணபதி சந்தர்ப்ப வசமாகச் சிக்கிக் கொண்டு விழிக்கிறான்.

கண: அடிக்காதையா! நான் ஒரு பாவத்தையும் அறியேனய்யா.

கி. வாசி : பார்த்தியாண்ணே. நம்மகிட்டே என்ன சொன்னான்?

கண : நீங்கள்ளாம் கேட்டீங்களேனு நான் சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன்.

ஒரு : வெளையாட்டாமில்லே வெளையாட்டு! அண்ணே ஒழுங்கா பதில் சொல்லல்லே இழுத்துக்கிட்டு வாங்க சாவடிக்கு!

சாவடியில் அவனைக் கட்டிப் போட்டுவிட்டு மிரட்டுகிறார்கள்.

ஒரு : ஓட்டச்சாண் இருந்துகிட்டு அடிக்கவா செய்யறே?

கண : எல்லோரும் சேர்ந்து அடிக்காதீங்க. ஒவ்வொருத்தரா அடிங்க. உயிருபோயிடும்.

ஒருத் : டேய்! கையை ஒடிச்சிடுவேன்.

மற் : கண்ணை தோண்டிடுவேன்.

கண : ஐயா... எனக்கு ஒண்ணுமே தெரியாது.

ஒருத் : அவவன் படாத பாடு பட்டுப் புள்ளெயைப் பெத்தா, நீ பருந்துமாதிரி வந்து கொத்திக்கிட்டா போறே?

கணபதி தன் பேச்சையும், உடையையும் குறிப்பிட்டு தான் நாணயமானவன் என்று சொல்லி அவர்களை நம்ப வைக்க முயற்சிக்கிறான். ஆனால் அவர்கள் அவனை நம்புவதில்லை.

கி. வாசி : அண்ணே! இவன் கையிலே பார்த்தியா ... இதான் பிள்ளை வசியம் பண்ற மந்திரக் கயிறு.

கண : ஐயா, எனக்கு நேத்தித் தான் கல்யாணம் ஆச்சு! இது கங்கணக் கயிறப்பா.

ஒருத் : ஆ, புளுகறான். நம்பாதே! கங்கணத்தை அவுக்காமே எங்கே யாவது மாப்பிள்ளையை அனுப்புவாங்களா?

மற் : ஆமாம். பெரிசாப்புளுகுறான். கணபதியின் வார்த்தையில் கடைசிவரை நம்பிக்கை வைக்காத கிராம ஜனங்கள் அவனைத் தனியாக சாவடியில் அடைத்து வைத்து விட்டுப் போய்விடுகிறார்கள்.

கண : இந்தமாதிரி ஆளைத் தெரியாம அவஸ்தை படுத்தறவங்களுக்கெல்லாம் ஆயுள் தண்டனை கொடுக்கணும்னு அவசரச் சட்டம் வரக்கூடாதா? கடவுளே கடவுளே!

காட்சி 13

அம்பலவாணன் சமையல்காரன் வேஷத்தில் ஆனந்தரங்கம் வீட்டுக்குச் சென்று வேலை கேட்கிறான். முதலில் பத்மினியைத்தான் அங்கு சந்திக்கிறான்.

அம் : அம்மா.

பத் : யாரு?

அம்: ஏதாவது வேலை!

பத் : சரிதான்! வேலை கேட்கிறதுக்கு வீட்டுக்குள்ளேயே வந்துட்டியே? நல்லா இருக்கப்பா! பார்த்தா இப்படிச் சொல்றது. பார்க்கலேன்னா எதையாவது அபேஸ் பண்ணிக்கிட்டுப் போறது. போ போ! இங்கே ஒண்ணும் வேலை இல்லே.

உடனே அவன் தன் முகத்திலிருந்த ஒட்டு மீசையை எடுக்கவே அடையாளம் கண்டு கொள்ளுகிறாள் பத்மினி.

அம் : எப்படி?

பத் : என்ன தைரியம் உங்களுக்கு! அப்பா பார்த்தா என்ன ஆகும்?

அம் : ஒண்ணும் ஆகாம இருக்கத்தான் இந்த ஒட்டு மீசை.

பத்மினி தானாகவே சமையல்கார வேஷத்திலிருக்கும் அம்பலவாணனைத் தன் தகப்பனாரிடம் அழைத்துச் செல்கிறாள். அதிருஷ்டவசமாக அவனுக்கு அங்கு சமையல்காரன் வேலை கிடைத்து விடுகிறது! காபி மட்டும் போடத் தெரிந்த அம்பலவாணனுக்கு சமையல் வேலை கடினமாக இருக்கிறது. கையில் கஞ்சி கொட்டிப் புண்ணாகிவிடுகிறது.

அம் : தாயே புண்ணியவதி! நல்ல உத்தியோகம் வாங்கிக் கொடுத்தே. சாப்பிடறதைத் தவிர சமையல் சம்பந்தமாய் எனக்கு ஒரு எளவும் தெரியாதே. போதும்! போதும், இப்பவே உங்க அப்பா கிட்டே போயி உண்மையைச் சொல்லி விடறேன்.

பத் : ஐயையோ, என் கதி என்னவாகும்?

பத்மினி கஞ்சி கொட்டிய இடத்தில் எண்ணை தடவுகிறாள்.

அம் : ஆஹா! ஐயோ! வியாதியஸ்தர்களைக் கவனிக்க பொம்பளைங்களை நர்ஸாப் போட்டானே, அவன் இப்ப இருந்தா அவனுக்கு ஒரு கோயில் கட்டி, அதிலே அவனைத் தூக்கி வச்சுக் கும்பிடுவேன்.

பத் : உம்....

அம் : ஒன் கையாலே உபசரணை பண்ணிக்கிறதுக்கு என் காலைக்கூட நெருப்பிலே வச்சிக்கலாமின்னு தோணுது.

பத் : உம்.

அம் : ஓஹோ! அவ்வளவு தூரம் ஆயிப் போச்சா? அப்ப உன் அப்பா கிட்ட நான் யாருன்னு சொல்லிடுவேன்.

பத் : சொலலிக்கிங்க.

அம் ; உம், சொல்லிக்கவா? இந் தாங்க நான் யாரு தெரியுமில்ல.

இருவரும் சிரிக்கிறார்கள்.

பத் : சரிதான். இப்படியே யிருந்தா சாப்பாடு கூப்பாடுதான். மேலேயிருந்து அரிசியை எடுங்க.

அம்பலம் அரிசி எடுக்க பரணை மேல் ஏறுகிறான். அதற்குள் ஆனந்தரங்கம் கூப்பிடுகிறார்.

ஆன : ஏய் மண்ணுங்கட்டி !

பத்மினி சமையல்காரன் வேஷத்திலிருக்கும் அம்பலவாணனை உடனே ஆனந்தரங்கத்திடம் போகச் சொல்கிறாள். பத்மினி சமையலறையிலிருப்பதும் அவருக்குத் தெரிகிறது.

ஆன : அம்மா பத்மினி! பத்மினி!

பத் ; என்னப்பா?

ஆன : அங்கே என்னம்மா பண்றே?

பத் : அவருக்கு 'ஹெல்ப்'... அந்த புது சமையக்காரனுக்கு எக்தெக்த சாமான் எங்கெங்கே இருக்குனு சொல்லிக்கிட் டிருந்தேம்பா.

இதற்குள் சமையல்கார வேஷத்திலிருக்கும் அம்பலவாணன் மீசையை எடுத்துவிட்டு ஒடுகிறான். அதைப் பார்த்து பத்மினி உண்மை வெளியாகி விடுமோ என்று திகைக்கிறாள்.

பத் : ஐயையோ.

அம் : இது வேறே.

ஆனந்தரங்கத்திற்கு 'போன் கால்' வரவே அவர் ரிஸீவரை எடுத்துப் பேசுகிறார்.

ஆன: ஹலோ! யாரு? நமஸ்காரம்! மாப்பிள்ளையே அழைச்சுக்கிட்டு மத்தியானம் வறீங்களா?பலே பலே. மாப்பிள்ளையினுடைய போட்டோவைப் பார்த்தோம்! அதோட மாப்பிள்ளையை முன்னடியே பத்மினிக்குக்கூடத் தெரியுமாம். ஓஹோ அதுக்கென்ன? சீக்கிரம் கல்யாணத்தை முடிச்சிடலாம் ...

ஆனந்தரங்கம் 'மாப்பிள்ளையினுடைய போட்டோவைப் பார்த்தோம். எனக்கும் பத்மினிக்கும் பரம திருப்தி' என்று போனில் சொன்னதைக் கேட்டுவிட்ட அம்பலத்தின் மனம் ஏமாற்றத்தால் வருந்துகிறது.

அம் : வஞ்சகி !

அம்பலவாணன் மனமொடிந்து போய் பத்மினிக்கு ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு யாருக்கும் சொல்லாமல் போய்விடுகிறான். பத்மினி கடிதத்தைப் படிக்கிறாள்.

"இனிக்க இனிக்கப் பேசி என்னை ஏமாற்றி விட்டாயே மோசக்காரி. உன் கபட நாடகத்தைப் புரிந்து கொண்டேன். நீ தேர்ந்தெடுத்திருக்கும் புதிய காதலனையாவது கைவிடாது ஏற்றுக்கொள்."

பத் : ஐயோ அப்பா. அப்பா!

ஆனந் : என்னம்மா?

பத் : எங்கேயோ போய்ட்டாரப்பா. இவர்தாம்ப்பா...

ஆன : அம்பலம். தெரியும்மா.

ஆன : நீங்க பேசினதை யெல்லாம் நான் கேட்டுக்கிட்டுதானம்மா இருந்தேன். சும்மா தமாஷ் பண்ணலாமுன்னு நெனைச்சா, இந்தப்பய...

பத் : இப்ப என்னப்பா பண்ணறது?

ஆன : கவலைப்படாதேம்மா! அவன் பாலசுந்தரம் விட்டுக்குத்தான் போயிருப்பான். புறப்படு!

காட்சி 14

பாலசுந்தரம் வீட்டில் கணபதி, ராகினி இருவரும் ஓடினி மூன்று சென்று திரும்பி வராததால் எல்லோரும் கவலையே உருவாய் உட்கார்ந்திருக்கின்றனர். பார்வதி அம்பலவாணனிடம் தன் துயரத்தைச் சொல்கிறாள்.

பார் : அம்பலம்! கேத்துப் போனவங்களே இன்னும் காணுமேப்பா!

அம் : யாரு?

பால : அதான் கணபதியும், சாவித்திரியும்!

அம் : அப்படியா ?

கோத: எங்கே கூட்டிக்கிட்டுப் போயிட்டானோ, தெரியலையே?

பால: சந்திரமண்டலத்துக்கு! உனக்கென்னையா அதைப்பத்தி? அவன் பொண்டாட்டி; அவன் இஷ்டம்!

கோத; மடத்தனமா பேசாதேங் காணும்! அப்புறம எனக்கு கோபம வரபபோறது!

அம்: இந்தாங்க, நீங்க என்னுங்க இப்படியெல்லாம் பேசிக்கிட்டு!

கோத: பின்னே பாரேன். ஏம்பா ஒரு வேளை அவனுக்கு ராகினி சாவித்திரிதான்னு தெரிஞ்சு கழுத்தை கிழுத்தை நெரிச்சுப் போட்டிருப் பானோ?

அம்: உம்! நீங்கள்ளாம் நிம்மதியா இருங்க! நான் போயி அவன் எங்கே யிருந்தாலும் தேடி அழைச்சிட்டு வறேன்.

கணபதியைத் தேடிவரச் செல்லும் அம்பலவாணனை, ஆனந்தரங்கமும் பத்மினியும் அதிர்ஷ்டவசமாகச் சந்திக்கவே, தான் பரிகாசமாகச் செய்ததையெல்லாம் மன்னிக்கும்படி கேட்கிறார் ஆனந்தரங்கம் அவர்களும் கணபதியைத் தேடிவர அம்பலத்துடன் கிளம்புகின்றனர். வழியில் விபத்துக்குள்ளானாற் போல நிற்கும் கணபதின் காரைச்சுற்றி போலீஸ்காரர்கள் நிற்கின்றனர்.

அம்: ஏம்பா, ஏதாவது ஆக்ஸிடெண்டா? காரிலே வந்தவங்களுக்கு என்ன ஆச்சு?

போலீ: அதெல்லாம் அபாயம் ஒண்ணுமில்லே ஸார்! பெரியபண்ணை முதலியார் வீட்டுக்குப் போனீங் கன்ன எல்லாம் விபரமாய்த் தெரியும்.

ஏற்கனவே பெரியபண்ணை முதலியார் ஆனந்தரங்கத்துக்குப் பரிச்சயமானதால், அவரிடம் முழுவிபரம் கேட்டறிய விரைகிறார்கள். அங்கு போனதும், ராகினி காரில் மூர்ச்சையாகக்கிடந்ததாகவும் கணபதியைப்பற்றி ஒரு விவரமும் தெரியவில்லை யென்றும் முதலியார் சொல்லவே, ராகினி விஷயமாக கோதண்டத்திற்கும் பாலசுந்தரத்துக்கும் தந்தி அனுப்பப்படுகிறது.

காட்சி 15

கணபதி சாவடியில் தனியாக இருந்து கொண்டு புலம்புகிறான்.

கண: ஐயோ! என் கதி இப்படியா ஆகணும்? ராகினி! நீ என்னை எங்கெல்லாம தேடி அலையறியோ? ஐயோ, ஒரு வேளை கார் பிரேக் போடத் தெரியாமல் தவிக்கிறியோ? இருக்கும்! இருக்கும். ராகினி ராகினி! கல்யாணம் பண்ணியும் பிரம மச்சாரியா னான்? ஐயோ.

கிராமவாசிகள் சாவடிக்கு வருகின்றனர்.

கண: ராகினி!

ஒருவன்: டேய்!

கண: ராகினி!

ஒரு: டேய்!

கண: அட ஏண்டா, ஐயோ என்னய்யா?

ஒரு: ஒழுங்கா உண்மையைச் சொல்லு!

கண: ஹூம் ஹூம்! இப்ப என்ன பொய்யா சொல்லிக்கிட்டிருக்கேன்?

ஒரு: ஒழுங்கா உண்மையைச் சொல்லமாட்டே?

கண: மாட்டேன்.

ஒரு: அப்ப நீ இங்கேயே கிட!

கண: (ஆத்திரத்துடன்) இருக்கேன் போ! (கிராமவாசி கிளம்புகிறான்) ஐயோ... ஐயா! இனிமே சொல்லேயா? ராகினி! ராகினி!

ஒரு: அண்ணே! மந்திரம் பண்ணுறான்!

நாட்டாண்மை: தம்பி! போலீஸைக கூப்பிட போனவங்க என்ன ஆனுங்க?

ஒரு: அஞ்சுமைல் போயிட்டு வர வேண்டாமா?

நாட்: பெத்தவங்க வயிறு எறிய எறிய, பிள்ளைங்களைப் புடிச்சிக்கிட

டுப் போன இந்தப் பாவியை சும்மா விடக்கூடாது!

ஒரு : ஏன் அண்ணே, சப்தத்தையே காணோமே?

கிராமச்சாவடியில் தள்ளப்பட்ட கணபதி அங்கிருந்து ஒரு வழியாகத் தப்பி ஓடவே கிராமவாசிகளும் போலீஸாரும் அவனைத் துரத்துகின்றனர். அவன் அவர்களிடமிருந்து தப்புவதற்காக ஒரு குதிரைமேல் ஏறி அதைத் துரத்துகிறான். அது ஒரு சர்க்கஸ் குதிரை. ஆள் ஏறி உட்காரவே கம்பெனி கூடாரத்தை நோக்கி ஓடுகிறது அது. அதற்கிடையே அதைக் காணாத பபூன் அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறான். அது வந்ததும் தமாஷாக இருக்கவே கணபதி சர்க்கஸில் இருந்தாக வேண்டும் என்று கம்பெனியார் வற்புறுத்துகின்றனர்.

காட்சி 16

ராகினி நிலைமையைக் கண்டு கோதண்டம் திகைக்கிறார்.

கோ : ஏம்பா, ஆனந்தம்! எதனாலே இப்படி ஏற்பட்டதாம்?

ஆன : திடீர்னு ஏற்பட்ட அதிர்ச்சியினாலே இப்படி ஏற்பட்டதுன்னு டாக்டர் சொல்கிறார்.

கோத : நான் அப்பவே சொன்னேன்! கேட்டீங்களா. அந்தப் பய கணபதிதான் சாவித்திரின்னு தெரிஞ்சு பயமுறுத்திட்டு ஓடிட்டான். அட பாவிகளா! எல்லோருமாச் சேர்ந்து எம் பொண்ணை இந்த கதிக்கு ஆளாக்கிட்டீங்களே. நீங்க நல்லா இருப்பீங்களா?

பால : அட பதறாதேப்பா. உன் பொண்ணுக்கு ஒரு ஆபத்தும் வந்திடாதப்பா.

கோதண்டம் அவர் சொல்வதை லக்ஷியம் செய்யாமல் கோபிக்கிறார்.

பால : ஏம்பா அம்பலம், கணபதியைப் பத்தி ஏதாவது தகவல் தெரிஞ்சுதா?

அம் : ஒரு தகவலும் தெரியலே மாமா. எல்லா பத்திரிகைகளிலும் விளம்பரம் பண்ணியிருக்கேன்.

பார் : சாவித்திரி (சாவித்திரி அலறுகிறாள்)

ஒரு பையன் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து போட்டுவிட்டுப் போகிறான்.

கணபதியை காமெடியனாக நடிக்க வேண்டுமென்றும், அவனால் தங்களுக்கு நல்ல வசூலாகிறதென்றும் சர்க்கஸ் கோஷ்டியினர் வற்புறுத்தவே அவனால் அங்கிருந்து மீள முடிவதில்லை.

பபூ : நீங்க வெளியே போனீங்கன்னா இந்த கிராமத்து ஜனங்க அப்படியே குளோஸ் பண்ணிடுவாங்க.

கண : ஐயோ பகவானே! நம்ம இந்தியாவிலே கிராமமே இருக்கக் கூடாதுன்னு ஒரு சட்டம் வரக் கூடாதா..?

சர்க்கஸ் பார்க்க அம்பலம், ராகினி, பத்மினி மூவரும் வருகிறார்கள். நடக்கவிருக்கும் ஒரு காட்சியைப்பற்றி சர்க்கஸ் மானேஜர் அறிவிக்கிறார்.

சர்க்கஸ் மானேஜர் : மோட்டார் பைக் ஜம்ப்! மோட்டார் பைக் ஜம்ப். இந்த பலகைக்கும் அந்தப் பலகைக்கும் இடையிலிருப்பது இருபது அடி தூரம். இதைத் தாண்டப் போகிறார். எமனோடு போராடப் போகிறார். இந்த பயங்கர நிகழ்ச்சியை கவனியுங்கள்.

இந்த அறிவிப்பைக் கேட்டதும் சாவித்திரியான ராகினி மயக்கமடைந்து விடுகிறாள்.

பத் : சாவித்திரி சாவித்திரி!

அம் : சோடா சோடா.

ராகி : (மயக்கம் தெளிந்து) பத்மினி! நாம இப்பஎங்கே இருக்கோம்? நாம் ஓட்டி வந்த கார் எங்கே? அவர் எங்கே?

பத் : எல்லோரும் சௌக்யமா இருக்காங்க. நீ கொஞ்சம் மூர்ச்சையாயிருந்தே. அவ்வளவுதான். வா போகலாம்.

கணபதியின் குதிரை சவாரி நிகழ்ச்சியில் அவனைக் கண்டு

கொண்டு விட்ட மூவரும், அவன் குதிரையிலிருந்து தவறிவிழுந்ததும் அவனைத் தங்களுடன் அழைத்துச் செல்லக் கிளம்புகிருர்கள்.

பண்ணை முதலியார் வீட்டுக்கு கணபதி கொண்டுவரப் படுகிருன். அவனுக்கு வைத்தியம் செய்ய டாக்டர் வருகிருர்.

அம் : டேய்! 89680

கண : அம்பலம்!

டாக் : சூடா கொஞ்சம் காப்பி!

அம் : காப்பி.

[illegible] காப்பி கொண்டுவரச் செல்கிருள்.

கண : அப்பா! நீங்க எப்ப வந்திங்க?

பால : எல்லாம் அப்புறம் பேசலாம், சும்மா இருப்பா.

கண : அம்மா, ஹலோ ராகினி!

டாக் : டேய்! இன்னும் ஒரு மாசத்துக்கு அந்த கையைத் தூக்கக் கூடாது.

கண : அட பாவி. நம்ப இந்தியாவிலே டாக்டர்களே இருக்கக் கூடாதுனு..

அம் : ஒரு சட்டம் பண்ணுவோம்! இப்ப சும்மா இரு!

டாக் : என்ன ஸார் இது?

அம் : ஒண்ணுமில்லே சார். அவனுக்குக் கொஞ்சம சட்டப் பைத்தியம்.

கண : அடடே, வாங்க மாமா!

கோத : ஆமாப்பா!

கண : வாங்க அத்தே .ராகினி! அவுங்க யாரு தெரியுமோ, அவுங்க தான எங்க மாமா. எங்க அத்தை.

ராகி : ஓ ஐஸி! ஹௌ டு யூ டு?

கோத ; என்னது?

அம் : ஒண்ணுமீல்லீங்க! இங்கிலீஷ் பாணியிலே உங்களை அறிமுகப் படுத்தறு.

ஒரு மாதிரியாக அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து மன அமைதியுடன் இருக்க அப்போது தான் முடிகிறது.

காட்சி 17

பாலசுந்தரத்திடம் பத்மினி கல்யாண விஷயமாகப் பேசுகிருர். ஆனந்தரங்கம் ‘மாப்பிள்ளை யார்’ என்று அவர் கேட்கும்போது, அம்பலம் தானுகவே ‘மாப்பிள்ளை’ என்று சொல்லிக்கொள்ளுகிருன். கணபதிக்கும் விவரம் தெரிகிறது. அம்பலம்-பத்மினி கல்யாணம் விமரிசையாக நடக்கிறது.

கண : (ராகினிதேவியிடம்) ஹலோ டார்லிங் ராகினி!

ராகி : இதோ வந்துட்டேன்.

கண : ஆ சாவித்திரியா நாகரிகத்தின் சிகரமாகக் காக்ஷியளித்த ராகினி சாவித்திரியா!

சாவி : ஆமாம். உங்களாலே வெறுக்கப்பட்ட அந்தப் பட்டிக்காட்டுப் பெண் சாவித்திரி நானதான். இதோ நீங்கள் பூஜித்து வரும் ராகினி.

கண : என்ன, வெறும் வேஷத்தையும் ஆடம்பரத்தையுமா இத்தனை நாள் நாகரீகம்னு நெனைச்சுக் கிட்டிருந்தேன்.

சாவி : ரெண்டுபேர்லே உங்களுக்கு யார் தேவை.

கண : சாவித்திரி. நீ தான் எனக்குத் தேவை. உள்ளத்திலே அழகு நிறைந்த உண்மை நாகரிகப் பெண்ணுகிய இந்த சாவித்திரி தான் எனக்குத் தேவை. நீ எனக்கு மனைவி மட்டுமல்ல. போலி நாகரீகத்திலே பஞ்சடைந்து போயிருந்த என் கண்களைத் திறந்துவிட்ட குரு.

சாவி : இத்தனை நாள் உங்களை ஏமாத்தினதுக்கு என்னை மன்னிச்சுடுங்க. (அவன் காலில் விழுகிருள்.)

கண ; உன் மனசை புண்படுத்திட்டேன், நீ தான என்னை மன்னிக்கணும சாவித்திரி,

கணபதி பிரம்மச்சாரியாக வாழ முயன்ருன். அதில் தோல்வியுற்று கல்யாணம் செய்து கொண்டான். கிரகஸ்தனுக வாழ ஆசைப்பட்டான்; ஆனல் ‘கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி’யாக வாழ நேரிட்டது. நல்லவேளை! முடிவு சுபம்தான்! அவன் தன் மனைவியோடு வாழ முடிகிறது.

மிகச் சிறந்த
மிட்டாய்கள்
Babu's
Babu's
HIGH CLASS
SWEETS
பாபு கன்பெக்ஷனரி - மதறாஸ் ௨௧.
ஸ்டாக்கிஸ்ட்ஸ் & டிஸ்டிரிபியூட்டர்ஸ்
ஜனதா ஸ்டேஷனரி, S. M. தெருவு, கோழிக்கோடு.

REGD. NO. M. 4523 PESUM PADA

அழகிய ஆபரணங்களுக்கு-

P.A. ராஜு செட்டியார் & பிரதர்

கோயமுத்தூர்

தந்தி: ராஜா · போன்: ௨௬௮ · தபால்பெட்டி: 139